விலை : 20.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 30 வெள்ளிக்கிழமை (14.07.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 207

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு தரித நபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# சித்திரவதைகள் தொடர்கிறது

## ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தி யஸ்மின் சூக்கா இன்று அறிக்கை



(ஜெனிவா)

இலங்கையில் தற்போதும் அரச படையினரின் சித்திரவதையும், வன்முறையும் தொடர்கிறது என்பதை ஆதாரங்கள் அடிப்படையில் உறுதிப்படுத்தும் புதிய அறிக்கை ஒன்று உண்மை மற்றும் நீதி திட்டத்தின் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்காவால் இன்றைய தினம் லண்டனில் வெளியிடப்படவுள்ளது. (23-ம் பக்.)

முகத்தை மறைத்த குழுவால்

## தந்தை, மகன் மீது கொடூர வாள்வெட்டு!

(மல்லாவி)

மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள யோகபுரம் மத்தி கிராமத்தில் உள்ள வீடு ஒன்றிற்கு மோட்டார் சைக்கிளில் முகத்தை மறைத்தவாறு வாள்களுடன் சென்ற மூவரடங்கிய குழு குடும்பஸ்தரின் தலை உட்பட பல இடங்களில் வாளால் வெட்டியதுடன் அவரைக் காப்பாற்ற போராடிய அவரது 15 வயதுடைய மகனையும் வாளால் வெட்டி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்த சட்டவிரோத 23

## 135-வது நாளாக தொடரும் நிலமீட்புப் போராட்டம்

அடுத்த வாரம் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(குருமன்காடு)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்களின் தொடர் போராட்டம் நேற்றுடன் 135 ஆவது நாளை எட்டி தொடர்ந்து வருகின்றது. 138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி குறித்த தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தமது சொந்த நிலத்தில் கால் பதிக்கும் எண்ணத்தோடு கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த தமது தொடர் போராட்டத்தை தீர்வு கிடைக்கும் வரை தாம் முன்னெடுக்கப்போவதாக மக்கள் உறுதியாகத் தெரிவித்து வருகின்றனர். 24

## மகாநாயக்க தேரர்கள் குழு வடக்கு - கிழக்குக்கு வருகிறது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக அஸ்கிரிய மற்றும் மல்வத்துபீட மகாநாயக்க தேரர்கள் குழு ஒன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு விரைவில் வருகை தரவுள்ளனர்.

குறித்த மாகாணங்களுக்கான விஜயத்தை மேற்கொள்ள பௌத்த துறவிகள் எதிர்பார்த்திருப்பதாக, அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் சாஸ்த்ரபதி பேராசிரியர் மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

பௌத்த தேரர்கள் குழுவினரின் விஜயத்தினை அரசுக்கு அறிவித்த பின்னரே பயணம் மேற்கொள்ளவுள்ளதாகவும் இந்த விஜயத்தின் போது நிலஅபகரிப்பு, அரசியல் நிலைமை மற்றும் காடழிப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார். (செ-9)

## இலங்கை - பங்களாதேஷ் உறவு பரஸ்பர நன்றி பாராட்டு

(கொழும்பு)

இலங்கைக்கும் பங்களாதேஷுக்கும் இடையில் நிலவும் எல்லையற்ற உறவு காரணமாக இலங்கைக்காக தமது நாடு ஆற்றமுடியாத விடயங்கள் எதுவுமில்லை எனவும், எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கை எதிர்பார்க்கும் உதவியை செய்வதற்கு தமது நாடு தயாராக இருப்பதாக பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் அபுல் ஹஸன் மகமூத் அலி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித்தார்.

பங்களாதேஷுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ அரச விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுப் பிற்பகல் டாக்கா நகரில் உள்ள ஷன்னரகன் ஹோட்டலில் பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சரை சந்தி 23

## இந்திய மீனவர்கள் 7பேர் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 07 பேர் நேற்று முன்தினம் 24

## தலைக்கவசம் தயாரிப்பு; புதிய ஒழுங்கு விதிகள்

(கொழும்பு)

மோட்டார் சைக்கிள் தலைக்கவசத்தை தயாரிக்கும் விதம் தொடர்பிலான, புதிய ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட்டுள்ளதாக, சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கூறியுள்ளார்.

முகத்தை முழுவதும் மறைக்கும் தலைக்கவசத்தை அணிய, பொலிஸார் விதித்துள்ள தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணையின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உருவாக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் புதிய ஒழுங்கு விதிகள் குறித்து ஆராய்ந்து தகவலளிக்க காலஅவகாசம் வழங்குமாறு, முறைப்பாட்டாளர் தரப்பு சட்டத் 23

## ராஜித, எஸ்.பியின் ஊழல்கள் விரைவில் அம்பலமாகும்!

அரசை கடிந்து கொள்கிறது ஜே.வி.பி

(கொழும்பு)

அமைச்சர்களான ராஜித சேனாரத்ன மற்றும் எஸ்.பி.திசாநாயக்க ஆகியோரின் ஊழல் மோசடிகள் அம்பலமாகும் என்ற அச்சத்திலேயே ஊழல் மோசடி விசாரணை செயலகத்தை மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹெந்துநெத்தி, அமைச்சர் ராஜித சேனாரத்ன அச்சத்தில் உறைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். 23

உள்ளே....
• மக்கள் கருத்து
• தமிழர் தலைவிதி

## அமை. அமரவீர இன்று விஜயம்

(கரணவாய்)

பருத்தித்துறை துறைமுக அபிவிருத்தி தொடர்பில் அப்பகுதி மீனவர்களுடன் கலந்துரையாடுவதற்காக மீன்பிடி அமை 23

## டெங்கு தாக்கம்; 230 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்துள்ள டெங்கு நோய் தாக்கம் காரணமாக இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 24

## தபால் ஊழியர்கள் மீளவும் போராட்டம்!

(கொழும்பு)

தபால் பிரச்சினைக்கு தீர்வு முன்வைக்கப்படாவிடின் மீண்டும் போராட்டத்தில் ஈடுபடபோவதாக அரசாங்கத்திற்கு தபால் தொழிற்சங்க சம்மேளனம் எச்சரிக்கை விடுத்து 24

## ஜெனரல் தயாவிடம் மோசடி விசாரணை

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி ஓய்வு பெற்ற ஜெனரல் தயா ரத்நாயக்க 24

பங்களாதேஷ் சென்றடைந்த

## ஜனாதிபதி மைத்திரிக்கு கோலாகல வரவேற்பு



24

## பொருத்து வீடு; தடை கோரி வழக்குத் தாக்கல்

(கொழும்பு)


வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொருத்து வீடுகளை அமைக்கும் அரசாங்கத்தின் திட்டத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இன ஐக்கியத்துக்காக உழைத்த பேராசிரியர் தீரானந்த தேரர் மறைவு



பேராசிரியர் வணக்கத்துக்குரிய ஹறங்குராங்கெத்த தீரானந்ததேரரின் திடீர் மறைவு கல்வியாளர்களின் மத்தியிலும், அவரை அறிந்த தமிழர்களின் மத்தியிலும் இன்று துன்பம் நிறைந்த நிகழ்வாகக் காணப்படுகிறது.

சீனாவில் நடைபெற்ற கல்விசார் நிகழ்வொன்றில் கலந்துவிட்டு தாயகம் திரும்ப இருந்த நிலையில் மரணம் அவரைத் திடீரென அரவணைத்துக் கொண்ட துன்பகரமான நிகழ்வை பேராதனைப் பல்கலைக்கழக அன்பர்கள் எமக்கு உடனடியாகத் தெரியப்படுத்தி இருந்தனர்.

இப்பகிர்வுக்கு அமரர் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவராக இருந்த காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையுடன் புதிதாக ஏற்படுத்திக் கொண்ட நல்லுறவும் ஒரு காரணமாகும்.

அமரர் தனது ஆரம்பக் கல்வியை கண்டி பிலிமத்தலாவை பிரிவேனக்கல்லூரியில் கற்று 1988இல் இளங்கலைமானிப் பட்டத்தையும் 1998இல் முதுகலைமானிப் பட்டத்தையும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பெற்று அப்பல்கலைக்கழகத்திலேயே தன்னை ஆசிரியராக இணைத்துக் கொண்டவர்.

பின்பு தனது கலாநிதிப் பட்டத்தை இந்தியாவில் புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களில் ஒன்றான ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தலைசிறந்த வரலாற்று அறிஞர்களில் ஒருவரான பேராசிரியர்றோமிலா தாக்பர் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் பெற்றவர். இதன் மூலம் இலங்கையின் புலமை மிக்க வரலாற்று அறிஞர்களில் ஒருவராக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். புராதன இலங்கையின் அரசியல் வரலாற்றை தனது ஆய்வுப் பின்புலமாகக் கொண்டிருந்த அமரர் தனது புலமைமிக்க பல படைப்புக்களால் பலரின் பாராட்டை பெற்றவர். சமகால இன முரண்பாடுகளை வெளிப்படையாக எதிர்த்த அமரர் வரலாற்றுக் கல்வியூடாக இனங்களுக்கிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தலாம் என உறுதியாக நம்பினர்.

அதைப் பேச்சிலும் எழுத்திலும் வலியுறுத்திய அமரர் பிறரது ஆக்கங்களும் அவ்வாறே இருக்க வேண்டுமென வலியுறுத்தி வந்தவர். இதற்காக பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் சிங்கள மாணவர்களைப் போல் தமிழ் மாணவர்களும் வரலாற்றை சிறப்பு பாடமாக கற்பதற்கு தமிழ்மொழி மூலமான வரலாற்றுக் கல்விக்கு புத்துயிர் அளித்ததுடன். தனது துறை ஆசிரியர்களின் மேற்பட்டப்படிப்பு ஆய்வுகள் வரலாற்று ரீதியாக தமிழ், சிங்கள மக்களிடையே இருந்த ஐக்கியத்தை மக்களுக்கு வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும் எனவும் ஊக்கப்படுத்தி வந்தவர்.

1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒரு வளாகமாக ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தமிழ் மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் வரலாறு கற்ற பல்கலைக்கழகமாகப் பேராதனைப் பல்கலைக்கழகம் காணப்பட்டது.

அங்கு வரலாற்றை சிறப்புப் பாடமாகக் கற்று ஆசிரியர்களாக இருந்தவர்களில் பலர் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையின் முன்னோடி ஆசிரியர்களாக இணைந்து கொண்டனர். ஆனால் 1980களுக்குப் பின்னர் இந்நிலை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முற்றிலுமாக மாற்றமடைந்தது.

வரலாற்று சிறப்புக்கல்வி பொதுக் கலையாக மாறியது. தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாக வீழ்ச்சியடைந்து தமிழ் மொழிப் பிரிவு மூடும் நிலைக்கு வந்தது. இந்நிலையிலே வரலாற்றுத்துறையின் தலைவராகப் பதவியேற்ற ஹறங்குராங்கெத்த தீரானந்த தேரர் பேராசிரியர் சோமதிலக அவர்களுடன் இணைந்து தனது காலத்தில் தமிழ்மொழி மூலம் வரலாற்றை சிறப்பு பாடமாக மீண்டும் கொண்டு வருவதற்கு அரும் பாடுபட்டார்.

இதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையுடன் உறவை ஏற்படுத்தி இங்கிருந்து வெளியேறிய பட்டதாரிகளுக்கு தனது துறையில் நியமனம் வழங்கினார். இதன்மூலம் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது. இந்த மாற்றங்களை அழகு பார்த்துப் பெருமை கொண்ட அவர் இன்று பலரை கலங்க வைத்துச் சென்றுள்ளார்.

வரலாற்றுக் கல்வியூடாக இலங்கை மக்களிடையே இன ஐக்கியத்தை, நல்லெண்ணத்தை உருவாக்குவதை தனது பணியாகக் கொண்டு செயற்பட்ட அமரரின் இழப்பிற்கு யாரிடம் ஆறுதல்கூறுவதென எண்ணும் போது அதை நமக்கு நாமே தெரிவிக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**பேராசிரியர்**
**ப.புஸ்பரட்ணம்**
**(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)**

**இலங்கையின் இன ஐக்கியத்துக்காக அரும்பாடுபட்டவர்களில் ஒருவரான பேராசிரியர் ஹறங்குராங்கெத்த தீரானந்த தேரர் நேற்றுக் காலமானார். அவரின் மறைவையொட்டி இப்பிரசுரம் வெளியிடப்படுகிறது**


## யா/புற்றளை மகா வித்தியாலயம்
புலோலி

## வருடாந்த பரிசளிப்பு விழா - 2017

இடம் : பாடசாலை திறந்த கலையரங்கு
காலம் : 2017.07.15 (சனிக்கிழமை)
நேரம் : காலை 8.30 மணி

தலைவர்
திரு.ஆறுமுகம் சிவநாதன் (அதிபர்)
பிரதம விருந்தினர்
பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா
(B.Sc (Hons) Maths, Dip.in.Edu (OUSL), Ph.D (U.K)
பீடாதிபதி, தொழில்நுட்ப பீடம், யாழ்.பல்கலைக்கழகம்
பரிசில் வழங்குபவர்
திருமதி சிவராணி சிறிசற்குணராசா
(சிரேஷ்ட விரிவுரையாளர், மொழியியல் ஆங்கிலத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*
(C-9066) பாடசாலைச் சமூகம்


## மரண அறிவித்தல்

திருமதி
**ஈஸ்வரதேவி சிவசுப்பிரமணியம்**



தோற்றம்: 28.06.1946 மறைவு: 13.07.2017

அல்வாய் வட்டுவத்தையைப் பிறப்பிடமாகவும் புத்தூர் சிவன்கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரதேவி சிவசுப்பிரமணியம் நேற்று (13.07.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான விசுவநாதர் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் கிருபாகரன் (U.K), யோகேஸ்வரன் (முன்னாள் பணியாளர் ப.நோ.கூ.சங்கம், அச்சுவேலி), காலஞ்சென்ற சசிகரன் மற்றும் கேதீஸ்வரன் (பாப்பன் - சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், கோப்பாய்), சசிகலா (U.K), ஹேமகலா (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச சபை தலைமைக் காரியாலயம், புத்தூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இன்பவேணி (ராதா - U.K), குமாரதேவி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), வெண்ணிலா (கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க.பா), சுதாகரன் (U.K), ஞானபாஸ்கரன் (விவசாயப் போதனாசிரியர், தர்மக்கேணி) ஆகியோரின் மாமியும் டிக்சன் (U.K), கோகுல் (U.K), தனுஸ் (U.K), கிசானி (யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), கிரிசன் (யா/தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), செந்தூரி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஹரீசன் (யா/இந்துக் கல்லூரி), நீரஜா (U.K), ஜனுயன் (U.K), யாதவி (U.K), சங்கவி, சாம்பவி ஆகியோரின் பேர்த்தியும் துரைராசா (ஓய்வுபெற்ற மருந்தாளர்), தேவதாசன், சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரியும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற இராசமணி, காலஞ்சென்ற தணிகாசலம், நவரத்தினராசா (ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கிந்துசிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன்கோவிலடி,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்

(9793)


உ
சிவமயம்
செல்லையா பாலச்சந்திரனின்
கந்தமடம் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத பண்டிதர்

## நூல் வெளியீட்டு விழா

காலம் : 15.07.2017 சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 3.00 மணி
இடம் : யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரக் கல்லூரி விவேகானந்தர் மண்டபம்

தலைமை
பேராசிரியர் கலாநிதி மா.வேதநாதன்
(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

விழா நிகழ்ச்சிகள்
மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம், வரவேற்புரை
ஆசிரியர் பா.பாலமுரளி அவர்கள்
(யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)
ஆசியுரை
நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
தலைமையுரை
பேராசிரியர் கலாநிதி மா.வேதநாதன் அவர்கள்
(தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
அறிமுக உரை
சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள்
வாழ்த்துரை
நாரந்தனையூர் ஆ.சபாரத்தினம் (M.A) அவர்கள்
திருமதி வாசுகி தவபாலன் அவர்கள்
(அதிபர், யா/வைத்தீஸ்வரக் கல்லூரி)
வெளியீட்டுரை
செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்
முதற்பிரதி பெறுவோர்
திரு.க. சிவகுமார் அவர்கள்
(தலைவர், வண்ணை காமாட்சி அம்மன் தேவஸ்தானம்)
திரு.ச. சிவகுமாரன் அவர்கள்
(சிவன் மோட்டோர்ஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம்)
திரு.குமாரசாமி கங்கை வேணியன் அவர்கள்
(வேணி களஞ்சிய உரிமையாளர், யாழ்ப்பாணம்)
ஆய்வுரை
சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்கள்
(ஓய்வுநிலை விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)
ஏற்புரை
நூலாசிரியர்

அனுசரணை: கனடா வாழ்.ஐ.கரிகரன் சந்திரகுமாரி குடும்பம்

*விழாவுக்கு அனைவரையும் பேரன்புடன் இருகரம் கூப்பி அழைக்கின்றோம்*

அகில இலங்கை திருமுறை மன்றம்
பொருளாளர் க.கு.க. சிவபாலன்
(C-9062)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பை ஜனாதிபதி நிறைவேற்றியாக வேண்டும்-ஹேரத்

## "காணாமல் ஆக்கப்படுதல் குற்றவியல் குற்றம்"

(கொழும்பு)

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் புதிய அரசியலமைப்பை ஜனாதிபதி நிறைவேற்றியாக வேண்டும் என ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் காணாமல் ஆக்கப்படுவதை குற்றவியல் குற்றமாக கருதவேண்டும் எனவும் அக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஜே.வி.பியின் பிரசார செயலாளரான விஜித ஹேரத் கருத்து தெரிவிக்கையில்,

அராஜக ஆட்சிக்கு முடிவு கட்ட ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்துவார் என உறுதி வழங்கிவிட்டே பொது வேட்பாளராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன களமிறங்கினார்.

இதற்காக புதிய அரசியலமைப்பு இயற்றப்படும் எனவும் அவர் கூறினார். நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிப்பு குறித்தும் அவரால் பல தடவைகள் உறுதிமொழி வழங்கப்பட்டன. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலமும், சர்வஜன வாக்கெடுப்பும் அவசியம்.

எனவே, அன்று அப்படியொரு வாக்குறுதியை வழங்கிவிட்டு இன்று இழுத்தடிப்பு,இருட்டடிப்பு செய்வது ஏற்புடையதல்ல. மக்களுக்கு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றியே ஆகவேண்டும்

அதேவேளை, முன்னாள் திருடர்களையும், தற்போதைய திருடர்களையும் அரசு பாதுகாத்து வருகின்றது எனவும் அவர் சாடினார். (இ-7)


## வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை
## Special Treatment for Rheumatism

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

**சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


# தமிழினத்தை வழிநடத்திய தலைமைகளை மதியுங்கள்

## ஆனந்தசங்கரி வேண்டுகோள்

தமிழினத்தை வழிநடத்தி வந்த தலைமைகளை மதியுங்கள், தற்போதுள்ள தலைவர்களை போன்று அவர்களை மறந்து விடாதீர்கள் என தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி இளையோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் அ.அமிர்தலிங்கம் மற்றும் அமரர் யோகேஸ்வரன் ஆகியோரின் 28 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நேற்றைய தினம் யாழிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் உரையாற்றுகையில் ,

அமரர் அமிர்தலிங்கத்தின் இழப்பை ஈடு செய்ய முடியாது. அவரது மரணம் ஏற்கக் கூடிய மரணம் அல்ல.

அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவராக இருந்தார். மக்கள் தமது பலத்தை காட்டியதால் அவர் எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு வந்தார்.

தற்போதுள்ள எதிர்க்கட்சி தலைவரால் பல விடயங்களை செய்ய முடியும். அவர் ஆட்சியில் உள்ளார் ஆனால் சாதிக்க கூடிய விடயங்களை கூட சாதிக்க முடியாது உள்ளார். கிளிநொச்சியில் பல நாட்கள் போராடும் மக்களை சந்தித்து அவர் கூறிய வார்த்தைகள் யாருக்கும் கோபத்தை உருவாக்கும்.

எமக்காக உயிரை அர்ப்பணித்தவர்களை நினைவு கூற வேண்டும். எத்தனையோ தியாகம் செய்தவர்கள் மத்தியில் ஒரு சிலர் திடீரென வந்துவிட்டு தாண்டவம் ஆடுவதை பார்க்க முடியவில்லை.

அன்று ஒரு கட்சியாக இருந்ததால் அமிர்தலிங்கத்துக்கு பதவி கிடைத்தது. இன்று போல் பிரிந்து பல கட்சிகளாக இருக்கவில்லை. அவரது மனைவியும்பல சேவைகளை இனத்துக்காக செய்தார்.

இன்றைய இளைஞர்களிடம் ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன். கடந்த காலத்தில் எம்மை வழிநடத்திவந்த தலைவர்கள் பெண் தலைமைகளை மதியுங்கள் அவர்களை பற்றி தெரியாத விடயங்களை கேட்டு அறியுங்கள். இப்போதுள்ள தலைவர்களை போன்று அவர்களை மறந்து விடாதீர்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# இரத்தம் சிந்தவைப்பதில் பௌத்த பிக்கு தீவிரம்!



வாழைச்சேனை வெலிகந்தை - புனானையில் 400 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்படும் ஆசியாவின் மிகப்பெரிய பள்ளிவாசலை ஒரு எல்லைக்குள் மட்டுப்படுத்தாவிட்டால், ஒரு இனம் இன்னொரு இனத்தோடு மோதி இரத்தம் சிந்தும் நிலை ஏற்படுமென மட்டக்களப்பு மங்களராமய விஹாரையின் விஹாராதிபதி அம்பிட்டியே சுமனரத்ன தேரர் எச்சரித்தார்.

மங்களராமய விஹாரையில் நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு எச்சரித்தார்.

குறித்த பள்ளிவாசல் தொடர்பாக நாட்டின் தலைவர்கள், உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்திற்கு முகங்கொடுத்த மக்கள் இன்று தனிமையான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். கரையோரப் பகுதியான அறுகம்பை தொடக்கம் மூதூர் வரைக்கும் ஏதாவது ஒரு தமிழ் நகரம் இருக்கின்றதா என கேள்வியெழுப்பியுள்ளார்.

தமிழ் மக்களது காணிகள் அபகரிக்கப்பட்டு, அவர்கள் காடுகளிலும் வசதியற்ற பிரதேசங்களிலும் வாழ்ந்து வருவதாக குறிப்பிட்ட தேரர், இம் மக்களின் உரிமை தொடர்பாக கதைப்பதற்கு சிங்கள மக்களுக்கு உரிமை உள்ளதென மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சைட்டத்துக்கு எதிராக தேங்காய் உடைப்பு

தொழில்நுட்பத்துக்கும் மருத்துவத்துக்குமான தெற்காசிய நிறுவகம் (சைட்டம்) இரத்துச் செய்யப்பட வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, ஹிக்கடுவை - சீனிகம ஆலயத்தில் நேற்று முன்தினம் சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டன.

காலி மாவட்ட பல்கலைக் கழக மாணவர்களின் பெற்றோர் சங்கத்தால் இந்த வேண்டுதல் நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. (இ-7)

# போதைப்பொருளை ஒழித்துக்கட்ட ஒத்துழைக்க வேண்டும்-ஜனாதிபதி


போதைப்பொருளை ஒழித்துக் கட்டுவதற்கான கூட்டு நிகழ்ச்சித் திட்டங்களில் தென்னாசியத் தலைவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார். போதைப்பொருள் பாவனை அதிகரித்துவருவது பிராந்தியத்தில் இளைஞர்கள் மத்தியில் பாரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது என்றும் போதைப்பொருள் கடத்தப்படுவதைத் தவிர்ப்பது தொடர்பில் தொடர்ச்சியான கவனமும் விழிப்புணர்வும் அவசியம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சார்க் நாடுகளின் சட்டமும் ஒழுங்கும் (உள்நாட்டலுவல்கள்) அமைச்சர்களின் எட்டாவது கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்துள்ள பிரதிநிதிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தித்தனர். இச்சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

போதைப்பொருள் பிரச்சினை சமூகத்தில் ஈடுசெய்ய முடியாத தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் அதிகாரிகள் மீது போதைப்பொருள் கடத்தல் குழுவொன்று மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் ஒரு அதிகாரியும் 12 வயது பிள்ளையும் கொல்லப்பட்டுள்ளதுடன், மற்றுமொரு பிள்ளை காயமடைந்தது. இந்த துப்பாக்கிச் சூட்டில் பலியான அந்தப் பிள்ளையின் குடும்பத்தை நான் சந்தித்தேன். காயமடைந்த பிள்ளை அதன் துப்பாக்கிச்சூட்டு காயத்தை என்னிடம் காட்டியது. உண்மையில் அது எனக்கு மிகவும் உணர்வுபூர்வமான ஒரு சந்தர்ப்பமாக இருந்தது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அச்சம்பவத்தில் உயிரிழந்த பிள்ளையின் பெற்றோருக்குச் சொந்தமான கடைக்கு ஏற்பட்ட சேதம் குறித்து வினவியபோது சுமார் 150,000 என அப்பிள்ளையின் தந்தை தெரிவித்தார். அவர்களுக்கு நான் உடனடியாக 1.5 மில்லியன் ரூபாவை நட்டஈடாக வழங்கினேன். நட்டஈடு வழங்கப் பட்டபோதும் பணம் ஒரு போதும் இறந்த அந்த பிள்ளையின் உயிரைக் கொண்டு வந்துவிடாது என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

## குற்றப்பத்திரிகையில் திருத்தம் செய்யவும்



முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப் பத்திரிகையில் திருத்தத்தை மேற்கொள்ள அனுமதிக்குமாறு, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு கோரியுள்ளது. அரச நிதியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நேற்று இந்த வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை, குறித்த ஆணைக்குழு சார்பில் ஆஜரான சட்டத்தரணி இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளார். (இ-7)

# இராணுவ முகாமில் ஆயுதங்கள் மாயம்

அநுராதபுரம், கலத்தேவ பகுதியில் அமைந்துள்ள இராணுவத்தின் கவசப் படைப்பிரிவிலுள்ள ஆயுதக் களஞ்சியசாலையிலிருந்து, ஆயுதங்கள் சில மாயமாகியுள்ள நிலையில், இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த முகாம் அதிகாரி ஒருவரால் மேற்கொள்ளப் பட்ட முறைப்பாட்டுக்கமைய, அநுராதபுரம் பொலிஸ் தலைமையகத்தின் குற்ற விசாரணைப் பிரிவினர் மற்றும் பொலிஸ் மோப்பநாய்ப் பிரிவினர் இணைந்து, இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, குறித்த முகாமின் கட்டளையதிகாரியின் ஆணைப் பிரகாரம், முகாமைவிட்டு எந்தவொரு வீரரோ அல்லது அதிகாரியோ வெளியேறுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முகாமின் ஆயுதக் களஞ்சியசாலைக் கதவை உடைத்து, அங்கிருந்த இரு துப்பாக்கிகள் களவாடப்பட்டுள்ளன என்று, இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், துப்பாக்கித் தோட்டாக்கள் எவையும் காணாமற்போகவில்லை என்றும், கடந்த மாதம் 28 ஆம் திகதியன்றே, குறித்த முகாமிலிருந்து இறுதியாக ஆயுதங்கள் வெளியே எடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விம்பிள்டன் தொடரில் இறுதிப் போட்டியில் முகுருசா - வீனஸ் வில்லியம்ஸ் மோதல்



விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீராங்கனை முகுருசா மற்றும் வீனஸ் வில லியமஸ் ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. நேற்று பெண்களுக்கான ஒற்றையர் அரையிறுதிப் போட்டிகள் நடைபெற்றது.

முதல் அரையிறுதிப் போட்டியில் 14ஆம் நிலை வீராங்கனையான ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த முகுருசா, ஸ்லோவாகியாவின் மெக்டாலேனா ரிப்பாரிகோவாவை எதிர்கொண்டார.

அனுபவ வீராங்கனையான முகுருசாவின் ஆட்டத்திற்கு தர்நிலை பெறாத ரிபாரிகோவாவினாவால் ஈடுகொடுக்க முடியவில்லை. எந்த வித போராட்டமின்றி முகுருசா 6-1, 6-1 என எளிதில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இறுதிப் போட்டிக்குள் நுழைந்த தன் மூலம் இரண்டு முறை விம்பிள்டன் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய முதல் ஸ்பெயின் வீராங்கனை என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

மற்றொரு பெண்கள் ஒற்றையர் அரையிறுதி போட்டியில் அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ், இங்கிலாந்தின் ஜோஹன்னா கோன்டாவை வீழ்த்தி இறுதி போட்டிக்கு முன்னேறினார்.

இந்த தொடரின் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதி போட்டியில் இங்கிலாந்தின் ஜோஹன்னா கோன்டாவும், அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸும் மோதினர். கடந்த 33 ஆண்டுகளுக்கு பிறகு முதல்முறையாக காலிறுதி போட்டிக்கு ஜோனா கோண்டா தகுதிபெற்றார். அவர் தனது திறமையான



ஆட்டத்தால் அரையிறுதிக்குள் நுழைந்தார்.

இந்த வருடம், இங்கிலாந்தை சேர்ந்த ஒரு பெண் விம்பிள்டன் கோப்பையை வெல்வார் என அந்நாட்டு ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்த்தனர். ஆனால், அரையிறுதி போட்டியில் வீனஸ் வில்லியம்ஸ் 6-4, 6-2 என்ற செட் கணக்கில் எளிதாக வெற்றி பெற்றார். இதன்மூலம் இங்கிலாந்து ரசிகர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர்.

விம்பிள்டன் பெண்கள் ஒற்றையர் இறுதிபோட்டியில் வீனஸ் வில்லியம்ஸ் - முகுருசா சனிக்கிழமை பலப்பரீட்சை நடத்துகிறார்கள்.

# விம்பிள்டன் டென்னிஸில் பெடரர் மீண்டும் அரையிறுதிக்கு தகுதி; ஜோகோவிச் விலகல்



விம்பிள்டன் டென்னிஸ் தொடரில ரோஜர் பெடரர் 12-வது முறையாக அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ளார். முன்னணி வீரரான ஜோகோவிச் காயம் காரணமாக விலகினார்.

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டன் நகரில் நடைபெற்று வருகிறது.

7 முறை சம்பியனும், உலகின் 3ஆம் நிலை வீரருமான ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) கால்இறுதியில் 6-வது வரிசையில் இருக்கும கனடா வீரர் ரோனிக்கை எதிர்கொண்டார்.

இதில் பெடரர் 6-4, 6-2, 7-6 (7-4) என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று அரைஇறுதிக்கு தகுதி பெற்றார். அவர் விம்பிள்டன் போட்டியில் 12-வது முறையாக அரை இறுதிக்கு முன்னேறி உள்ளார். மேலும் அதிக வயதில் தகுதி பெற்ற 2-வது வீரர் என்ற பெருமையை பெடரர் பெற்றார்.

அவருக்கு தற்போது 35 வயதாகிறது. இதற்கு முன்பு 1974ஆம் ஆண்டு சென்ரோஸ்வெல் (அவுஸ்திரேலியா) என்பவர் தனது 39-வது வயதில் விம்பிள்டன் அரை இறுதியில் நுழைந்து இருந்தார்.

ரோஜர் பெடரர் அரை இறுதியில் 11ஆம் நிலை வீரர் தாமஸ் பெர்டிச்சை (செக்குடியரசு) சந்திக்கிறார். அவர் இரண்டாம் நிலை வீரர் ஜோகோவிச்சுக்கு எதிரான கால்இறுதியில் முதல செட்டை 7-6 (7-2) என்ற கணக்கில் வென்றார்.

2-வது செட்டில் 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்த போது ஜோகோவிச் காயத்தால்



விலகினார். இதனால் பெர்டிச் வென்றதாக அறிவிக்கப்பட்டது. அவர் 2-வது முறையாக அரை இறுதிக்கு முன்னேறி உள்ளார்.

மற்றொரு அரை ஆட்டத்தில் சிலிச் (குரோஷியா) - சாம்குயரி (அமெரிக்கா) மோதுகிறார்கள். சாம்குயரி கால்இறுதியில் நம்பர் வன் வீரரும், நடப்பு சம்பியனுமான ஆன்டி முர்ரேயை அதிர்ச்சிகரமாக வீழ்த்தி இருந்தார்.

# ராகுல் டிராவிட் நிரந்தர ஆலோசகரில்லை என்கிறார் பி.சி.சி.ஐ அதிகாரியொருவர்



ராகுல் டிராவிட் இந்திய தேசிய கிரிக்கெட் அணியின் நிரந்தர துடுப்பாட்ட ஆலோசகர் இல்லை என்று பி.சி.சி.ஐ அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக ரவி சாஸ திரி நியமிக்கப்பட்டுள்ளார். அதே வேளையில், பந்து வீச்சு பயிற்சியாளராக சாகீர் கானும், இந்திய அணி வெளிநாட்டு மண்ணில் விளையாடும போது ராகுல் டிராவிட் துடுப்பாட்ட ஆலோசகராக இருப்பார் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதனால் அனைவருக்கும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. ராகுல் டிராவிட், சகீர் கான் ஆகியோர் அணிக்குள் நுழைந்ததால், தலைமை பயிற்சியாளராக இருக்கும் ரவி சாஸ்திரிக்கு என்ன வேலை? மூன்று பேருக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்படாதா? என்ற கேள்விகள் எல்லாம் எழுந்தது.

இந்நிலையில் இந்திய அணி வெளிநாட்டு மண்ணில் விளையாடும் அனைத்து தொடர்களிலும் ராகுல டிராவிட் ஆலோசகராக இருக்கமாட்டார். அவரின் தலையாய கடமை 19 வயதிற்குட்பட்டோர் மற்றும் இந்திய 'ஏ' அணியில் சிறந்த வீரர்களை உருவாக்குவதுதான் என்று பி.சி.சி.ஐ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அந்த அதிகாரி கூறுகையில் டிராவிட்டின் முக்கிய இலக்கு ஜூனியர் அணிதான் என்பதால ஆலோசகர் என்ற பதவி கொடுக்கப்பட்டுள்ளது. இந்திய அணியின் பயிற்சியாளர் மற்றும் அணித் தலைவர் ஆகியோர் எப்போதெல்லாம் வீரர்கள் தேவை என்று கூறுகிறார்களோ, அப்போதெல்லாம் ஜூனியர் அணியில் உள்ள திறமையான வீரரகளை கண்டறிந்து அணிக்கு அனுப்புவதுதான் டிராவிட்டின் முதல் கடமை. ஆகவே, துடுப்பாட்ட ஆலோசகர் என்பது எப்போதாவது பயன்படும் பதவியே நிரந்தரம் அல்ல.

இலங்கை தொடரின்போது அவர் இந்திய அணியுடன் செல்லமாட்டார. தென்னாபிரிக்கா செல்லும் இந்திய 'ஏ' அணியுடன் செல்வார். பின்னர், இந்திய அணி ஒன்றரை மாத காலம் தென்னாப்பிரிக்கா செல்லும் போது, ஒன்றிரண்டு வாரங்கள் அணியுடன் இருப்பார். தேவைப்படும்போது அணியுடன் இணைந்து கொள்வார். தேவையில்லாதபோது இந்திய 'ஏ' அணிக்கு திரும்பிவிடுவார் என்று கூறியுள்ளார்.

# உச்ச நீதிமன்றத்தில் நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரினார் பி.சி.சி.ஜின் முன்னாள் தலைவர் அனுராக் தாகூர்

பொய் வாக்குமூலம் கொடுத்த விவகாரத்தில் முன்னாள் பி.சி.சி.ஐ தலைவர் அனுராக் தாகூர் உச்ச நீதிமன்றத்தில் நிபந்தனையற்ற மன்னிப்பு கோரியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் வாரியத்தின் தலைவராக இருந்தவர் அனுராக் தாகூர். இந்திய கிரிக்கெட் வாரியத்திற்கு சி.ஏ.ஜி நியமிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. அப்படி நியமித்தால் தனித்து இயங்கும் பி.சி.சி.ஐ-யில் அரசு தலையீடு இருக்கும் என அனுராக் தாகூர் குற்றம் சாட்டினார்.

இதுகுறித்து ஐ.சி.சி தலைவராக இருக்கும் ஷஷாங்க் மனோகரிடம் கருத்து கேட்டார். ஷஷாங்க் மனோகர் ஏற்கனவே பி.சி.சி.ஐ தலைவராக இருந்தவர். கடிதம் மூலம் தங்களை கருத்தை தெரிவிக்க கோரினார். ஆனால் மனோகர் மறுத்துவிட்டார். இந்த விவகாரம் குறித்து உச்சநீதிமன்றத்தில் விசாரணை நடக்கும் போது ஐ.சி.சி. தலைவரிடம் ஆலோசனை கேட்கவில்லை என்று வாக்குமூலம் கொடுத்தார்.

ஆனால், நீங்கள் ஐ.சி.சி. தலைவரிடம் ஆலோசனை கேட்டதற்கு ஆதாரம் உள்ளது. நீங்கள் கோர்ட்டில் பொய் வாக்குமூலம் கொடுத்துள்ளீர்கள். அதனால் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும். இல்லையெ





னில், நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கோர்ட் உத்தரவிட்டது.

இதுகுறித்து அனுராக் தாகூர் கோர்ட்டில் ஒரு பிரமாண பத்திரம் தாக்கல்செய்தார். அதில்சூழ்நிலையை விளக்கி மன்னிப்பு கோரியிருந்தார். இதனை சுப்ரீம் கோர்ட் நிராகரித்துவிட்டது. மேலும், நிபந்தனையற்ற மற்றும் தகுதியற்றவர் என்ற முறையில் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது.

அதன்படி இன்று சுப்ரீம் கோர்ட்டில் அனுராக் தாகூர் நிபந்தனையற்ற மன்னிப்பு கோரியுள்ளார். நேற்று அவர் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரத்தில் தவறாக சில தகவல் அளித்திருந்தால், அதன்மூலம சுப்ரீம் கோர்ட்டிற்கு மகத்துவத்தை எந்த அளவில் குறைத்து மதிப்பீடும் நோக்கத்திலும் நான் செயல்படவில்லை. அதற்காக நான் நிபந்தனையற்ற மன்னிப்பு கோருகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# வோர்ன் ஜாம்பவான் என்பது ஜடேஜாவுக்குத் தெரியாதாம்



ஆரம்ப காலக்கட்டத்தில் வோர்ன மிகப்பெரிய வீரர் என்றும், அவர் ஏன 'ராக்ஸ்டார்' என்று என்னை அழைத்தார் என்றும் தெரியாது என்று ஜடேஜா நினைவு கூறியுள்ளார்.

இந்திய அணியின் இளம் வீரர் ரவீந்திர ஜடேஜா. இடது கை சுழற்பந்து வீச்சாளரான இவர், சிறந்த வகையில் துடுப்பாட்டமும் செய்யும் ஆற்றல் படைத்தவர். முதல்தர போட்டிகளில் முச்சதம் அடித்து அசத்தியுள்ளார். களத்தடுப்பு செய்வதில் மிக மிக சிறப்பானவர்.

அவுஸ்திரேலியாவிற்கு எதிராக இந்தியாவில் நடைபெற்ற டெஸ்ட் தொடரினபோது தொடர் நாயகன் விருது பெறறு அசத்தினார். ஐ.பி.எல்., சம்பியன்ஸ் டிராபி மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக சிறந்த வகையில் விளையாட வில்லை. என்றாலும், இலங்கைக்கு எதிராக 26ஆம் திகதி தொடங்கும் முதல் டெஸ்ட் போட்டியை எதிர்நோக்கி இருக்கிறார்.

இவர் 2012ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கெதிராக நாக்பூரில் நடைபெற்ற டெஸ்ட்டில் அறிமுகமானார். தற்போது வரை 30 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 142 விக்கெட்டுக்கள் கைப்பற்றியுள்ளார். இங்கிலாந்து சுற்றுப்பயணத்தின் போது இவரது மனைவிக்கு பெண் குழந்தை பிறந்தது. மேற்கிந்தியத் தீவுகள் தொடர் முடிந்தவுடன் தன் குழநதையை முதன்முறையாக பார்த்துள்ளார்.

இதற்கிடையில் அவர் அறிமுகமான காலத்தை ஜடேஜா நினைவு



கூர்ந்தார். அப்போது ஷேன் வோர்ன டெஸ்ட் கிரிக்கெட்டில் மிகப்பெரிய ஜாம்பவான் என்று எனக்குத் தெரியாது. மேலும், அவர் என்னை ராக்ஸ்டார் என்று ஏன் அழைத்தார் என்றும் தெரியாது என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளர் தரவரிசையில் முதல் இடத்தில் இருக்கும் ஜடேஜா கூறுகையில் வோர்னரை முதன்முறையாக சந்திக்கும்போது, அவர் டெஸ்ட் கிரிக்கெட்டின் தலைசிறந்த வீரர் என்று எனக்குத் தெரியாது. அவர் என்னை ராக்ஸ்டார் என்று அழைத்தார். அதற்கான அர்த்தம் புரியவில்லை. நான் எந்த பாடலும் பாடவில்லை. சிறப்பாக ஏதும் செய்யவில்லை. ராக்ஸ்டார் என்ற அழைக்கப்படுவதற்கு நான் தகுதியானவன்தானா? என்ற ஆச்சர்யம் ஏற்பட்டது.

அவர் ஏன் அப்படி அழைத்திருப்பார் என்று எனது நண்பர் ஒருவரிடம் கேட்டேன். அதற்கு என் நணபர், உன்னுடைய முகத்தில் அளவிற்கு அதிகமாக க்ரீம் (வியர்வையில் இருந்து தப்பிக்க வீரர்கள் பூசிக் கொள்வார்கள்) தடவியிருப்பாய், என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

இங்கிலாந்து மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் தொடர் முடிந்து இந்தியா திரும்பியதும் எனது மகள் நித்யானாவை பார்த்தது சிறந்த உணர்வாக இருந்தது. அவளுடன் நிறைய நேரம் செலவழிக்கிறேன் என்றார்.

வோர்ன் 145 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 708 விக்கெட்டுக்கள் வீழ்த்தி, சர்வதேச அளவில் 2-வது இடத்தில் உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை பிள்ளைக் கனியமுதம் முன்பள்ளியின் விளையாட்டு விழா எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மாநகரசபை பிள்ளைக் கனியமுத முன்பள்ளியில் இடம் பெறவுள்ளது.

யாழ்.மாநகர சபையின் பொது சனத் தொடர்பு உத்தியோகத்தரும் தகவல் வழங்கும் அலுவலகருமான ச.லோகசிவம் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன், சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர சபையின் பிரதி ஆணையாளர் அ.சீராளன், கௌரவ விருந் தினராக யாழ்.மாந கர சபையின் பொறியியலாளர் வே. ந.இராஜவரதன் ஆகியோர்கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)


# சேவை நயப்பு விழா - 2017

யா/யூனியன் கல்லூரியின் முன்னாள் அதிபர்

உயர்திரு.

## வே.கந்தையா இரத்தினகுமார்

SLPS-I (21.11.2011-23.08.2016)



**சேவை விபரம்**

வ/கன்னாட்டி றோ.க.த.க. பாடசாலை 12.10.1979 - 18.03.1981 - ஆசிரியர்
வ/பாவற்குளம் அ.த.க. பாடசாலை 19.03.1981 - 16.02.1984 - ஆசிரியர்
மு/ஆசிரியர் கலாசாலை 17.02.1984 - 31.12.1985 - ஆசிரியர்
கி/கிளாலி றோ.க.த.க. பாடசாலை 01.01.1986 - 14.07.1988 -ஆசிரியர்
கி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம் 15.07.1988 - 30.09.1988 - ஆசிரியர்
கி/இயக்கச்சி அ.த.க. பாடசாலை 01.10.1988 - 08.01.1989 - ஆசிரியர்
கி/தர்மகேணி அ.த.க. பாடசாலை 09.01.1989 - 25.04.1996 - அதிபர்
கி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம் 26.04.1996 - 05.01.1997 - அதிபர்
கி/நாகேஸ்வரா வித்தியாலயம் 06.01.1997 - 31.08.1997 - அதிபர்
கி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம் 01.09.1997 - 01.01.2004 - அதிபர்
யா/யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 02.01.2004 - 01.01.2005-முதுகல்வியியல்மாணி கற்கை
கி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம் 02.01.2005-09.01.2007 - அதிபர்
கி/கிளிநொச்சி மத்திய கல்லூரி 10.01.2007 - 08.08.2010 அதிபர்
வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி 09.08.2010-20.11.2011 பிரதிக் கல்விப் பணிப்பாளர்

**தங்களது ஓய்வுக் காலம் சிறப்பாகவும் இனிதாகவும் அமைய வாழ்த்துகின்றோம்.**

கல்லூரிச் சமூகம்

சி-9055



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. **ம.ஞானசம்பந்தன்**

S.L.P.S-I

பொறுமையின் இலக்கணமாய்
திகழ்ந்திடும் வாண்மையாளர்
குறுமுனிபோல எம்முன்
வழிபல காட்டியவர்
பொறுப்புக்கள் யாவினையும்
பொது நலத்துடன் செய்திடுவார்
சிறப்புடன் சேவையாற்றி
நெடுங்காலம் வாழியவே!

*Best Wishes*

ஆசிரியர் கழகம்,
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண
மகா வித்தியாலயம்.

9740)


## சாகித்ய ரத்னா தெணியானின் பவளவிழா

சாகித்ய ரத்னா தெணியானின் பவளவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பூமகள் சனசமூக நிலைய பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறும். க.பரணீதரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஜீவநதி தெணியான் பவள விழா சிறப்பிதழ், தெணியானின் குருநாவல் வெளியீடு என்பனவும் இடம்பெறும். இந் நிகழ்வில் வெளியீட்டுரையினை எழுத்தாளர் இ.சு.முரளிதரன் நிகழ்த்துவார். (இ-3)


# நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

**கலைமாமணி**

**Dr.S.S.சர்மா குருஜீ**

**82/4 கலட்டி அம்மன் கோவிலடி,
வண்ணார்பண்ணை.**

**077 784 1558** (சி. 8817)



## வடமாகாண கைத்தொழில் கண்காட்சியும் போட்டியும் -2017

கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் வடமாகாண உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வடமாகாண தொழிற்துறைத் திணைக்களத்தினால் இவ்வாண்டும் ஓகஸ்ட் 4ம் வாரம் மாகாண கைத்தொழில் கண்காட்சியும் போட்டியும் யாழ். மாவட்டத்தில் நடாத்தப்பட்டு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன. போட்டியில் தெரிவு செய்யப்படுகின்ற ஆக்கங்கள் தேசிய அருங்கலைகள் பேரவையினாலும், புடவைக்கைத்தொழில் திணைக்களத்தினாலும் தேசியமட்டத்தில் நடாத்தப்படும் போட்டி மற்றும் கண்காட்சிக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் தேசிய மட்டத்திலும் வெற்றி பெறும் ஆக்கங்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பின்வரும் வகைகளின் கீழ் கைப்பணிக் கைத்தொழில்களை மேற்கொள்ளும் கைப்பணியாளர்கள் தங்கள் பிரதேச செயலகங்களில் உள்ள தொழிற்துறைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்களைத் தொடர்பு கொண்டு அவர்கள் மூலமாக தங்கள் ஆக்கங்களைக் கையளிப்பதன் மூலம் கண்காட்சியில் பங்குபற்றி பயன் பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

1) கைத்தறி நெசவு உற்பத்திகள்
2) களிமண் உற்பத்திகள்
3) தும்பு, ஓலை, புல் சார்ந்த உற்பத்திகள்
4) பிரம்பு மூங்கில் குழாய் சார்ந்த உற்பத்திகள்
5) உலோக கைப்பணிப் பொருட்கள்
6) ஆபரணங்கள்(உலோக, கற்பதித்த நானாவித ஆபரணங்கள்)
7) முகமூடிகள் மற்றும் பாவைகள்
8) சங்கீத உபகரணங்கள்
9) துணிகள் மற்றும் துணிகளினாலான கைப்பணிப் பொருட்கள்(தையல் எம்புறொயிடர், இயந்திர எம்புறொயிடர், துணிகளில் வர்ணம்.பெச்வேக், பாரம்பரிய துணி வேலைப்பாடு)
10) பற்றிக்
11) ரேந்தை
12) மர உற்பத்திப் பொருட்கள்
13) தோற் பொருட்கள்
14) கற்கள் மூல கைப்பணிப் பொருட்கள்
15) பாரம்பரியக்கலை வரைபுகளும் சிற்பங்களும்
16) தென்னை, பனை, கித்துள் சார்ந்த உற்பத்திகள்
17) நானாவித கைப்பணிப் பொருட்கள்(கடதாசி, பல்ப் சார்ந்த உற்பத்திகள், மரத்தூள் பொருட்கள், சிப்பி ஓடுகள், பல தரப்பட்ட மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கைப்பணிப் பொருட்கள்)
18) நினைவுச் சின்னங்கள்

மேலதிக தகவல்களிற்கு பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

தொழிற்துறைத் திணைக்களம்,
முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி,
கைதடி.
தொ.பே.இல 021 320 2413
தொலைநகல் :npinddept@gmail.com

**ஓகஸ்ட் 15ஆம் திகதிக்கு முன்பு போட்டியில் பங்குபற்றவுள்ள கைப்பணியாளர்கள் தமது ஆக்கங்களை கையளிப்பதற்கு தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.**

(சி-9056


# இராசி பலன்

14.07.2017
(ஆனி 30, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
பஞ்சமி பிற்பகல் 12.39 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 10.52 மணிவரை
சுபநேரம் 6.00- 7.30 மணிவரை
இராகுகாலம் 10.30-12.00 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சுக் | சூரி |
| சந் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மகம், பூரம் மாலை 4.53 இற்கு மீன-சந் | | செவ் புதன் |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மீனம்** — வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம்.

**மேடம்** — எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** — இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம்.

**மிதுனம்** — கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்குபடுத்துவீர்கள்.

**கும்பம்** — வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், உடல் நலனில் கவனம் தேவை.

**கடகம்** — வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், பயணங்களின்போது விழிப்புணர்வு அவசியம்.

**மகரம்** — கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்** — புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை நிறைவேற்றுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு** — பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**விருச்சிகம்** — பாராட்டும் புகழும் கூடும் நாள், வருங்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.

**துலாம்** — எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும்.

**கன்னி** — தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் இணக்கத்துடன் நடந்து கொள்வர், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், கௌரவமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தடைகளை உடைத்தெறிவோம்’ மாற்றுத் திறனாளிகளுக்கான வலுவூட்டும் நடன நிகழ்வுகள்

மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கும் “தடைகளை உடைத்தெறிவோம்” எனும் தொனிப்பொருளில் மாற்றுத் திறனாளிகளுக்கான வலுவூட்டும் நடன நிகழ்வுகள் நாளை 15 ஆம் திகதி யாழ். மாவட்டச் செயலகத்துக்கு எதிரே உள்ள சிறுவர் பூங்கா வில் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 6 மணி வரை நடைபெறும்.

விஸபிலிற்றி (visbility) எனும் ஜேர்மன் மற்றும் இலங்கை மாற்றுத் திறனாளிகளை உள்ளடக்கிய நிறுவனம் இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே குறித்த நிறுவனத்தினர் மேற் கண்டவாறு தெரிவித்தனர்.

இது தொடர்பில் குறித்த நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான ஜெர்டா கொனிக் கருத்து தெரிவிக்கையில்,

மாற்றுத் திறனாளிகள் சமூகத்தினரால் ஒதுக்கப் படுகின்றார்கள். அவர்களின் இயல்பான திறமைகளை வெளிக்கொண்டு வரும் நடன நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இந்த நடன நிகழ்வில் மாற்றுத் திறனாளிகளும் மற்றும் பொது மக்களும் பங்குபற்றவுள்ளனர்.

மாற்றுத் திறனாளிகள் பாரபட்சமின்றி நடத்தப்படுவதில் இருந்தும் அவர்கள் தங்களை ஒருங்கிணைத்துக் கொள்வதற்கு ஏற்ற வகையிலும் இந்த பயிற்சிப் பட்டறை வித்தியாசமான அணுகு முறையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

மாற்றுத் திறனாளிகளின் உரிமை பற்றி அறிவூட்டும் நிகழ்வாக இந்த நடன நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளின் திறமைகளை அடையாளப் படுத்துவது இதன் முக்கிய நோக்கம் ஆகும். அவர்களுடன் இணைந்து வேலை செய்யவுள்ளோம்.

இரண்டு வருடத்துக்கு முதல் ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்தோம். இப் பயிற்சியில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் சாதாரண மக்களுக்கு நடனம், மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிகளை மேற்கொள்கிறோம், சமூகத்தில் மாற் றத்தை உருவாக்குவதற்கு செயற்படுகிறோம், நல்ல ஒரு தகவல் புரிந்துணர்வை ஏற்ப டுத்திக்கொள்வது தான் எமது நோக்கம்.

நடனம், ஒரு சர்வதேச மொழி. ஒரு கருத்தையோ எண்ணத்தையோ குறிப்பான இடத்தில் வெளிப்படுத்த கூடியதாக உள்ளது. மாற்றுத்திறனாளிகளிடத்தில் இதை ஊக்குவிப்பதன்மூலம் வித்தியாசமான கருத்தை கொண்டு வர முடியும். சமூகத்தில் ஒரு சம்பாசனையை கொண்டு வர முடியும். இந்த நடன நிகழ்வில் 30 மாற்றுத்திறனாளிகள் ஈடுபட்டுள்ளார்கள் எனத் தெரிவித்தார் இதேவேளை ஏற்பாட்டாளர்களில் ஒருவரான ஹலனா கருத்து தெரிவிக்கையில்,

மாற்றுத்திறனாளிகளுக்கு சமூகத்தில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும். அவர்கள் வறுமையின் காரணமாக ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு விசேட வகுப்புக்கள், பயிற்சி பட்டறைகளை, வேலைகள் பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்க வேண்டும், நிதி கிடைக்கவில்லை என்பது மட்டும் இல்லை., அதை உருவாக்கும் மனநிலையில் யாரும் இல்லாதது தான் காரணம்.

மாற்றுத்திறனாளிகளுக்கு சந்தர்ப்பம் வழங்குவது அரசியல்வாதிகளின் கையில் மட்டும் இல்லை. ஒவ்வொருவருக்கும் பொறுப்பு உள்ளது.

சமுதாயத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும். மாற்றுத் திறனாளிகள் யாசகர்கள் இல்லை. எம்மைப் போல் அனைத்து சலுகைகளும் கிடைக்க வேண்டும் என தெரிவித்தார். (இ-9)

# அதிரடிப் படை மீளப் பெறப்பட்டது

(கரணவாய்)

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் பலியானதையடுத்து வடமராட்சிப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் மீளப் பெறப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குடத்தனை ஆறாம் கட்டைச் சந்திப் பகுதியில் மணல் ஏற்றி வந்த ஹன்டர் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளைஞன் ஒருவர் கொல்லப்பட்டதை தொடர்ந்து பொலிஸ் ஜீப், காவலரண் சேதமாக்கப்பட்டதையடுத்து விசேட பொலிஸார், கலகத் தடுப்பு பொலிஸார், புலனாய்வுத் துறையினர், விசேட அதிரடிப் படையினர் களமிறக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை (11.07.2017) குறித்த இளைஞனின் இறுதிக் கிரியைகள் அசம்பாவிதங்கள் எதுவுமின்றி அமைதியாக நடைபெற்றதையடுத்து கலகத்தடுப்பு பொலிஸார், விசேட பொலிஸார், புலனாய்வுத் துறையினர் மீளப்பெறப்பட்டிருந்த நிலையில் மிகுதியாக இருந்த விசேட அதிரடிப் படையினரும் வெளியேறியுள்ளனர். (இ-60)

## அனுமதி அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 2017 இல் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்கள், தம்முடைய அனுமதி அட்டைகளை பெறும்பொருட்டு 17.07.2017 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தங்களது தேசிய அடையாள அட்டையுடன் வருகை தருமாறு கல்லூரி முதல்வர் அறிவித்துள்ளார். (இ)

## கார்த்திகைப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி ஆலய ஆடிக் கார்த்திகைப் பெருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது. (இ-3)

# முத்தமிழ் முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

நாகர் கோவில் மேற்கு முத்தமிழ் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் மு.செல்வரட்ணம் தலைமையில் இடம்பெறும்.

இவ்விழாவில்பிரதமவிருந்தினராக நாகர் கோவில் மகா வித்தியாலய அதிபர் இ. சிவசங்கர், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் பருத்தித்துறைப் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் (ஈ.பி.டி.பி) ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன், மருதங்கேணி வலயக் கல்வி ஆசிரிய இணைப்பாளர் ஜெ.சிவஞானம், மருதங்கேணி ஜெ.ஆர். எஸ். எஸ். இணைப்பாளர் ஏ. வீணஸ், நாகர் கோவில் மேற்கு ஜே/423 கிராம அலுவலர் எஸ். தோமஸ் யூட், நாகர் கோவில் மேற்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி. ஸ்ரீகாந், நாகர்கோவில் மேற்கு வாழ்வின் எழுச்சித் திட்ட உத்தியோகத்தர் எஸ். வனஜா, நாகர் கோவில் குடும்ப நல உத்தியோகத்தர் வி. பானுமதி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-19)

## சுவாமிநாத பண்டிதர் நூல் வெளியீட்டு விழா

செல்லையா பாலச்சந்திரன் எழுதியசுந்தரம்படம்ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் விவேகானந்தர்மண்டபத்தில்இடம்பெறும்.

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வெளியீட்டுரையினை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், ஆய்வுரையினை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (இ-3)

# யாழ்.நெல்லியடி மத்தியின் வருடாந்த பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் பரிசில்களை திருமதி பிரதீபா வேதநாயகன் வழங்குவார். (இ-7-60)

# உடுவில் கோட்டத்திற்கு புதிய கல்விப் பணிப்பாளர்



(யாழ்ப்பாணம்)

யா/நவாலி மகா வித்தியாலய அதிபர் த.மாதவன் வட மாகாண கல்வி அமைச்சினால் வலிகாமம் வலய உடுவில் கோட்டத்திற்கு புதிய கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 1986 முதல் தொடர்ச்சியாக 32 வருடங்கள் பிரபல பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். மேலும் மத்திய கல்வி அமைச்சின் வெளிநாட்டுப் புலமைப் பரிசில்பெற்றுஇஸ்ரேல் நாட்டில் பாடசாலை முகாமைத் துவப் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-3-105)

# நடராஜ இராமலிங்க வித்தியில் இன்று கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சி இன்று 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலையின் அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் இடம்பெறும் இக்கல்விக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக யாழ்.வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ், லண்டன் பழைய மாணவர் சங்கத் தலைவர் ஆ.வவானந்தன், சிறப்பு விருந்தினராக ஜேர்மன் பழைய மாணவன் இ.தரிஷன் கௌரவ விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளனர். (இ-8)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

வண்.வடமேற்கு ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமா பிடாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெறும்.

மஹோற்சவத்தில் 25 ஆம் திகதிசெவ்வாய்க்கிழமைகாலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 26 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (இ-10)

# ஸ்ரீகணேசா முன்பள்ளியின் வருடாந்த பரிசளிப்பு விழா

நீர்வேலி ஸ்ரீகணேசா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஸ்ரீகணேசா முன்பள்ளிமுன்றலில் ஸ்ரீகணேசா சனசமூக முன்பள்ளித் தலைவர் க.முருகையா தலைமையில் இடம்பெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக கனடா வாழ் ஜீவா வாசுகியும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலயக் கல்வி அலுவலக ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் க.நிமலநாதன், ஜேர்மன் வாழ் இ.சோமசேகரம், லண்டன்வாழ் ஆர்.சுபத்திரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-10-136)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 39ஆவது தலைமை ஏற்பு வைபவம் அண்மையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகத்தின் முதலாவது உப ஆளுநர் லயன்ஸ் தேவா பீற்றர் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் புதிய தலைவராக தேசகீர்த்தி லயன் உதயகுமார் சிசில் றெமிண்டஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.




# சங்காபிஷேகம்

இருபாலை கிழக்கு கந்தசுவாமி ஆலய (முனிகோவில்) அலங்கார உற்சவம் கடந்த 6 ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது. அலங்கார உற்சவ பூர்த்தி விழா நாளை 15 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் சங்காபிஷேகம் இடம்பெற்று மாலை முருகப் பெருமானின் திருக்கல்யாணத்துடன் நிறைவு பெறும். (இ-3)

# உயர்தர மாணவர் ஒன்றுகூடல்


யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய உயர்தரமாணவர் ஒன்றுகூடல் நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

உயர்தர மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வன் பா.சிவராம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா பிரதம விருந்தினராகவும் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் அ.கலைச்செல்வன், பாடசாலை ஆசிரியர் பிறேமிளா கலைச்செல்வன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் லண்டன் பழைய மாணவர்சங்கத்தலைவர் ஆ.வவானந்தன், சுகிர்தா வவானந்தன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் நடந்தது என்ன?






வடக்கு மாகாண முதலமைச்சருக்கு ஆதரவாக ஐந்நூறுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபை அலுவலகத்திற்கு முன்பாக ஒன்று திரண்டதுடன் பேரணியாக கோயில்வீதி நல்லூரிலுள்ள முதலமைச்சர் விக்னேஸ்வரனின் வாசஸ்தலத்தை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

• முழுவதும் இளைஞர்கள். எங்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் என்ற கோஷம் வானைப் பிழக்கிறது. இளைஞர்களின் ஆக்ரோஷம் மிகுந்த கோஷத்தால் வீடுகள் அதிர்ந்தன. முதலமைச்சருக்கான ஆதரவுப் பேரணியைக் காண்பதற்காக வீட்டினுள் இருந்தவர்கள் வீதிக்கு வந்தனர். ஆர்ப்பரிப்பும் கோஷம் எழுப்பும் ஓர்மமும் தமிழரசுக் கட்சி பெரும் தவறு இழைத்தது. இது எங்ஙனம் ஆகுமோ? எப்படி முடியுமோ என்ற ஏக்கம் தமிழரசுக் கட்சியை இதயத்தால் நேசித்தவர்களை உலுப்பிக் கொண்டது. இளைஞர் பேரணி முதலமைச்சரின் வாசஸ்தலத்தை நெருங்கியபோது அண்ட சராசரமும் ஒலிக்கும் வண்ணம் எங்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா என்று கோஷம் எழுப்பினர்.

வாசஸ்தலத்தின் முன்பாக இளைஞர் அணிகூடி நிற்கும் செய்தி அறிந்த ஊடகவியலாளர்கள் ஆற்றுப்பறக்க ஓடிவந்தனர்.


விலை : 10.00 பக்கங்கள் : நான்கு
website : www.valampurii.lk Viber : 076 636 3378
வலம்புரி Valampurii
விசேட பிரதி
E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

தமிழரசுக்கட்சியின் நிலைப்பாட்டை கண்டித்து முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு ஆதரவாக

நாளை பூரண கடையடைப்பு

பாடசாலைகள், போக்குவரத்து ஸ்தம்பிக்கும்

தமிழ் மக்கள் பேரவை அறிவிப்பு

முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் கையொப்பமிடவில்லை

புளொட் நிலைப்பாடு குறித்து சித்தார்த்தன் கருத்து

முதலமைச்சரை வெளியேற்றவே அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டு

முதலமைச்சரின் கரங்களை பலப்படுத்த ஒன்றிணைக

ஈ.பி.ஆர்.எல்.எவ். அழைப்பு

## தமிழர் தலைவிதி எப்படியாகும்?

தனக்கு ஆதரவு தெரிவித்து பேரணியாக வந்திருக்கும் இளைஞர் அணியைச் சந்திப்பதற்காக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தன் வாசஸ்தலத்தின் நுழைவாயிலுக்கு வருகிறார். எங்கள் தலைவன் விக்னேஸ்வரன் என்று இளைஞர்கள் எழுப்பிய ஒலி முதலமைச்சரை நெகிழ வைத்தது.

இளைஞர்கள் முன் அவர் உரையாற்றும் போது நெகிழ்ந்து கண்ணீர் சிந்தினார். அவரின் கண்ணீர் கூட இருந்த இளைஞர்களை நெக்குருக வைத்தது. அங்கு கூட இருந்த அத்தனை பேரும் உள்ளத்தால் அழுதனர்.

மக்களின் அன்புதான் எனது பலம் என்பது முதலமைச்சரின் உரையாக இருந்தது. தன் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தமிழரசுக் கட்சி கொண்டுவந்த ஒரு கணப்பொழுதில் இத்துணை இளைஞர்கள் ஒன்று திரண்டு பேரணியாக வந்து தன்மீது கொண்ட பற்றுதலை வெளிப்படுத்தியமை முதலமைச்சருக்கு மனவுறுதியையும் நம்பிக்கையையும் கொடுத்தது.

முதலமைச்சர் கூட எதிர்பாராத அளவில் அவருக்கான மக்கள் பலம் வெளிப்பட்டது.

முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தமிழரசுக் கட்சி கொண்டு வராமல் இருந்திருந்தால், முதலமைச்சர் மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள அன்பும் ஆதரவும் தெரியாமல் போயிருக்கும்.

ஆகையால் தமிழரசுக் கட்சியின் நம்பிக்கையில்லாத் தீர்மானம்தான் முதலமைச்சர் விக்னேஸ்வரனை தமிழ்மக்கள் தங்கள் தலைவனாக ஏற்றிருக்கும் செய்தியை உலகுக்குக் காட்டியிருந்தது. இவை 15.06.2017 அன்று நடந்து கொண்டிருக்க. மறுநாள் பூரண கடையடைப்புக்கான தமிழ்மக்கள் பேரவையின் அழைப்பு எங்கும் பரவிக் கொள்கிறது.

வர்த்தகப் பெருமக்கள் தாமாக முன்வந்து ஆதரவு தெரிவிக்கின்றனர்.

16.06.2017 வெள்ளிக்கிழமை அதிகாலை பொழுது விடியலுக்காக குருவிகள் ஒலி எழுப்புகின்றன. காகங்கள் கரைகின்றன. எழுவான் திசையில் இருந்து கதிரவன் எட்டிப் பார்க்கிறான். வடக்கு மாகாணத்தில் என்ன நடந்தது? அன்று இராமர் காடு சென்றபோது அயோத்தி மாநகர் இருந்தது போலல்லவா வடக்கு மாகாணம் இருக்கிறது எனத் தனக்குள் எண்ணிக் கொண்டது போல பயத்தோடு மெல்ல மெல்ல மேலேழுகிறான்.

ஆள் நடமாட்டம் இன்றி வீதிகள் வெறிச்சோடிக் கிடப்பது கண்டு பறவைக் கூட்டம் அதிர்ந்து கொள்கின்றது.

விடியலுக்கு முன்பாக நாம் எழுந்து விட்டோமோ என்று அச்சப்படுமளவில் மக்களைக் காணாமல் பதற்றம் கொண்ட பட்சிகள் மெதுவாக தம் சிறகுகளை அசைக்கின்றன.

நேற்றைய மாலைப் பொழுதின் அறிவித்தலோடு 16.06.2017 இன் விடியல் இத்துணை தூரம் சோபையிழந்து போகும் என்று எவரும் நினைத்திலர்.

ஆம், 16.06.2017 வெள்ளிக்கிழமை தன் வழமையை இழந்தது. சந்தைகள் இயங்கவில்லை. வர்த்தக நிலையங்கள் எவையும் திறக்கப்படவில்லை. வங்கிகள் இயங்க மறுத்தன. வெள்ளை நிறத்து சீருடையில் பள்ளிக்குத் துள்ளிச் செல்லும் மாணவச் செல்வங்கள் வீதிக்கே வரவில்லை. பாடசாலைகள் வெறிச் சோடின. திரையரங்குகள் ஆளின்றிக் காத்துக் கிடந்தன. எங்கும் வெறுமை.

வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவுக்கு எதிராக தமிழரசுக் கட்சி கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து- கண்டித்து வடக்கு மாகாணம் முழுமையும் பூரண ஹர்த்தால் என்ற செய்தி நாடு என்ற எல்லை கடந்து உலகம் பூராகவும் பரவுகிறது. தங்கள் தலைவனின் பதவிக்கு ஆபத்து வந்த போது தமிழ்மக்கள் கொண்ட பேரெழுச்சி தமிழரசுக் கட்சியைத் தள்ளாட வைத்தது.

(திங்கள் வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தலைமைகள் ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்து செயற்பட வேண்டும்



## செல்வம் எம்.பி. வலியுறுத்து

தமிழ் தலைமைகள் ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்து செயற்படவேண்டிய தருணமிது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மைக்கால அரசியல் நிலைமைகள் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேசிய இனங்களான தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை பிரதிபலிக்க கூடிய வகையிலான அரசியல் அமைப்பொன்றினை உருவாக்கும் முயற்சி இடம்பெற்றுவருகின்றது.

சர்வதேசத்தின் உறுதுணையுடன் எமது தீர்வுக்கான வழிவகைகளை ஏற்படுத்த முனைப்பு காட்ட வேண்டிய தார்மீக பொறுப்பு தமிழ் தலைமைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சர்வதேசத்தின் முன்பாக இலங்கை அரசின் செயற்பாடுகளின் வெளிப்படைத்தன்மைகளை தோலுரித்துக்காட்டியதன் அடிப்படையில் புதிய அரசியல் அமைப்பொன்றை உருவாக்க வேண்டிய நிலைமை உருவாக்கப்பட்டுள்ளமை மறுப்பதற்கில்லை.

இந் நிலையில் தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றிணைந்து சர்வதேசத்திற்கு தமது பலத்தினை உறுதிப்பாட்டுடன் காட்டவேண்டிய தேவையுள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ள கருத்துக்களை அடிப்படையாக கொண்டு காலத்தின்தேவை மற்றும் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படவேண்டும். குறிப்பாக மாற்றுத்தலைமை என்ற எண்ணக்கருவை களைந்து செயற்படவேண்டும் என்ற முதலமைச்சரின் கருத்து கால சூழலை உணர்ந்து வெளிப்படுத்தப்பட்ட கருத்தியலாக உள்ளது.

எனவே தமிழர்களின் அரசியல் களத்தில் யாரை உள்வாங்குவது, யாரை தலைமையாக ஏற்பது என்பது தொடர்பிலான நிலைப்பாட்டை எடுக்கும் தெளிவு தமிழ் மக்களிடம் உள்ளது. எனவே மக்களின் தீர்ப்பு சரியான தருணத்தில்,சரியான முறையில் வெளிப்படுத்தப்படும் என்பதனை உணர்ந்து கொள்ளப்படவேண்டும்.

இந் நிலையில் அரசியல் அமைப்பு உருவாக்கத்தில் தென்னிலங்கை சக்திகள் சில குழப்பத்தினை ஏற்படுத்தி தேசிய இனங்களான தமிழ் மற்றும் முஸ்லிம் இனங்களுக்கான நிம்மதியான எதிர்காலத்தினை ஏற்படுத்த தடையாக உள்ளனர். இவ்வாறான நிலையில் அவர்களின் செயற்பாடுகளை வலுவற்றதாக்கவும் சர்வதேசத்திற்கு இவ்வாறானவர்களின் முகத்திரைகளை வெளிப்படுத்தவும் ஓரணியில் அரசியல் தலைமைகள்செயற்படுவதே சாலச்சிறந்தது.

இதற்குமப்பால் தென்னிலங்கை கட்சிகள் இன்று வடக்கு கிழக்கில் காலூன்றி தமது கட்சியின் வளர்ச்சியை எதிர்பார்த்து காத்திருக்கின்றது.

வடக்கு கிழக்கில் தமிழ் தலைமைகள் மீதான அதிருப்தி ஏற்படுமாயின் தென்னிலங்கை கட்சிகள் வளர்ச்சியடைவதற்கு காரணமாக அமையும்.

எனவே வடக்கு மாகாண முதலமைச்சரின் மாற்றுத்தலைமை ஒன்று தேவையற்றது என்ற கருத்தியலோடு ஒன்றிணைந்து தமிழ் தலைமைகள் ஒற்றுமையுடனும் விட்டுக்கொடுப்புகளுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் செயற்பட முன்வர வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)




# பங்காளி கட்சிகள் ஆதரவு தரும் பட்சத்தில் த.தே.கூட்டமைப்பை பதிவு செய்வோம்

## த.தே.கூட்டமைப்பின் தலைவர் தெரிவிப்பு





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பங்காளிக்கட்சிகளின் ஒத்துழைப்புடன் பதிவு செய்யத் தயாராக உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா. சம்பந்தன் கிளிநொச்சியில் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் அங்கத்தவர்கள்,ஆதரவாளர்கள் மத்தியில் சமகால அரசியல் கலந்துரையாடல் நேற்று முன்தினம் முற்பகல் 10மணியளவில் தமிழ் அரசுக்கட்சியின் உறுப்பினர் குமாரசிங்கம் தலைமையில் கிளிநொச்சியில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலின் பின்னர் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தனிடம் ஊடகவியலாளர்கள் நீங்கள் ஏன் இன்னும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பதிவுசெய்யவில்லை என்று வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதி வு செய்யத்தயாராக உள்ளோம். ஏனைய நான்கு பங்காளிக் கட்சிகள் ஆதரவு தரும் பட்சத்தில் நாங்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை பதிவு செய்வோம் என்று குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாண சபை உறுப்பினர்கள்,கிளிநொச்சி மாவட்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-312-15)

# கொல்லவிளான்குளத்தில் தேனீ வயல்விழா





2016 ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் 5 இலட்சம் ரூபா நிதியிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் 145 பயனாளிகளுக்கு தேனீ வளர்ப்புக்கு 145 தேனீ பெட்டிகளும் 110 புகையூட்டிகளும் 15 தேனை பிரித்தெடுக்கும் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இதன் மூலம் தேனீ வளர்ப்பிலீடுபட்டவர்களின் வயல் விழா நேற்று பாலிநகர் விவசாய போதனாசிரியர் பிரிவில் கொல்லவிளான்குளத்தில் பயனாளி ஒருவரின் இல்லத்தில் அண்மையில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா ,வடக்கு மாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், மாகாண விவசாய பணிப்பாளர் சி.சிவகுமார், மேலதிக பணிப்பாளர் ஆராட்சி கலாநிதி சி.ஜே.அரசகேசரி, கிராம அலுவலர், பயனாளிகளென பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை குறித்த தேனீ வளர்ப்புத் திட்டத்துக்கென 2017 ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் 3 இலட்சம் ரூபா நிதியிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் பாலிநகர்,பாண்டியன்குளம் ஆகிய விவசாய போதனாசிரியர் பிரிவுகளிலிருந்து 30 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கான தேனீ வளர்ப்புக்கு உபகரணங்கள் வழங்கவுள்ளதாகவும் அத்தோடு தேசிய உணவுற்பத்தி திட்டத்தின் கீழ் 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா நிதியிலிருந்து 3 தேனீ வளர்ப்பு கிராமங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளன. இதற்காக பாண்டியன்குளம் விவசாய போதனாசிரியர் பிரிவில் பாண்டியன்குளம் கிராமம் , பாலிநகர் விவசாய போதனாசிரியர் பிரிவில் கொல்லவிளான்குளம் கிராமம்,புதுக்குடியிருப்பு விவசாய போதனாசிரியர் பிரிவில் கைவேலி கிராமம் ஆகியவற்றிலிருந்து 60பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கும் தேனீ வளர்ப்புக்கான உபகரணங்கள் வழங்கவுள்ளன.

தேனீ வளப்பில் ஈடுபட்டு வருபவர்களுக்கு வாரிய பொல விவசாய பாடசாலைக்கு அழைத்து சென்று களப் பயிற்சி வழங்கியதாகவும் முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தெரிவித்தார்.

அத்தோடு அன்றைய தினம் தேன் பிரித்தெடுக்கும் முறை ஏனைய பயனாளிகளுக்கு செயன்முறை ரீதியாக கற்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# பண்டாரவன்னியனின் உருவச்சிலை புதிதாக அமைக்கப்பட்டு திறப்பு

(மல்லாவி )

மல்லாவி வர்த்தக சங்கத்தினர் மல்லாவி நகரப் பகுதியில் விசமிகளால் உடைக்கப்பட்ட பண்டார வன்னியன் உருவச் சிலையை மீண்டும் புதிதாக அமைத்து அதனை வைபவரீதியாக திரை நீக்கம் செய்து வைத்துள்ளனர்.

இந் நிகழ்வு கடந்த 5ஆம் திகதி பிற்பகல் 3. 30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் மல்லாவி வர்த்தக சங்கத்தின் தலைவர் வ. விஜயகுமார் பண்டார வன்னியன்உருவச்சிலையை வைபவ ரீதியாக திரை நீக்கம் செய்து வைத்து மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதனையடுத்து, வர்த்தக சங்க நிர்வாகிகள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பல



[illegible]

மல்லாவி நகரப் பகுதியில் வன்னியின் கடைசி மன்னனான பண்டார வன்னியனின் உருவச் சிலையை துணுக்காய் பிரதேச செயல[illegible] அமைக்கப்பட்ட நிலையில். அதனை கடந்த ஜனவரி மாதம் 02 ஆம் திகதி வைபவரீதியாகத் திரை நீக்கம் செய்யப்பட்ட சில வாரங்களில் விசமிகளால் திரு உருவச் சிலையின் ஒரு பக்க கையும் மற்றைய கையில் ஏந்தியிருந்த வாள் என்பன உடைத்து சேதப்படுத்தப்பட்டன.

இந் நிலையில் திருவுருவச்சிலை மீண்டும் மல்லாவி வர்த்தக சங்கத்தினர் சுமார் ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புதிதாக அமைத்து திரை நீக்கம் செய்து வைத்துள்ளனர். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 விவசாயிகளுக்கு பயிரழிவு காப்புறுதி இழப்பீட்டுப் பணம் பகிர்ந்தளிக்கப்பட்டது

## முள்ளியவளை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு



முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் கீழ் நடப்பாண்டுக்குரிய 2016/ 2017, காலபோக நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளில் மத்திய அரசின் கீழுள்ள கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் ஊடாக பயிரழிவுக் காப்புறுதி செய்த 22 விவசாயிகளின் 80. 5, ஏக்கர் பயிரழிவிற்கு 8 இலட்சத்து 49 ஆயிரத்து 760 ரூபா பணம் இழப்பீட்டுத் தொகையாக பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளதாக முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஆயிரத்து 86 விவசாயிகளின் 3 ஆயிரத்து 783.25 ஏக்கர் நெற்செய்கை கால நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகவும் ஏற்பட்ட வரட்சி காரணமாகவும் குளங்களின் நீர் மட்டம் குறைவடைந்தமையாலும் மற்றும் போதிய மழை வீழ்ச்சியின்மையாலும் பயிரழிவிற்குள்ளாகியுள்ளது.

இவர்களில் 22 விவ சாயிகள் மட்டும் வருமுன் காக்கும் செயற்பாட்டை முன் னெடுத்தமையால் மிகக் குறைந்த காப்புறுதிக் , கட்டணத்தை செலுத்தி கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் ஊடாக பயிரழிவுக் காப்புறுதி செய்துள்ளனர்.

இவர்களில் 80.5 ஏக்கர் பயிரழிவிற்கு பெரும் தொகை பணமாக 8 இலட்சத்து 49 ஆயிரத்து 760 ரூபா பணம் இழப்பீட்டுத் தொகையாக கிடைத்துள்ளது.

இப் பணத் தொகையை விவசாயிகள் காப்புறுதி செய்த ஏக்கருக்கு ஏற்ப பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது.

இந் நிகழ்வு முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்ற போது,

மத்திய அரசின் விவசாய அமைச்சின் கீழுள்ள கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் பணிப்பாளர் நாயகம் பந்துல வீரசிங்க பிரதம விருந்தினராக கலந்து கொண்டு விவசாயிகளுக்கான இழப்பீட்டுப் பணத்திற்கான காசோலைகளை வழங்கி வைத்துள்ளார்.

இந் நிகழ்வுக்கு, கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ். புனிதகுமார், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி - கேதீஸ்வரன், வவுனியா /முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களுக்கான கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் உதவிப் பணிப்பாளர் எம். ஆர்.எம்.சமீர் மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் அதிகாரிகள், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரிகள், விவசாயிகள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள். (2-15)




# கேட்போர் கூடத்திற்கு அடிக்கல் நாட்டல்



(பனிக்கன்குளம்)

வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட வவு/ புதுக்குளம் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா கேட்போர் கூட கட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதிபர் சுபாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், இ.இந்திரராசா, செ.மயூரன், சுகாதார அமைச்சரின் சார்பில் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ப.சத்தியசீலன், வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீஸ் கந்தராஜா, கட்டடங்கள் திணைக்களத்தின் பொறியியலாளர் மயூரன், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் இந்த அரங்கிற்கு ரூபா 8.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இரண்டு மாடிகளைக்கொண்ட இந்த அரங்கில் .இவ்வருடம் கீழ்தள வேலைகள் முடிக்கப்படவுள்ளதாக வலயக்கல்விப்பணிப் பாளர் தெரிவித்தார்.

1916ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப்பாடசாலை கடந்த வருடம் தனது நூற்றாண்டு விழாவை கொண்டாடியது இதன்போதுபாடசாலை சமூகத்தால்நூற்றாண்டு விழா கேட்போர் கூடம் அவசியம் பற்றிய கோரிக்கை விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-281-250)

# வீரமக்கள் தின நிகழ்வுகள் வவுனியாவில் அனுஷ்டிப்பு

புளொட் அமைப்பின் 28வது வீர மக்கள் தின நிகழ்வுகள் இன்று 13.06.2017 அன்று காலை வவுனியா, கோவில்குளத்தில் அமைந்துள்ள தோழர் க.உமாமகேஸ்வரன் இல்லத் தில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் உப தலைவர் க.சந்திர குல சிங்கம் தலைமையில் ஆரம்ப மானது.

இதன் போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் மறைந்த செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கம் உருவப்படத்திற்கு மலர் மாலைகள் அணி வித்தனர். அதனைத் தொடர்ந்து வருகை தந்திருந்த கழக உறுப்பினர்கள் ஆதரவாளர்களால் மலரஞ் சலி செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் இறைபணிச் செம்மல் செ.வை.தேவராசா, சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத் தலைவர் நா.சேனாதிராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன்,



ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி யின் உப தலைவர்களில் ஒருவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு வை.பாலச்சந்திரன், மாவட்ட செயற்குழு நிதி பொறுப்பாளர் நிசாந்தன், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் கேசவன், கெர்சோன், மாவட்ட இளைஞரணியின் அமைப் பாளர் பிரதீபன், மாவட்ட இளைஞரணியின் நிர்வாக உறுப்பினர் கயூரன்,

கழக உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-112)

# கடும் வரட்சியால் மாந்தை கிழக்கில் 335 குடும்பங்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக முல்லைத் தீவு மாவட்டம் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளது

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் 335 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து121 பேருக்கு குடிநீர்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கான குடிநீர் விநியோகத்தை மாந்தை கிழக்கு பிரதேசசபை ஊடாக நடத்தி வருவதாகவும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி பொன்னகர் கிராம சேவையாளர் பிரிவில் 15 குடும்பங்களை சேர்ந்த 55 பேரும் செல்வபுரம் கிராம சேவையாளர் பிரிவில்15 குடும்பங்களை சேர்ந்த 60 பேரும் பூவரசங் குளம் கிராம சேவையாளர் பிரிவில் 35 குடும்பங்களை சேர்ந்த 98 பேரும் பாண்டியன் குளம் கிராம சேவையாளர் பிரிவில் 80 குடும்பங்களை சேர்ந்த 260 பேரும் பாலிநகர் கிராம சேவையாளர் பிரிவில் 38 குடும்பங்களை சேர்ந்த135 பேரும் கரும்புள்ளியான் கிராம சேவையாளர் பிரிவில் 35 குடும்பங்களை சேர்ந்த 120 பேரும் விநாயகபுரம் கிராம சேவையாளர் பிரிவில் 65 குடும்பங்களை சேர்ந்த 230 பேரும் கொல்லவிளான்குளம் கிராம சேவையாளர் பிரிவில் 10குடும்பங்களை சேர்ந்த 38 பேரும் அம்பாள்புரம் கிராம சேவையாளர் பிரிவில் 42 குடும்பங்களை சேர்ந்த 125 பேருமாக மொத்தமாக 335 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 121 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தெரிவித்தார்

இந்நிலையில் குறித்த பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாளொன்றுக்கு 12ஆயிரம் லீற்றர் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப் படுவதாக மாந்தை கிழக்கு பிரதேச சபை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை குறித்த பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பெரிய நீர்ப்பாசன குளமான வவுனிக்குளத்தில் தற்போது நீர் வற்றி வருகிறது இதன் காரணத்தால் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலக பிரிவுகளுக்குள் அடங்குகின்ற 20 கிராமங்களில் சுமார் 8ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் சிறுபோக நெற்செய்கை செய்யப்படாது உள்ளதாகவும் பிரதானமான தொழிலான விவசாயம் வரட்சியால் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் இதேவேளை கால்நடை வளர்ப்பிலும் பாரிய சிக்கலை எதிர்கொள்வதாகும் கால்நடைகளுக்கு நீர் இல்லாது அவை இறக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது எமது பகுதியிலுள்ள சிறிய குளங்கள் நான்கு முற்றாக வற்றியுள்ளதாகவும் இவ்வாறு நிலைமை நீடிக்குமானால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும் எனவும் கிணறுகளில் நீர் வற்றி செல்வதால் அவற்றை குடிப்பதால் சிறுநீரக நோய்களை எதிர்கொள்ள நேரிடும் என்ற அச்சம் காணப்படுவதாகவும் இது தொடர்பில் உரிய தரப்பினர் மக்களுக்கு தெளிவுகளை வழங்க வேண்டும். தற்போதைய எமது நிலை தொடர்பில் பல்வேறு தரப்பினரிடம் கூறியும் யாரும் கவனமெடுப்பதாக தெரியவில்லை எனவும் தொடரும் வரட்சியால் தாம் அச்சமடைந்துள்ளதாகவும் சம்மந்தப்பட்டவர்கள் எமது நிலை தொடர்பில் கவனமெடுக்குமாறும் மனித உரிமை செயற்பாட்டாளரான எஸ். பரமானந்தம் தெரிவிக்கின்றார். (2-281)

# 128 நாட்களாக போராடுகின்றோம் எமது உறவுகளின் நிலையை அரசு கூறு!



தமது உறவுகள் எங்கே என அரசு உடனடியாக பதில் கூறவேண்டும். பதில் கூறும் வரை தமது போராட்டம் நிறுத்தப்படாது எனவும் தெரிவித்துள்ள, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று 128 ஆவது நாளாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக வீதியோரத்தில் கூடாரம் அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைந்த, கைது செய்யப்பட்ட மற்றும் யுத்த காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகள் தொடர்பில் உரிய தீர்வை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்

இந்நிலையில் தமது உறவுகள் எங்கே என அரசு உடனடியாக பதில் கூற வேண்டும் எனவும் பதில் கூறும் வரை தமது போராட்டம் நிறுத்தப்படாது எனவும் உறுதிபட தெரிவிக்கின்றனர். (2-281)

## ஆடிப்பிறப்பு விழா

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம், கரிகணன் (தனியார்) நிறுவனம் ஆகியன இணைந்து நடத்தும் ஆடிப் பிறப்பு விழா நாளை மறுதினம் திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள மகாதேவா சிறுவர் இல்லத்தில் யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன் மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் நாவலர் சிலை வழங்கல், கலை நிகழ்ச்சிகள் என்பன நடைபெறும். (2-102)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணத்தில் இருந்து அக்கரைப்பற்றுக்கு கஞ்சா போதைப்பொருள் கடத்த முற்பட்ட ஒருவர் வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியை சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து 4 கிலோ 300 கிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து அக்கரைப்பற்றுக்கு பயணித்த குறித்த நபரின் பயணப் பொதியை வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் வைத்து சோதனை செய்த போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் அமைப்பு சீர்திருத்தத்திற்கு மகாநாயக்கர்கள் எதிர்ப்பு

# இப்போது தமிழ்த் தலைமை செய்ய வேண்டியது என்ன?

**மக்கள் கருத்து**

**பிரியங்கன் — கன்பொல்லை**

மகாநாயக்கர்கள் நல்லாட்சியைக் குழப்ப முயல்கின்றனர். அவர்களைக் கண்டு அரசு பயப்படக் கூடாது.

**ராஜன் — கொக்குவில்**

2009 இனப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை, மக்களை ஏமாற்றுகிறார்கள், அரசியல் கைதிகள், காணாமல் போனவர்கள் விடயத்தில் கூட்டமைப்பு தலைமை என்ன செய்தது? கூட்டமைப்பின் தலைமை தமிழர் விடயம் பற்றி பேசாமல் விடவேண்டும். மக்கள் தங்கள் பிரச்சினைகளை தீர்த்து கொள்வார்கள்.

**இராஜதுரை — சண்டிலிப்பாய்**

அரசியலமைப்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். ஆனால் கூட்டமைப்பு கலந்து கொள்ளாது. இதனால் ஏமாற்றப்படுவது தமிழர்கள் மட்டுமே. இதன்பின் தமிழ்த் தலைமைகள் மாற்றப்படும். தமிழன் அழப் பிறந்தவன் அல்ல ஆளப் பிறந்தவன்.

**சீலன் — பரந்தன்**

மகாநாயக்கர்களும் மனிதர்கள் தானே! அவர்களை தமிழ் தலைமைகள் உடன் சந்தித்து அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பிலும் தமிழ் மக்கள் அவலம் தொடர்பிலும் பேசினால் நிச்சயம் அவர்களின் மனம் மாறும். எதிர்ப்பு தீரும்.

**சி சிவரூபன் — கொக்குவில் மேற்கு**

ஊர் இழந்தாய்...
உடைமை இழந்தாய்...
உறவு இழந்தாய்...
உயிர் இழந்தாய்...
இறுதியில் நாதி அற்றுக்கிடக்கின்றாய் தமிழா?
உனக்கு இந்த சோதனையா?

அரசியல் சீர்திருத்தச்சட்டம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. தமிழ்க்கட்சிகள் வேறுபாடு இல்லாமல் வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெற்ற.போரில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பலியாகியது யாவரும் அறிந்த உண்மை. அவர்களை நெஞ்சில் சுமந்து அவர்களின் வலி, வேதனைகளைச்சுமந்து.கட்சி வேறுபாடுகளின்றி ஒருமித்த கருத்தோடு.ஒருமித்த குரலோடு ஓங்கி ஒலிக்கவேண்டும்.

**லச்சு — நெல்லியடி**

அரசாங்கம் மக்களுக்காகச் செயற்பட வேண்டுமே தவிர மகா நாயக்கர்களுக்காக அல்ல.

**ஶ்ரீதரன் — கிளிநொச்சி**

தமிழ் அரசியல் தலைமைகள் தன்னலம் கருதாது ஒன்று கலந்தாலோசிக்க முன்வர வேண்டும். இது தொடர்பாக மக்களின் மனோ நிலைகளைக் கேட்டறிய வேண்டும். அதன் பின்னரே தேரர்களோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்.

**ந.நந்தகுமார் — மானிப்பாய்.**

தமிழ்த்தலைமை செய்யவேண்டியது.???

காலம் கடந்துவிட்டது. சுருக்கமாகசொன்னால் காலம் கடத்திவிட்டார்கள் பரவாயில்லை. இனிமேல் ஞானம் பிறந்தால் நம்ம தலைமைகள் ஒருமித்துக் குரல்கொடுத்து அரசு வியக்கும் அளவுக்கு புதிய முன்னகர்வுகளை கொண்டுவரவேண்டும் எமது தலைமைகள் ஒன்றுக்கொன்று பிளவுபட்டு இருந்தாலும் நம் தலைமைகள் ஒன்று என்று அரசு நினைக்கும் அளவுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். எதிரிக்கு கொண்டாட்டமாக எமது நகர்வுகள் இருக்கக்கூடாது என்பது மக்களுடைய அவாவாக இருக்கின்றது. நமது தலைமைகள் கடந்தகால கசப்பான அனுபவங்களை மனதில் கொண்டு செயற்படவேண்டும். இனிவரும் இளம் சமுதாயத்துக்கும் அரசியல் அனுபவங்களை புகுத்தும் அளவுக்கு நமது அரசியல் தலைவர்கள் முன்வரவேண்டும். இதுவும் எமதுமக்களின் எதிர்பார்ப்பும்கூட. எமது சமுதாயம் உலகம் பூராவும் நம்பிக்கையுடனும் நமக்கு ஒரு அங்கீகாரமுடனும் வாழ வழிசெய்து, நமது தலைமைகள் ஒன்றுசேர்ந்து ஒருமித்த குரலை வெளிப்படுத்தவேண்டும் என்பதுமே மக்கள் விருப்பமும் எதிர்பார்ப்பும்கூட.

**ந.சக்திவேல் — திருநெல்வேலி**

பௌத்த நாயக்கர்களுடன் வெளிப்படைத் தன்மையாக பேச வேண்டும். நாம் இழந்த இழப்புக்களை எடுத்துக் கூற வேண்டும். அரசியல் அமைப்பின் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும் என கருத்துச் சொல்ல வேண்டும். அப்போதுதான் எமது காரியம் கைகூடும்.



**சத்தியன்**

புதிய அரசமைப்பு தொடர்பான விளக்கம் சிங்கள மக்களிடம் சென்றடையக் கூடியவாறு செயற்பாட்டை அரசு மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

**சோதிமாஸ்ரர்**

இப்போது தமிழ்த்தலைமைகள் அவசியம் செய்ய வேண்டியது ஒன்றுமட்டும்தான்.தமிழ்மக்கள் மத்தியில் நல்ல நம்பிக்கையைக்கட்டியெழுப்பவேண்டியதுதான்.

**சதீஸ் — வேலணை**

சிங்கள, பௌத்தத்திற்கு முன்னுரிமை அளிக்காதவரை இலங்கைக்கு எந்தவித அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்திற்கும் இடமில்லை என்பது பௌத்தர்களின் சித்தாந்தம்.

ஆனால் தங்களுக்கான சலுகைகள், பதவியுயர்வுகள் கிடைக்காதவரை யாருக்கும் எதுவும் செய்யப் போவதில்லை என்பது தமிழ்த் தலைமைகளின் சித்தாந்தமாகவும் தமிழரை யார் தலைமை வகிப்பது என்பது வேதாந்தமாகவும் உள்ள நிலை மாற்றம் அடைந்தால் மட்டுமே இலங்கையில் அரசியல் தீர்வொன்றை எட்ட முடியும்.

இந்நிலையை மாற்றுவதற்கு தமிழர்களான நாம் ஒன்று திரண்டு பெரும் சக்தியாக மாற்றம் பெற வேண்டும். தமிழர் தலைமைகளை குறைகூறுவதை நாம் முற்றிலுமாக கைவிட வேண்டும்.

ஏனெனில் தலைமைகளை உருவாக்கியது நாம் தான் என்ற உண்மையை மறந்து விடக் கூடாது. அதற்காக நம்மிலும் தப்பபிப்பிராயப்பட்டுக் கொள்ளக் கூடாது. ஏனெனில் நாம் உருவாக்கும் வரை தலைமைகள் எமக்கானவர்களாகவே செயற்பட்டார்கள். ஆனால் இன்று இனிய அமுதம் உண்டவர் அமுதம் இருந்த பாத்திரத்தை தட்டி விடுவது போன்று எம்மை மறந்து தலைமைகள் செயற்படுகின்றன.

வெண்ணெய் திரண்டு வரும் நிலையில் தாழி உடைந்த கதைபோல் அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்று வரும் நிலையில் அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் தேவையில்லை என்ற மகாநாயக்கர்களது கடுமையான எதிர்ப்பும் அதைப் பரி சீலிக்கும் ஜனாதிபதியின் செயற்பாடும் அமைந்துள்ளமை தமிழ் மக்கள் மனங்களில் சோகத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

எமக்கான உரிமை என்பது தங்கத் தாம்பாழத்தில் வைத்து நீட்டப்படும் ஒன்று என்று யாரும் கனவு காண வேண்டாம். அது நம்முடைய முட்டாள்தனத்தின் உச்சக் கட்டமாகவே அமையும். நாம் நமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு சில தியாகங்களையும் பல போராட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது கட்டாயம்.

ஒரு கட்டத்தில் வல்லரசுகளையும் ஆட்டம் காண வைக்குமளவிற்கு இருந்த எமது மாபெரும் சக்தி இன்று வலிமை குன்றிப் போய்க் கொண்டிருப்பதை நாம் யாரும் மறந்துவிடக் கூடாது.

எனவே இன்றைய நமது சேவை நாளைய தலைமுறையினருக்காவது நன்மை பயப்பனவாக இருக்கட்டும். வருங்கால தலைமுறையினரிடம் நாம் எமது போராட்டத்தை திணிக்காமல் இன்றைய தலைமுறையினர் ஒன்றுசேர்ந்து எமக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு ஒவ்வொரு தமிழனும் அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வரவேண்டும்.

தவறு செய்பவர்களை விட அதைக்கண்டு கொள்ளாமல் இருப்பவர்களே மாபெரும் குற்றவாளிகள்.

**பெருமாள் கிருஷ்ணன் — கிளிநொச்சி**

தமிழ்த் தலைமைகள் ஒன்று சேர்ந்து எமக்கான சுயாட்சியைப் பெற்றுத்தர வேண்டும்.

**இராஜன் — யாழ்ப்பாணம்**

பேரினவாதிகள் சிறுபான்மை மக்களுக்கு கொடுப்பதாக சொல்லுவார்கள். ஆனால் தரமாட்டார்கள். எங்கள் தமிழ அரசியல்வாதிகள் சிங்களவன் கையில் கொடி கொடுக்க ஆட்டுவார்கள். முன்னுக்கு விட்டார்கள் கையில் நம்பிகையில்லா பிரேரணை தந்தார்கள்.

போஸ் கொடுத்த படி கொடுங்கோ என்றனர் சிரித்தபடி கொடுத்தேன்

நாங்கள் கொடுக்கத்தான் இருக்கிறோம். இனத்தை காட்டி கொடுக்கத்தான் இருக்கிறோம்.

**எஸ்.பி. வரன் — கொக்குவில்**

முதலில் தமிழன் ஒன்றுபட வேண்டும். சிந்திக்க வேண்டும். செயற்பட வேண்டும். உலகத் தமிழர்களை ஒன்று திரட்டி உலகநாடுகளுக்கு எமக்கு நடந்தேறும் அநியாயத்தை வெளிப்படுத்த வேண்டும்.

**பெரன் — கொற்றையூர்**

தன்மானமுள்ள எந்தவொரு தமிழனும் எம் தலைவருக்கு எதிராக செயற்படுவார்களாயின் அவர்களை தமிழினம் ஒருபோதும் மன்னிக்காது. சம்பந்தப்பட்டவர்கள் பெருந்தன்மையோடும் புரிந்துணர்வோடும் சிந்தித்து செயற்பட்டால் எம் தலைவனின் பாதையில் தமிழினம் வெற்றி கொள்வது உறுதி.

**தீசன் — யாழ்ப்பாணம்**

இருக்க வேண்டியவர்கள் இல்லை. அதனால் பலருக்கு குளிர் விட்டுப் போச்சு. இனி என்ன செய்ய. தமிழருக்கு பாணும் பருப்புக் கறியும் தான் என்று கடவுள் எழுதியபின் கத்திக் கதறி என்னத்தைக் கண்டு விடப் போகிறோம்.

**தனு — அல்வாய்**

மனிதாபிமானம் உள்ள எவரும் அரசியலமைப்பை எதிர்க்கமாட்டார்கள். முதலில் அதில் என்ன இருக்கிறது என்பதை அறிந்து கொண்டுவிட்டு அதன்பின் எதிர்ப்பைக் காட்டுங்கள்.

**தயா — யாழ்ப்பாணம்**

எல்லாவற்றிற்கும் ஒரு எல்லை இருக்கிறது. எல்லை இல்லாமல் கூட்டமைப்பின் விட்டுக்கொடுப்பு எதனால் என்று புரியவில்லை. அரசுடனான உறவை முறித்துக் கொள்ள வேண்டும்.

**கேதீஸ் — மாவிட்டபுரம்**

எவ்வளவோ இழப்புக்களை சந்தித்து அதற்கு பழக்கப்பட்ட தமிழினத்திற்கு இது பெரிய ஏமாற்றமல்ல. கூட்டமைப்பு தனது காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கிறது. ஆனால் தமிழர் விடயத்தில்....?

**இராசேந்திரம் — சங்கானை**

தீர்வைப் பெற்றுக் கொள்ளவே கூட்டமைப்பு அரசுடன் ஒட்டி இருக்கிறது என்றால் அரசியலமைப்பு சீர்திருத்தம் தமிழருக்கு அமையாது என்ற பின் ஏன் அரசுடன் இனியும் இருக்க வேண்டும்.

**தாஸ் — சண்டிலிப்பாய்**

இது நடக்காது இது வெறும் நாடகம் என்று எப்போதோ தெரிந்த விடயம். இந்த விடயம் பற்றி நான் பேச விரும்பவில்லை.

**தினேஸ் — திக்கம்**

வலம்புரியின் இன்றைய மக்கள் கருத்து சந்தர்ப்பத்துக்கு நன்றி, முதலில் தமிழ் அரசியல் தலைமைகளின் செயற்பாடு இடைக்கால அறிக்கையினை வெளியிடுவதற்கு பங்கு வகித்தல்.அதன் பின்னர் மகாநாயக்கர்களுக்கு அறிக்கை சம்பந்தமாக தெளிவுபடுத்தி தமிழர்களின் இனப்பிரச்சினைக்குரிய தீர்வு சம்பந்தமாக இணைந்து செயற்படுதல் காலத்தின் தேவையாகும்.

**துரை — துன்னாலை**

தந்தை செல்வா கூறியது போல தமிழரை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளபதி அமிர்தலிங்கத்தின் நினைவு நாள் யாழ்ப்பாணத்தில்



தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் அ.அமிர்தலிங்கம் மற்றும் அமரர் யோகேஸ்வரன் ஆகியோரின் 28 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில். வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் தமிழர் விடுதலைக்கூட்டணி அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் கலந்து கொண்டு அமரர்களின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். அமரர்களான அ.அமிர்தலிங்கம் மற்றும் யோகேஸ்வரன் ஆகியோர் கடந்த 1989 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 13 ஆம் திகதி கொழும்பில் தமிழர் விடுதலை கூட்டணியின் தலைமை செயலகத்தில் இருந்த போது சுட்டுப் படுகெலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-பொ.சோபிகா)




D.M.I. கணனிக் கற்கை நிறுவனத்தின் வருடாந்த விருது வழங்கல் விழா கடந்த 8ஆம் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் கற்கையினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்குவதையும் பேராசிரியர் எம்.சின்னத்தம்பி சிறப்புரையாற்றுவதையும் நிறுவனத்தின் முகாமைத்துவ இயக்குநர் இ.நிரோஷன் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## வடமாகாண கைத்தொழில் கண்காட்சியும் போட்டியும்

கைப்பணிக் கைத்தொழிலில் ஈடுபடும் கைப்பணியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக தேசிய அரங்கலைகள் பேரவையினால் தேசிய மட்டத்தில் வருடாவருடம் சில்ப கண்காட்சியும் போட்டியும் நடத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன. அதற்கமைவாக இவ்வாண்டும் ஓகஸ்ட் 4ஆம் வாரம் மாகாண கைத்தொழில் கண்காட்சியும் போட்டியும் வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தினால் யாழ்.மாவட்டத்தில் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்படுகின்ற ஆக்கங்கள் தேசிய மட்ட சில்ப அபிமானி 2017 போட்டிக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் மாகாண மட்டத்தில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பின்வரும் வகைகளின் கீழ் கைப்பணிக் கைத்தொழில்களை மேற்கொள்ளும் கைப்பணியாளர்கள் தங்கள் பிரதேச செயலகங்களில் உள்ள தொழிற்றுறைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அல்லது மாவட்ட செயலகத்தில் உள்ள தேசிய அருங்கலைகள் பேரவையின் உத்தியோகத்தர்கள் மூலமாக தொடர்பு கொண்டு தங்கள் ஆக்கங்களைக் கையளிப்பதன் மூலம் கண்காட்சியில் பங்குபற்றி பயன் பெறமுடியும்.

கைத்தறி நெசவு உற்பத்திகள், களிமண் உற்பத்திகள், தும்பு,ஓலை,புல் சார்ந்த உற்பத்திகள், பிரம்பு மூங்கில் குழாய் சார்ந்த உற்பத்திகள், உலோக கைப்பணிப் பொருட்கள், ஆபரணங்கள் (உலோக,கல்பதித்த நானாவித ஆபரணங்கள்), முகமூடிகள் மற்றும் பாவைகள், சங்கீத உபகரணங்கள், துணிகள் மற்றும் துணிகளினாலான கைப்பணிப் பொருட்கள் (தையல் எம்புரொயிடர், இயந்திர எம்புரொயிடர், துணிகளில் வர்ணம், பெச்வேக், பாரம்பரிய துணி வேலைப்பாடு), பற்றிக், ரேந்தை, மர உற்பத்திப் பொருட்கள், தோற் பொருட்கள், கற்கள் மூல கைப்பணிப்பொருட்கள், பாரம்பரியக்கலை வரைபுகளும் சிற்பங்களும், தென்னை, பனை,கித்துள் சார்ந்த உற்பத்திகள், நானாவித கைப்பணிப் பொருட்கள் (கடதாசி,பல்ப் சார்ந்த உற்பத்திகள், மரத்தூள் பொருட்கள், சிப்பி ஓடுகள், பல தரப்பட்ட மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கைப்பணிப் பொருட்கள்), நினைவுச் சின்னங்கள்.

குறிப்பு:- ஓகஸ்ட் 15ஆம் திகதிக்கு முன்பு போட்டியில் பங்குபற்றவுள்ள கைப்பணியாளர்கள் தமது ஆக்கங்களை கையளிப்பதற்கு தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும் என யாழ். மாவட்ட கைப்பணி அபிவிருத்தி சங்க செயலாளர் சு.பத்மநாதன் அறிவித்துள்ளார். (இ)

## மண்டபத்திறப்பு

(யாழ்ப்பாணம்)

புத்தூரைச் சேர்ந்த அமரர்களான பரமநாதர் குகதாசன், திருமதி.சின்னம்மா குகதாசன் ஆகியோர் நினைவாக குகதாசன் குகானந்தனால் நிர்மாணிக்கப்பட்ட அன்னதான மண்டபத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் புத்தூர் விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமான் தேவஸ்தானத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-3)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

புலோலி புத்தூர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை கலையரங்கில் அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தொழில்நுட்பபீடத்தின் பீடா [illegible] கலந்து கொள்வார். [illegible]


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5’9"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7544 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா:32 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5’2’<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: G/7568 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5’4’<br>தகைமை/தொழில்:A/L/கனடா PR<br>தொ.இ: B/7547 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 53 செவ் 8 இல்<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/7569 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 92 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:O/L/அரச தொழில்<br>தொ.இ: B/7548 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 113 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5’8’<br>தகைமை/தொழில்: பட்டதாரி/வங்கியாளர்<br>தொ.இ: G/7570 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி/தனியார் தொழில்<br>தொ.இ: B/7549 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 8<br>உயரம்: 5’2’<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/7573 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரில் நிலநடுக்கம்

(சிங்கப்பூர்)

பப்புவா நியூ கினியாவின் ரபாயுல் நகரத்தில் நேற்றுக் காலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந் நிலநடுக்கத்தால் உயிர்ச்சேதமோ, பெரிய அளவில் பொருட் சேதமோ ஏற்பட்டதாக தகவல் இல்லை.


தென் பசுபிக் நாடுகளில் ஒன்றான பப்புவா நியூ கினியாவின் ரபாயுல் நகரத்தில் நேற்றுக் காலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந் நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.7 புள்ளிகளாக பதிவாகியுள்ளது.

நில நடுக்கத்தால் உயிர்ச்சேதமோ, பெரிய அளவில் பொருட்சேதமோ ஏற்பட்டதாக தகவல் இல்லை. இந்த நிலநடுக்கம் நியூ பிரிட்டன் தீவிற்கு 128 கி.மீ. கிழக்கில், 33 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் அமெரிக்காவின் ஹவாய் தீவை மையமாக கொண்ட பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம், சுனாமி எச்சரிக்கை எதையும் விட்டதாக தகவல் இல்லை. (3-8)

# சிறையிலிடப்பட்டார் முன்னாள் ஜனாதிபதி



(பிரேசில்லா)

ஊழல் மற்றும் பண முறைகேடு செய்ததற்காக பிரேசில் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலாவுக்கு 9 அரை ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தென் அமெரிக்க நாடான பிரேசிலில் 2003 முதல் 2010 வரை ஜனாதிபதியாக பதவி வகித்தவர் லூயிஸ் இனாசியோ லுலா. இவரது பதவிக்காலத்தில் ஊழல் மற்றும் சட்ட விரோதமாக பணப்பரிமாற்றம் செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதனையடுத்து அவர் மீதான வழக்கு அந்நாட்டு நீதிமன்றத்தில் நடந்தது.

இந்நிலையில், இந்த வழக்கின் மீதான தீர்ப்பு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

அதில், முன்னாள் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலா குற்றவாளி என்று நீதிமன்றம் அறிவித்தது. மேலும், 9 அரை ஆண்டுகள் அவருக்கு சிறைத் தண்டனை விதித்தும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (3-8)

# காஷ்மீர் பிரச்சினையில் தலையிடுகின்றது சீனா



(பீஜிங்)

காஷ்மீர் பிரச்சினை உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்து இருப்பதாகவும், இந்த பிரச்சினையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இந்தியா-பாகிஸ்தான் இடையேயான உறவை மேம்படுத்த ஆக்கபூர்வ மான உதவிகளை செய்ய சீனா தயாராக இருப்பதாகவும் அந்த நாட்டு வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் கெங் சுயாங் தெரிவித்துள்ளார்.

சீன தலைநகர் பீஜிங்கில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் மேற்கண்டவாறு கூறிய அவர், இந்தியா-பாகிஸ்தான் இடையே ஏற்பட்டுள்ள பதற்ற நிலை அந்த இரு நாடுகளுக்கும் மட்டும் அல்லாமல் தெற்காசிய பிராந்தியத்தின் அமைதிக்கும், நல்லிணக்கத் துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் தெரி வித்தார்.

காஷ்மீர் பிரச்சினையில் மூன்றாவது நாட்டின் தலையீட்டை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று இந்தியா ஏற்கனவே திட்டவட்டமாக அறிவித்து இருக்கும் சூழ்நிலையிலும், சிக்கிம் மாநில எல்லையில் இந்திய ராணுவத்துடன் சீன ராணுவம் மோதல் போக்கை கடைப்பிடித்து வரும் நிலையிலும் சீன வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் இவ்வாறு தெரிவித்திருப்பது, காஷ்மீர் பிரச்சினையில் அந்த நாடு மூக்கை நுழைக்க முயற்சிப்பதையே காட்டுவதாக அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள். (3-8)

# விதிகளை மீறி சிறப்பு வசதிகள்

## டி.ஐ.ஜி. ஆய்வில் தகவல்



(பெங்களூர்)

சொத்து குவிப்பு வழக்கில் தண்டனை பெற்று பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலாவுக்கு விதிகளை மீறி சிறப்பு வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டு உள்ளதாக சிறைத்துறை பொலிஸ் டி.ஐ.ஜி. ரூபா தகவல் வெளியிட்டுள்ளார்.

சொத்து குவிப்பு வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அ.தி.மு.க. (அம்மா) அணி பொதுச்செயலாளர் சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோர் பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர்.

இந்த நிலையில், சசிகலாவுக்கு சிறையில் சட்டவிரோதமாக சிறப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு உள்ளதாக தகவல்கள் வெளியாகின. இதை சிறைத்துறை அதிகாரிகள் தொடர்ந்து மறுத்து வந்தனர்.

கடந்த 2 வாரங்களுக்கு முன்பு கர்நாடக சிறைத்துறையின் முதல் பெண் அதிகாரியாக பதவியேற்ற டி.ஐ.ஜி. ரூபா பரப்பனஅக்ரஹாரா சிறையில் திடீர் சோதனை நடத்தி உள்ளார்.

இந் நிலையில் கர்நாடக சிறைத்துறை டி.ஜி.பி. சத்திய



நாராயணர்ராவ் இந்த திடீர் சோதனை தொடர்பாக டி.ஐ.ஜி. ரூபாவிற்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

இதற்கு பதில் அளிக்கும் வகையிலும் சோதனையின் போது தெரியவந்த விபரங்கள் குறித்தும் கர்நாடக சிறைத்துறை டி.ஜி.பி. சத்திய நாராயணராவுக்கு டி.ஐ.ஜி. ரூபா கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

சொத்து குவிப்பு வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் தோழி சசிகலாவுக்கு தனி சமையல் அறை உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளன.

சிறை விதிமுறைப்படி இது தவறு. இச்சலுகை இன்னும் தொடருவதாக உள்ளது. இதற்காக தாங்களுக்கு ரூ.2 கோடி இலஞ்சம் வழாங்கப்பட்டு இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

சிறையில் ஆய்வு செய்ததை எதிர்த்து எனக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்கள். சிறைத்துறை டி.ஐ.ஜி. என்ற முறையில் சிறையில் ஆய்வு செய்ய எனக்கு உரிமை உள்ளது.

அதன்படி ஆய்வு செய்துள்ளேன். இதுபற்றி விசாரணை நடத்தி பாரபட்சமின்றி தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன்மூலம் தாங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள களங்கத்தை போக்க வேண்டும் என்றுள்ளது. (3-8)

# தற்கொலைப்படைத் தாக்குதலில் தீவிரம் காட்டும் தீவிரவாதிகள்



(அபுஜா)

நைஜீரியா நாட்டில்போகோ ஹராம் தீவிரவாதிகள் பொது மக்களை குறி வைத்து தொடர்ச்சியாக பல்வேறு தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதில் ஏராளமானோர் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நைஜீரியா நாட்டின் மைதுகுரி நகரில் போகோஹராம் தீவிரவாதிகள் 4 பேர் தற்கொலைப் படை தாக்குதல் நடத்தினர்.

இக் கொடூர தாக்கு தலில் அப்பாவி பொதுமக்கள் 19 பேர் பரிதாபமாக கொல்லப்பட்டனர்.

வடக்கு நைஜீரியாவின் மைதுகுரி நகரில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளில் ஒருவர் இளம் வயதுடைய பெண் என்பது தெரியவந்துள்ளது. இதுபோன்று இளம் வயது பெண்களை கேடயமாக பயன்படுத்தி போகோ ஹராம் தீவிரவாதிகள் தொடர்ச்சியாக தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

தீவிரவாதிகளிடம் இருந்து தப்பித்து வந்த சில பெண்கள், போதைப் பொருட்களை வழங்கி இது போன்ற தற்கொலைப் படை தாக்குதலில் ஈடுபடுத்த வைக்கப்படுவதாக தெரிவித்தனர். (3-8)

# சிரியாவில் 12 பேர் பலி

(டமாஸ்கஸ்)

சிரியாவின் இத்லிப் நகரத்தில் தற்கொலைப்படை தீவிரவாதி நடத்திய கோர தாக்குதலில் 12 பேர் பலியானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரியாவின் வடமேற்கு மாகாணத்தில் உள்ள இத்லிப் நகரில் நேற்று முன்தினம் பயங்கர வெடிகுண்டுகளை உடலில் கட்டி வந்த தற்கொலைப்படை தீவிரவாதி, அந்நகரில் இருக்கும் ஆடை உற்பத்தி தொழிற்சாலை வளாகத்தில் குண்டு வெடிப்பை நிகழ்த்தினான்.

இந்த கோர தாக்குதலில் 12 பேர் பலியானதாகவும், பலர் காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த தாக்குதலை அரசுப்படைகளுக்கு எதிராக போரிட்டு வரும் கிளர்ச்சியாளர்கள் குழுவான ஹயாத் தாஹிர் நிகழ்த்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

ஹயாத் தாஹிர் குழுவானது முக்கிய தீவிரவாத இயக்கமான அல் கொய்தாவுடன் தொடர்பில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்லிப் நகரில் ஏற்கனவே ஐ.எஸ் தீவிரவாதிகளும் பல்வேறு தாக்குதலை இதற்கு முன்னதாக நிகழ்த்தியுள்ளனர். (3-8)

# சவுதியில் தீ விபத்து



(ஜெட்டா)

சவுதி அரேபியாவில் வெளிநாட்டு தொழிலாளர்கள் தங்கும் வீட்டில் ஏற்பட்ட தீவிபத்தில் 10 இந்தியர்கள் பலியான தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் ஒரு வீட்டின் ஏ.சி. இயந்திரத்திலிருந்து திடீரென ஏற்பட்ட மின்கசிவு காரணமாக தீப்பற்றியது.

இதையடுத்து, வீடு முழுவதும் தீ பரவியது. இக்கோர விபத்தில் இந்தியாவைச் சேர்ந்த 10 தொழிலாளர்கள் மற்றும் பங்களாதேஷத்தைச் சேர்ந்த ஒருவரும் உயிரிழந்துள்ளதாகவும் மேலும், 6 இந்தியர்கள் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீயை அணைக்கும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டுள்ளதாகவும், தீ விபத்து தொடர்பாக விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் நஜ்ரன் மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். பலியானவர்களின் விபரங்கள் இன்னும் வெளியாகவில்லை.

தீ விபத்து குறித்து கவலை தெரிவித்துள்ள மத்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ், பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தூதரகம் செய்யும் என தெரிவித்துள்ளார். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ICBT HND QUANTITY SURVEYING

» Entry Qualifications
- G.C.E. A/L or Equivalent
- Certificate in related field

» Duration: 2 Years

★ All HND's are equal to NVQ Level 06
★ All HND's are mapped to British qualification frame work (NQF Level 5)

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

BIRMINGHAM CITY University

RICS Accredited

# BSc (Hons) Quantity Surveying

» Entry Qualifications
Higher National Diploma in Quantity Surveying or any other accepted programs.

UGC RECOGNIZED

Week End Part Time Classes

» Duration: 1 Year

Progression Route to RICS BSc + APC → MRICS DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector




# ICBT DUAL HNDs Software Engineering + Computing

TVEC REGISTERED

★ All HND's are equal to NVQ Level 06
★ All HND's are mapped to British qualification frame work (NQF Level 5)

Cardiff Metropolitan University

UGC RECOGNIZED

# BSc (Hons) SOFTWARE ENGINEERING

Offered by Cardiff Metropolitan University, UK

Duration 1 year

Entry Qualifications
Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

A/L | O/L → HND → BSc DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk

(C-9058)



Cardiff Metropolitan University

SRI LANKA'S MOST ACCEPTED BRITISH

# MBA

MASTER OF BUSINESS ADMINISTRATION

in Jaffna

(4th Batch in Jaffna)

This MBA is aimed at those who are looking to develop their careers and at 'High Flyers' that need and understanding of all the major functions of business.

In addition to enhancing successful student's career prospects. This programme is delivered in Sri Lanka at ICBT Campus and is the identical programme conducted in UK.

Entry Qualification
- Degree in Business or related areas
- Any other Degree or Equivalent + 2 Years Working experience.
- DBF + 2 Years of Banking service
- Any other part qualification with not less than 5 Years of Managerial level work experience would be considered.

- Classes only on Sundays
- Hurry-up to claim early-bird discount

REGISTRATION NOW ON FOR SEPTEMBER INTAKE - 2017

Teaching Excellence Framework TEF Silver
Cardiff Metropolitan University has been awarded the Silver Teaching Excellence Framework (TEF) rating in the recent results published by the Higher Education Funding Council for England (HEFCE) - UK.

ICBT CAMPUS JAFFNA | EQAA | National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
More Information 0770 746 553
merojan@icbtcampus.edu.lk

Cardiff Metropolitan University

2nd Batch in Jaffna




BSc (Hons) in Business & Management Studies from Cardiff Metropolitan University will give you the skills and knowledge to help you begin your career in the business world or enhance your professional Development.

If you are already employed this course will provide you with a strong range of subjects covering generic management skills as well as specific areas.

BSc
HIGHER DIPLOMA
G.C.E. A/L or G.C.E. O/L + Foundation

Other routes of entry (Eg: CIMA, ACCA, CBF, DBF etch)

Duration: One Year

Classes only on Sundays

REGISTRATION NOW ON FOR SEPTEMBER INTAKE - 2017

Teaching Excellence Framework TEF Silver
Cardiff Metropolitan University has been awarded the Silver Teaching Excellence Framework (TEF) rating in the recent results published by the Higher Education Funding Council for England (HEFCE) - UK.

ICBT CAMPUS JAFFNA | EQAA | National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
More Information 0770 746 553
merojan@icbtcampus.edu.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்கள் 41 பேரின் கைகளில் வெட்டுக் காயங்கள்

## போதைக்கு அடிமையா என சந்தேகம்

(கொழும்பு)

மெதிரிய கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலையொன்றில் 41 மாணவ மாணவியரின் கைகளில் வெட்டுக் காயங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தரம் 10 மற்றும் 11 ஆம் தரங்களைச் சேர்ந்த மாணவ மாணவியரின் கைகளில் இவ்வாறு வெட்டுக் காயங்கள் காணப்படுகின்றன.


ஏதோ ஓர் வகை போதைப் பொருளைப் பயன்படுத்திய தன் பின்னர் இவ்வாறு கைகளை மாணவ மாணவியர் வெட்டிக் கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களின் அசாதாரண செயற்பாடுகளை அவதானித்த பிரதி அதிபர் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கைகளில் வெட் டுக் காயங்களை ஏற்படுத்திக் கொண்டவர்களில் ஏழு மாணவிகள் உள்ளடங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புலிகள் தோற்கடிக்கப்பட்டதை சர்வதேசம் அங்கீகரித்துள்ளது

## தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்



(கொழும்பு)

அமைச்சர்கள் புதிய வாகனங்களை விற்பனை செய்து அந்தப் பணத்தை டெங்கு நோயாளிகளுக்கு செலவிட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன கோரியுள்ளார்.

நாடு டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் எளிமையான வாழ்க்கைக்கு பழகிக் கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதனை சர்வதேசம் அங்கீகரித்துள்ளது என குறிப்பிட்டுள்ள அவர் இது தொடர்பில் சில வெளிநாடுகளில் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும் எமது நாட்டு அரசாங்கம் நாட்டுக்கு எதிராக ஜெனீவாவில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக தெரிவித்த தினேஷ் குணவர்த்தன இந்த அரசாங்கம் ஜன நாயகத்திற்கு அஞ்சுகின்றது எனவும் இதனால்தான் தேர்தல் நடத்த காலம் தாழ்த்தி வருகின்றது எனவும் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7)

# பலவந்த காணாமல் போதல்; அரசின் நிலைப்பாடு பொய்

## ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு



பலவந்த காணாமல் போதல் குறித்த பிரகடனம் தொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாடு பொய்யானது என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பலவந்த காணாமல் போதல்கள் குறித்த பிரகடனத்தின் ஊடாக எதிர்கால குற்றச் செயல்களுக்கு மட்டும் தண்டனை விதிக்கப்படாது எனவும் கடந்த கால பிரச்சினைகளுக்கும் தண்டனை விதிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த சட்டத்தைக்கொண்டு படையினரையும் அரசியல் தலைமைகளையும் தண்டிக்க முடியும் என அவர் மீளவும் வலியுறுத்தியுள்ளார்.

வெளிநாடுகளுக்கு பயணங்களை மேற்கொள்ளும் போது இலங்கையர்களை கைது செய்து தண்டிக்கக் கூடிய சட்ட ஏற்பாடுகள் இந்த சட்டத்தில் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட முடியும் எனவும், பிரித்தானியா, கனடா மற்றும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் இந்த பிரகடனத்தில் கையொப்பமிடவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 90 லட்சம் பெறுமதியான கேரளக் கஞ்சா பறிமுதல்

மன்னார் வளைகுடா கடல் வழியாக இலங்கைக்கு கடத்த இருந்த சுமார் 90 இலட்சம் ரூபா பெறுமதியான கேரளக்கஞ்சா, பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய சொகுசு கார் என்பன நேற்று முன்தினம் தமிழ்நாட்டு பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கடத்தல்காரர்கள் பொலிஸாரை கண்டதும் தப்பி ஓடியுள்ளதாகவும் அவர்களை மண்டபம் பகுதி பொலிஸார், தனிப்படை அமைத்து தேடி வருகின்றனர் .

மன்னார் வளைகுடா கடல் வழியாக இலங்கைக்கு கள்ளத் தோணியில் கேரளக் கஞ்சா மற்றும் தடைசெய்யப்பட்ட கடல் அட்டைகள் கடத்த இருப்பதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதனையடுத்து மண்டபம் பொலிஸார் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்

அப்போது இராமேஸ்வரம் தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலையில் அரியமாண் கடற்கரை அருகே சந்தேகத்திற்கு இடமான முறையில் ஆட்கள் இல்லாமல் நின்று கொண்டிருந்த சொகுசு காரை சோதனை செய்த போது அதில் 90 கிலோ கேரளக் கஞ்சா மற்றும் தடை செய்யப்பட்ட கடல் அட்டைகள் காரில் மறைத்து வைத்து இருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து சொகுசு கார் மற்றும் கடத்தல் பொருட்களை பறிமுதல் செய்த மண்டபம் பொலிஸார் , தப்பி ஓடிய கடத்தல்காரர்களை தனிப் படை அமைத்து தேடி வருகின்றனர்.

பறிமுதல் செய்யப்பட்ட கேரளக் கஞ்சா மற்றும் கடல் அட்டைகளின் சர்வதேச மதிப்பு சுமார் 90 இலட்சம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 10 தினங்களில் மன்னார் வளைகுடா கடலோரப்பகுதிகளில் சுமார் மூன்று கோடி மதிப்பிலான தடைசெய்யப்பட்ட கடல்அட்டைகள் மற்றும் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-9)

## இன்று ஒரு தகவல்

### ஆள் தங்குவதில்லையே ஏன்?

என்னுடைய ஒரு சில குடும்ப நண்பர்கள் இன்ன உதவிதான் கேட்பது என்று இல்லாமல், " எங்கள் வீட்டிற்கு ஒரு மேல் வேலைக்காரி வேண்டும்.சேர்த்து விடக் கூடாதா?" என்பார்கள். ''சமையற்காரர் வேண்டும். உதவக்கூடாதா?" என்பார்கள்.

நானும் வேலைமெனக்கெட்டு அங்கிங்கு சொல்லி வைத்து ஆள் சேர்த்து விடுவது உண்டு.நான் சேர்த்து விடும் வேலையாட்கள் மாதக் கணக்கில் தான் இருப்பார் கள். ஆண்டுக் கணக்கில் இருந்ததாகச் சரித்திரமே இல்லை.

கொஞ்ச நாள்களுக்குகெல்லாம் மறுபடி "நல்ல ஆளா இருந்தாச் சொல்லுங்களேன்!" என்பார்கள். இது கூடப் பரவாயில்லை.

திடீரென்று போன் வரும் "நல்ல ஆளைச் சேர்த்து விட்டீங்க போங்க! எங்க துணிகளோட அவன் துணியையும் ஒண்ணாக் காயப் போடுறான்'' என்றெல்லாம் ஆரம்பித்து விடுவார்கள்.

சரி என்று மறுபடி ஆளைப் சேர்த்து விட்டால் அவனையும் காலி செய்து விட்டு மீண்டும் பழைய பல்லவி .''அவன் சரியில்ல[illegible] வேலையை விட்டு நிறுத்திட்டோம். வேறு நல்ல ஆள் இருந்தாச் சொல்லுங்களேன்.

அலுத்துச் சலித்து விட்டது எனக்கு நான் சேர்த்து விட்ட ஆசாமிகள் எல்லோரும் பத்தரை மாத்துத் தங்கங்கள் என்பதல்ல என் வாதம்.

தங்கள் தவறுகளையும் குறைகளையும் சற்றும் உணராமல் வேலையாட்கள் செய்யும் சிறு தவறுகளைக் கூடப் பொறுத்துக் கொள்ளாமல் சேர்த்து விட்டவர்களுக்கு உண்டாகக்கூடிய தர்மசங்கடத்தைக் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் ஏதோ கியூவில் வேலைக்கு ஆள் நிற்பது போல் ஒவ்வொருவராகக் காலி செய்வதும் பிறகு எல்லா வேலைகளையும் இழுத்துப் போட[illegible]க் கொண்டு பார்க்க முடியாமல், செய்யவும் முடியாமல் திணறி, வேலைக்கு ஆள் தேவை என்று பரிதாபமாகக் கெஞ்சுவதும், வேலைக்கு ஆள் சேர்த்த உடனேயே மாமியார் மனப்பான்மையுடன் நடந்து கொள்வதும்–அப்பப்பா!இந்த மனிதர்கள் திருந்தவேமாட்டார்களா என்று தோன்றும். காலம் மாறி வருகிறது. வேலை பார்ப்பவர்கள் விபரமான ஆட்களாக இருக்கிறார்கள். என்ன சொன்னாலும் என்ன செய்தாலும் நாயாக் கிடந்த காலம் அந்தக் காலம். மனிதர்கள் எல்லோரும் குறைபாடுடையவர். பெரிய குறைபாடுகள் இல்லாதவரை இவர்களுடன் சரி செய்து கொண்டு போவது தான் சாமர்த்தியம்.

அவர்களுக்கும் உணர்ச்சிகள் உண்டு. அவர்களிடம் கோபத்தை மட்டும் காட்டக் கூடாது. அவர்களை மரியாதையாக நடத்த வேண்டும்; கொஞ்சமேனும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்; பிரியம் சற்றேனும் இருக்க வேண்டும்; மனிதாபிமானம் காட்டப்பட வேண்டும்; தலையில் குட்டி வேலை வாங்குவதை விடத் தட்டிக்கொடுத்து வேலை வாங்க வேண்டும். அவர்களது கஷ்டத்தைப் பார்த்து அவ்வப்போது ஏதாவது உதவிகள் செய்ய வேண் டும்.

இவற்றையெல்லாம் புரிந்து கொள்ளாமல் அந்தக்கால மிராசுதார் பாணியில் நடந்து கொண்டால் –ஒரு போதும் ஆள் தங்காது!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2008 வினாத்தாள் பகுதி-1

♦ 30. 31 ஆகிய வினாக்களில் இரு நிகழ்ச்சிகளின் ஐந்து சந்தர்ப்பங்களுக்குரிய உருக்கள் ஒழுங்கு வரிசை மாற்றப்பட்டு A,B,C,D,E எனத் தரப்பட்டுள்ளன. அவ்வுருக்களில் காணப்படும் நிகழ்ச்சிகளின் சரியான ஒழுங்கு வரிசை இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.


30. ஒரு பிள்ளை நித்திரை விட்டெழுந்து ஆயத்தமாகி பாடசாலைக்குப் புறப்படுதல்.



A B C D E

1) B,C,A,D,E 2) B,C,E,D,A 3) C,B,D,E,A 4) A,D,C,B,E

31. ஒரு பிள்ளை பாடசாலைக்குச் சென்று வகுப்பறையில் பாடத்தில் பங்குபற்றல்.




A B C D E

1) A,C,E,D,B 2) C,E,D,A,B 3) C,D,E,A,B 4) E,C,D,B,A


32.




ஆகிய இரு உருக்களையும் சேர்க்கும் போது கிடைக்கும் உரு எது?



33.



ஆகிய இரு உருக்களையும் சேர்க்கும்போது கிடைக்கும் உரு யாது?



♦ 34 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

♦ 34, 35 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள விபரங்களினால் குறிக்கப்படும் சொல்லை எழுதுக.

34. முதலெழுத்து சந்தியில் உண்டு ஆனால் பந்தியில் இல்லை.
இரண்டாம் எழுத்து பக்தியில் உண்டு ஆனால் பகுதியில் இல்லை.
மூன்றாம் எழுத்து அகதியில் உண்டு அகழியில் இல்லை.
.............................

35. முதலெழுத்து தருமத்தில் உண்டு. ஆனால் கருமத்தில் இல்லை.
இரண்டாம் எழுத்து பவளத்தில் உண்டு ஆனால் பவனத்தில் இல்லை.
மூன்றாம் எழுத்து திரவத்தில் உண்டு ஆனால் அரவத்தில் இல்லை.
..................................

♦ 36. 36, 37 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் குறிப்பிடப்படும் விடயத்தை எழுதுக.

36. நான் வானத்தில் பறப்பேன். மிகவும் மேலே உள்ள வானத்தில் முகில்களுக்கிடையேயும் நான் சிலவேளைகளில் பறக்கின்றேன். சிறகுகளை அசைக்காமல் என்னால் பறக்கத்தக்கதாக இருத்தல் புதுமையான விடயமாகும். நான் பறக்கும்போது சத்தம் உண்டாகின்றமையினால் கீழே உள்ளவர்கள் நான் பறப்பதை அறிந்துகொள்வர். விசேடமாக சிறிய பிள்ளைகள் என்னைப் பார்த்து மகிழ்ச்சி அடைவதை நான் அறிவேன். நான் மரங்களில் தங்கியிருப்பதில்லை. நான் விசேட இடங்களில் மாத்திரமே இறங்குவேன்.
.................................

37. நான் பல்வேறு நிறங்களைக் கொண்டுள்ளேன் சில வேளைகளில் சிவப்பாக இருப்பேன். கபில நிறமாக இருப்பேன். நீல நிறமாக இருப்பேன். வெண்ணிறமாக இருப்பேன். சில வேளைகளில் எனக்கு நிறமே இல்லை. சில விசேட சந்தர்ப்பங்களில் மனிதர்கள் என்னைக் குடிப்பர். என்னைக் குடிப்பதன் மூலம் மனிதருக்கு நன்மையன்றித் தீமை ஏற்படுவதில்லை. எனினும் பெரும்பாலானவர்கள் விருப்பமின்றி என்னைக் குடிப்பதை நான் அறிவேன். விசேடமாகச் சிறு பிள்ளைகள் என்னைக் குடிக்க விரும்புவதில்லை.
.......................................

பின்வரும் இரு கவிதைகளையும் கொண்டு 38,39 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக.

சித்திரை வந்தால் வசந்தம் பிறக்கும்
வண்ண வண்ண பூக்கள் எங்கும்
கொத்துக் ............ மலர்ந்து பொலியும்
இக்காட்சிதனைக் காண களிப்புடன் வாரீர்

பூக்களில் வண்டு தேன் குடிப்பதைப் பாரீர்
மகிழவுடன் பாடல் இசைப்பதைக் கேளீர்
சிறகடித்து எழுந்து அங்கும் இங்கும்
செல்வதைப் பாரீர் அதோ செல்வதைப் பாரீர்

38. i) வண்ண வண்ணப் பூக்கள் என்பதன் கருத்து யாது? ...............................
ii) வண்டுகள் எவற்றின் மீதிருந்து பாடல் இசைக்கின்றன? ..............................

39. i) முதல் கவிதையில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஒரு சொல்லை முதுக.
...................................................
சந்தோசமாக என்னும் கருத்தைத் தரும் இரு சொற்களும் யாவை?
...................................................

40. பின்வரும் பந்தியில் வெற்றிடங்களுக்கு மிகவும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து வெற்றிடங்களை நிரப்புக.


ஒருவர் தனது நண்பனுடன் ஒரு காட்டின் நடுவே செல்லும்போது ஒரு பயங்கரமான புலி முன்னால் வருவதைக் கண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒரு மரத்தில் ஏறினார். மற்றையவர் மரத்தில் ஏறுவதற்கு .................... (விருப்பம்/ பழக்கம்/ நாட்டம்) இல்லாமையால் இறந்தவர்போல நிலத்தில் ......................(படுத்துக் கிடந்தார்/ விழுந்தார்/ அமர்ந்தார்)

## 07.07.2017 அன்று பிரசுரிக்கப்பட்ட பகுதி-2 வினாக்களின் விடைகள்

01. இரவு / இரவுப் பொழுது
02. பூத்துணி/பூத்துணி போல
03. சேய்மை/ சேய்மையில்
04. கடல்/ ஆழி/சாகரம்/ பரவை
05. கற்பாறை/கற்பாறையை
06. அவை
07. எதையும் ஆராய்ந்து செய்தல்/ சிந்தித்துச் செயற்படல்
08. கோபம் அறிவைக் கெடுத்துவிடும்
09. i) நூலகம் ii) மாணவன் iii) வழக்கு vi) விமானம்
10. நண்பி பாட்டுப் பாடினாள்
11. உங்களுக்கு வெற்றி உண்டாகுக.
12. அகிம்சை/ காருண்ணியம்
13. செய்திகளை வெளியிடுவதில் பத்திரிகை பிரதான இடம் வகிக்கிறது./ பத்திரிகை செய்திகளை வெளியிடு வதில் பிரதான இடம் வகிக்கிறது.
14. i) Kite/KITE ii) parrot
15. எனக்குப் பசிக்கிறது/ நான் பசியோடு இருக்கிறேன்
16. What is your name?/ What's your name?
17. இங்கே வாருங்கள்/ இங்கே வா
18. கிரி பொன்ன

| | | |
|---|---|---|
| 19. 3) | 27. 2) | 35. 1) |
| 20. 1) | 28. 2) | 36. 3) |
| 21. 1) | 29. 3) | 37. 3) |
| 22. 4) | 30. 1) | 38. 2) |
| 23. 2) | 31. 2) | 39. 4) |
| 24. 3) | 32. 1) | 40. 2) |
| 25. 2) | 33. 3) | 41. 3) |
| 26. 1) | 34. 2), 1) | 42. 4) |

43. சந்திரவட்டக்கல்
44. சிகிரிய ஓவியம்/ சிகிரிய மாதர்
45. i) எல்லே ii) கிரிக்கெட்
46.



47. i) 15 ii) 15
iii) பொருத்தமாக நிழற்றியிருப்பர்
iv) 145/ 15+30+25+40+35+=145
48. 13/13m
49.



50. 303km
51. ரூபாய் 59 சதம் 50
52. 27 kg
53. 4 l 500ml
54. 10.30 ஐ மணிக்கூட்டு முகப்பில் குறிப்பர்.
55. ரூபாய் 2100. 00
56. 0.2 / .2
57. 108 பேருக்கு. மீதி 2
58. 32 m
59. பொருத்தமான வாக்கியங்களை எழுவாய் பயனிலைத் தொடர்புடன் சரியாக எழுதியிருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2008 வினாத்தாள் பகுதி-2

♦1. பின்வரும் கவிதைகளை வாசிக்க.

செக்கச் சிவந்த செங்கதிரோனும்
கிழக்கினில் வந்து விட்டான்-புவி
மக்கள் கண்விழித்துக் கிளம்பிட
வானில் உதித்து விட்டான்

கொக்கரக்கோவெனக் கோழியும் கூவுது
கொக்கோடு பற்பல புற்களும் மேவுது
சக்கரம் போலவே ஜகம் சுழன்றாடுது
தொக்கி நின்ற இருள் சொல்லாமல் ஓடுது.

(பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்)

இக்கவிதகளைப் பயன்படுத்தி கீழே கேட்கப்பட்டவினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

i) இக்கவிதைகளில் வர்ணிக்கப்படும் காட்சி என்ன என்பதை எழுதுக. ............
ii) பின்வரும் ஒவ்வொன்றினதும் கருத்தை எழுதுக.
அ) செக்கச் சிவந்த ..................
ஆ) கண் விழித்த ....................
iii) இங்குள்ள ஓர் உவமானத்தை எழுதுக. ..............................................
vi) இக்கவிதையில் குறிக்கப்படும் இரு பறவைகளின் பெயர்களை எழுதுக.
v) "நின்ற இருள் சொல்லாமல் ஓடுது" என்பதன் மூலம் கவிஞர் வெளிப்படுத்த முயலும் கருத்து யாது? ..............................................

2. பின்வரும் தொடர்கள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் கருத்தை எழுதுக.
i) விளையும் பயிரை முளையில் தெரியும் ..............................................
ii) சாடிக்கேற்ற மூடிபோல ..............................................


3. பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் நிறுத்தற்குறிகள் இடுக.
i) அந்த மலரில் சிவப்பு நீலம் ஊதா ஆகிய நிறங்கள் உள்ள இதழ்கள் ஆறு உண்டு.
ii)தந்தையே நீடூழி வாழ்க

4. அடைப்பினுள்ளே இருக்கும் சொற்களை மாத்திரம் பயன்படுத்திச் சரியான கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்கள் இடம்பெற வேண்டும் ஒரு சொல்லை ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்துக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அம்மா | துலக்கினாள் | உணவு | உலாவி | விடியற்காலையில் | புத்தகத்தில் |
| தங்கை | வந்தேன் | பாடங்களை | எனது | நேற்று | பை |
| நான் | சமைத்தாள் | பல் | பாடசாலைக்கு | கவி | முந்தநாள் |
| நண்பன் | செய்தாள் | ஆயத்தம் | இரவில் | தமிழ் | வேலை |

i)..............................................
ii)..............................................
iii)..............................................

5. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை எழுதுக.

i)  This is a ..............................................

ii)இரவு என்பதற்குரிய ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.
..............................

6. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
" தயவு செய்து உங்கள் பேனையை எனக்குத் தாருங்கள்"
..............................................

♦7. 8 ஆகிய வினாக்களில் உள்ள வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

7. I will Bring Flowers ..............................................
8. மகே கம யாபணய ..............................................
9. "இங்கு வாருங்கள்" எனும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக.
..............................................

10 தொடக்கம் 35 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

10. இவ்வுருவில் உள்ள தாவரம்



1) நன்னாரி 2) முடக்கொத்தான்
3) இருவேரி 4) பொன்னாங்கன்னி

11. ஆபத்து ஏற்படுவதை உணர்ந்தவுடன் தனது உடலை வட்டமாகச் சுருக்கிக் கொள்ளத்தக்க விலங்கின் நடத்தை
1) பிள்ளைப் பூச்சி 2) மர அட்டை 3) அட்டை 4) மயிர்கொட்டி

12. மழை பெய்யப் போவதை உணர்ந்துகொள்ளத்தக்க விலங்கின் நடத்தை
1) பூனை கத்தும் 2) நரி ஊழையிடுதல் 3) நாய் குரைத்ததல் 4) ஈசல் பறத்தல்

13. இரவில் திரியும் பறவை
1) ஆந்தை 2) மரங்கொத்தி 3) மீன்கொத்தி 4) கானாங்கோழி

14. பின் வரும் எச்சந்தர்ப்பத்தில் வீட்டில் உள்ள நாய் உரத்துக் குரைக்கும்?
1) தனது எல்லைக்குள்ளே வேறு நாய் வரும்போது
2) வெளியாள் வீட்டுக்கு வரும்போது
3) நாய் கவலையை அல்லது தனிமையை உணரும்போது
4) எவரும் நாய்குத் தொந்தரவு செய்யும்போது

15. சக்கரைச் சாதத்தை தயாரிக்கும் போது பயன்படுத்தும் வித்து
1) கௌப்பி 2) பாசிப்பயறு 3) ஆசனிப்பலா 4) பலாக்கொட்டை

16. மூடாமல் சமைக்க வேண்டி உணவுப்பொருள்
1) வத்தாளை 2) ஈரப்பலா 3) மரவள்ளி 4) பலா

17. அலுமினியப் பாத்திரத்தில் சமைக்கப்படும் உணவுடன் கலக்கக் கூடாத பொருள்
1) கறுவா 2) வெள்ளைப் பூண்டு 3) கொரக்காய்ப் புளி 4) இஞ்சி

18. கையில் ஒட்டிய பலாக்காய்ப் பாலை எளிதாக அகற்ற பயன்படுத்தத்தக்க பொருள்
1) சவர்க்காரம் 2) குளிர் நீர் 3) வெந்நீர் 4) மண்ணெண்ணெய்

19. நீலச்சாயத்தையும், சிவப்புச் சாயத்தையும் கலந்து தயாரிக்கப்படும் நிறம் யாது?
1) பச்சை 2) ஊதா 3) மஞ்சள் 4) கறுப்பு


20. வலைப்பந்தாட்டக் குழுவில் உள்ள ஆட்டக்காரர்களின் எண்ணிக்கை (பதில் ஆட்டக்காரர்கள் தவிர)
1) 6 2) 7 3) 8 4) 9

21. ஓட்ட வீரர் ஓடி முடிந்தபின் செய்ய வேண்டியது
1) சிறிது நேரத்திற்கு நிலத்தில் கால்களை நீட்டி இருத்தல்
2) குளிர்பானத்தைப் பருகுதல்
3) உடலை நீரினால் நனைத்தல்
4) எளிய பயிற்சியில் ஈடுபடல்

22. ஒருவர் வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெறச் செல்லவேண்டியது
1) பிரதேசச் செயலாளரிடம்
2) கிராம அலுவலரிடம்
3) பொலிஸ் நிலை அலுவலரிடம்
4) சமுர்த்தி அலுவலரிடம்

23. சந்தேகத்திற்கிடமான பொதியைக் கண்டவுடன் பாதுகாப்பிற்காக அறிவிக்க வேண்டிய தொலை பேசி இலக்கம்
1) 119 2) 147 3) 456 4) 1919


24. குறித்த நிறங்கள் இடாமல் தரப்பட்டுள்ள பின்வரும் இலச்சினைகளிடையே இலங்கையின் தபால் சேவை இலட்சினையைத் தெரிந்தெடுக்க




1) 2) 3) 4)

25. மகாசேன மன்னன் கட்டுவித்த குளம்
1) திஸா வாவி 2) மின்னேரியாக்குளம் 3) கலா வாவி 4) பராக்கிரம சமுத்திரம்

♦ தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தைப் பயன்படுத்தி 26,27 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக.




26.பொலன்னறுவை நகரத்தைக்குறிக்கும் அங்கில எழுத்து யாது?
1) A 2) B 3) C 4) D

27. களு கங்கையைக் குகறிக்கும் ஆங்கில எழுத்து யாது?
1) W 2) X 3) Y 4) Z

28. " டங் டங் சத்தம் பார் ஆலையிலே இரும்பு உருக்கி அடிக்கிறார் ஆலையிலே" இப்பாடல்
1) அருவி வெட்டுப் பாடல் 2) தொழிற்பாடல்
3) வண்டிப்பாடல் 4) விளையாட்டுப்பாடல்

### 12.07.2017, 14.07.2017 ஆகிய திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட பகுதி-1 வினாக்களின் விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. 2) | 11. 2) | 21. 1) | 31. 2), 3) | 39. i) கொத்தாய்/கொத்தாக |
| 2. 3) | 12. 1) | 22. 3) | 32. 2) | ii) களிப்புடன், மகிழ்வுடன் |
| 3. 4) | 13. 3) | 23. 4) | 33. 1) | 40. i) பழக்கம் |
| 4. 1) | 14. 1) | 24. 4) | 34. சக்தி | ii) படுத்துக்கிடந்தார் |
| 5. 2) ,3) | 15. 4) | 25. 4) | 35. தளபதி | |
| 6. 2) | 16. 4) | 26. 1) | 36. ஆகாய விமானம்/ விமானம்/வானூர்தி. | |
| 7. 2) | 17. 2) | 27. 1) | 37. மருந்து / ஔடதம் | |
| 8. 4) | 18. 4) | 28. 3) | 38.i) நிற நிறமான பூக்கள்/ மிக அழகான பூக்கள் | |
| 9. 3) | 19. 3) | 29. 1) | ii) பூக்களின் மீது | |
| 10. 3) | 20. 1) | 30. 2) | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் தடம்புரண்டதில் மூவர் படுகாயம்

கொழும்பிலிருந்து பதுளைக்கு பயணித்த தபால் சேவை ரயில் தடம்புரண்டதில் மூவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொட்டகலை ரயில் நிலையத்தை அண்மித்த பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை குறித்த ரயில் தடம்புரண்டுள்ளது.



விபத்தில் காயமடைந்தவர்கள் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு, நான்கு ரயில் பெட்டிகள் சேதமடைந்துள்ளதோடு, ஒரு கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரம் வரை தண்டவாளங்களும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

இவ்விபத்து காரணமாக கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணிக்கும் புகையிரதங்கள் ஹற்றன் வரையும் பதுளையிலிருந்து பயணிக்கும் புகையிரதங்கள் கொட்டகலை வரையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு, குறித்த ரயில்களில் பயணிக்கும் பயணிகள் இலங்கை போக்குவரத்து சேவைக்கு சொந்தமான பேருந்துகளில் ஏற்றிச்செல்லப்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. இதேவேளை, புகையிரத பாதைகளை சீரமைக்கும் பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (இ-7)

# ஒருவர் கொலை; மூவருக்கு தூக்கு

இற்றைக்கு 12 வருடங்களுக்கு முன்னர், கூரிய ஆயுதங்களால் தாக்கி, ஒருவரை படுகொலை செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பிரதிவாதிகள் மூவரையும் குற்றவாளிகளாக இனங்கண்ட, பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிபதி பத்மினி ரணவக்க குணதிலக்க, அந்த மூவருக்கும், நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

பண்டாரகம அடலுகம எனுமிடத்தில் வைத்து, மொஹமட் மஹ்ரூப் என்பவரை, 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ஆம் திகதியன்று, கூரிய ஆயுதங்களால் தாக்கி, படுகொலை செய்தனர் என்று பிரதிவாதிகள் ஏழு பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த வழக்கில், மொஹமட் செகரியா (வயது 53), ஜமால்டீன் மொஹமட் பாஹிம் (வயது 51) மற்றும் மொஹமட் இக்பால் (வயது 34) ஆகிய மூவருக்குமே மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. (இ-7)

# அரிசி விலை உயராது

(கொழும்பு)

எதிர்வரும் 3 மாதங்களில் அரிசி விலை அதிகரிக்கப்படமாட்டாது என்று, அரிசி இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் ஹேமக பெர்ணாண்டோ தெரிவித்தார்.

இது குறித்து, அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"எவ்வித தடங்கலும் இல்லாமல், அரிசி வழங்குவதற்கு தேவையான தொகை போதுமானளவு உள்ளது.

"தற்போது வரையில், அரிசி விலை அதிகரிக்கப்படவில்லை. எதிர்வரும் 3 மாதங்கள் வரை, தற்போதைய அரிசியின் மொத்த விலையை பராமரிக்க கூடியதாக இருக்கும். அதில் மாற்றங்கள் எதுவும் ஏற்படாது.

"இதேவேளை, வாழ்க்கைச் செலவு தொடர்பான செயற்குழுவுடன் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டோம்.

"இதன்போது, தற்போதுள்ள அரிசி ஒரு கிலோ கிராமுக்கு கிடைக்கும் 5 ரூபாயை சுங்க வரி திருத்தத்துக்கு அல்லாமல் வழங்க வேண்டும் என அரசாங்கத்திடம் அறிவித்துள்ளோம்" எனத் தெரிவித்தார். (இ-7)

# அஷ்ரப் மனைவி,ஹசன் அலி உட்பட 27 பேர் மு.காவிலிருந்து விரட்டல்

## பிரதியமைச்சர் அமீர் அலி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அஷ்ரபின் மனைவி தொடக்கம் ஹசன் அலி வரைக்கும் இருபத்தியேழு பேர் துரத்தப்பட்டுள்ளார்கள் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும், கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சருமான எம்.எஸ். எஸ். அமீர் அலி தெரிவித்தார்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் வாழைச்சேனை 206டி கிராம சேவகர் பிரிவிற்கான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி வட்டாரக் கிளை அங்குரார்ப்பண நிகழ்வு முன்னாள் பொது முகாமையாளர் எம்.ஏ. சலாம் தலைமையில் பிறைன்கேட் கல்வி நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடை பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# அமெரிக்காவுடன் பாதுகாப்பு உடன்பாடு

## அமைச்சரவைக்கு அறிவிப்பு

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்துடன், 2007 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட கையகப்படுத்தல் மற்றும் குறுக்குச் சேவைகள் உடன்பாட்டை புதுப்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முன்னைய உடன்பாடு, கடந்த மார்ச் 5ஆம் திகதியுடன் காலாவதியாகியிருந்தது.

இதையடுத்தே, அமெரிக்காவுடனான இந்த உடன்பாட்டை நீடிப்பது தொடர்பாக, பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சரவைக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இந்த உடன்பாட்டின் மூலம், பூகோள உறவுகளை முன்னேற்றுவதற்கும், பூகோள பாதுகாப்பு நிலையை உருவாக்குவதற்கும் இந்த உடன்பாடு உதவியாக அமையும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா- இலங்கை இடையில் இந்த உடன்பாடு விரைவில் கையெழுத்திடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1131

Search for people, places and things    Nagendram Home

**விஜயா**




**கோகுலன்**




**கயூ**





**நிவேதா**




**டயன்**




**அஜந்தா**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்கள் கடத்தல் விவகாரம்

# இலங்கைக் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் கைது

(கொழும்பு)

இலங்கை கடற்படையின் முன்னாள் பேச்சாளர் கப்டன் டி.கே.பி. தசநாயக்க நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெள்ளவத்தையில் ஐந்து தமிழ் மாணவர்கள் காணாமல் போன சம்பவம் உள்ளிட்ட கடந்த காலங்களில் இடம்பெற்ற 11 கடத்தல் சம்பவங்கள் தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்டன் தசநாயக்கவை கைது செய்யவுள்ளதாக நேற்று முன்தினம் கொழும்பு கோட்டே நீதிமன்றத்திற்கு புலனாய்வுப் பிரிவினர் அறிவித்திருந்தனர்.

இதுவரையில் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கப்டன் தசநாயக்க ஓர் பிரதான சந்தேகநபராக தென்படுவதாகவும் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்திருந்த நிலையில் நீதிமன்றம் பகிரங்க பிடியாணை பிறப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)



## வெளிவிவகார அமைச்சில் பெண் ஊழியருக்கு பாலியல் தொந்தரவு

வெளிவிவகார அமைச்சில் பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளான பெண் ஊழியருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அமைச்சின் உயர் அதிகாரி ஒருவரினால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளான பெண் ஊழியருக்கு தண்டனையாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த அதிகாரியினால் பாலியல் ரீதியரன தொந்தரவு கொடுக்கப்பட்ட போது, அதிலிருந்து தப்பிச் சென்ற பெண் மற்றுமொரு சிரேஷ்ட அதிகாரியிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

எனினும் குறித்த உயர் அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள முடியாதென கூறிய சிரேஷ்ட அதிகாரி, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு தண்டனையாக இடமாற்றம் வழங்க சிபாரிசு செய்துள்ளார். குறித்த பெண்ணுக்கு உடனடியாக இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரிய வருகிறது. (இ-7)




மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் மயானங்கள் வேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்து புத்தூர் கலைமதி மக்கள் மன்றம் முன்றலில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையிடம் பல கோரிக்கைகளை முன்வைத்து இக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்று வருகிறது. காலவரையறையின்றி முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள இக் கவனயீர்ப்பு போராட்டத்தை சம்பந்தப்பட்ட அதிகார வர்க்கத்தினர் கண்டு கொள்ளவில்லை என போராட்டத் தில் ஈடுபட்டுள்ள மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

## சட்டத்தின் ஆட்சி சார்க் பாராட்டு

சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறையின் சுயாதீனத்தை நிலைநாட்டுவதற்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை பாராட்டுவதாக சார்க் அமைப்பின் பொதுச் செயலாளர் அம்ஜத் ஹுசைன் தெரிவித்துள்ளார். நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவுடன் நேற்று இடம் பெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் கூறியுள்ளதாக நீதியமைச்சு தெரிவித்துள்ளது. நீதியமைச்சில் இடம் பெற்ற இந்த சந்திப்பில் பிராந்திய ரீதியாக இலங்கையின் நீதித்துறையை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாட்டின் நீதிக் கட்டமைப்பை பலப்படுத்துவதற்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக மிகுந்த மகிழ்ச்சிப்பட முடிந்துள்ளதாக சார்க் அமைப்பின் பொதுச் செயலாளர் அம்ஜத் ஹுசைன் தெரிவித்துள்ளார். நாட்டினுள் இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையில் சகவாழ்வை ஏற்படுத்துவதற்காக இலங்கை எடுத்துள்ள முயற்சிகள் பாராட்டுக்குரியது என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ். வலயத்திற்குட்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள அதிபர் வெற்றிடங்களுக்கு பொருத்தமான அதிபர் சேவையை சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நிபந்தனைகள்

வகைII:- பாடசாலைகளுக்கு அதிபர் சேவை வகுப்பு 2, வகுப்பு 3ஐச் சேர்ந்த அலுவலர்களும் விண்ணப்பிக்கலாம். அதிபர் சேவை வகுப்பு 2 அதிபர்களின் போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் அதிபர் சேவை வகுப்பு 3 ஐச் சேர்ந்த அலுவலர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

இவர்கள் தற்போது கடமையாற்றும் பாடசாலையில் 3 வருட சேவையை பூர்த்தி செய்திருப்பதுடன் விண்ணப்ப முடிவுத்திகதியிலிருந்து நியமிக்கப்படும் பாடசாலையில் 3 வருடம் சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும். அத்துடன் தற்போது அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று நியமனத்தை ஏற்றுக் கொண்ட அதிபர் வகுப்பு 3 இணைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

1. யா/ வண்.நாவலர் மகா வித்தியாலயம்-வகை 2
2. யா/நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்-வகை 2

இவ்விண்ணப்பங்கள் நேர்முகப்பரீட்சைக்குழு ஒன்றின் மூலம் பரிசீலிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

விண்ணப்பிக்க விரும்புவோர் வலயக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்திசெய்து எதிர்வரும் 28.07.2017 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலத்தில் சமர்ப்பிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா கேட்டுக் கொண்டுள்ளார். (இ

## கஞ்சாவுடன் கைதானவருக்கு 6 ஆயிரம் ரூபாய் அபராதம்

கேரளக் கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த நபரொருவர் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இளவாலை பொலிஸ் நிலைய பதில் கடமை அதிகாரி ஏ.ஆனந்தராசா தலைமையிலான குழுவினர் திடீர் சுற்றிவளைப்பில் ஈடுபட்ட போது பனிப்புலம் பகுதியைச் சேர்ந்த நபரொருவர் 2200 மில்லிகிராம் கேரளக் கஞ்சாவுடன் கடந்த 11ஆம் திகதி கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் மல்லாகம் நீதவான் நீதின்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதவானால் 6 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டதாக இளவாலை பொலிஸ் நிலைய பதில் கடமை அதிகாரி ஏ.ஆனந்தராசா தெரிவித்தார். (இ-5-10-104)


### கேள்விஅறிவித்தல்
### கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு.
### குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை- 2017

1. கரைதுறைப்பற்று பிரதேச சபையானது, குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியினை கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. **தலைவர், பெறுகைக்குழு, கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு, வடமாகாணம்,** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டிட அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு தொலைபேசி :- 024 324 3542 தொலைநகல்: 02 22 0001** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 04.08.2017 வரை காலை 09.00 மணிமுதல் மாலை 02.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** எனும் இடத்திலிருந்து 14.07.2017ஆம் திகதியிலிருந்து 04.08.2017 வரை வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 02.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** எனும் முகவரிக்கு 04.08.2017ஆம் திகதி மாலை 02.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 77(எழுபத்து ஏழு–20.10.2017) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/44(1)/02/03/ PSDG.St-II/2017 | வற்றாப்பளை இயவாகை வீதி புனரமைப்பு | 3.76 | 3 மாதம் | C8 | 38000.00 | 17.11.2017 |
| 2 | NP/14/44(1)/02/03/ PSDG-02 /2017 | மாத்தளன் மயானத்திற்கான எரி கொட்டகையும் ஓய்வு மண்டபமும் அமைத்தல் | 0.95 | 2 மாதம் | C9 | 10000.00 | 17.11.2017 |
| 3 | NP/14/44(1)/02/03/ PSDG-03/2017 | குமுளமுனை தாமரைக்கேணி மயானத்திற்கான எரி கொட்டகையும் ஓய்வு மண்டபமும் அமைத்தல் | 0.95 | 2 மாதம் | C9 | 10000.00 | 17.11.2017 |
| 4 | NP/14/44(1)/02/03/ PSDG-04 /2017 | முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பு மயான பாதுகாப்பு வேலி அமைத்தல் | 0.43 | 2 மாதம் | C9 | 4500.00 | 17.11.2017 |

11. கேள்வி கோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 24.07.2017ஆம் திகதி பி.ப 02.30 மணிக்கு **கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ள முடியும்.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**கரைதுறைப்பற்று, பிரதேச சபை,**
**முல்லைத்தீவு.**
**வடமாகாணம்.**

(C-9059)

**14..07.2017**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வைத்தியர்களின் செயற்பாடு பயங்கரவாதத்தை விட மோசமானது

## விக்கிரமபாகு கடும் விசனம்



நாட்டில் டெங்கு நோய் தீவிரமாக பரவி வரும் நேரத்தில் போராட்டம் நடத்தி மக்களை இம்சிக்கும் அரச வைத்தியர்களின் செயற்பாடு பயங்கரவாதத்தை விட மோசமானதென தெரிவித்த நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன, புண்ணியம் செய்தும் நன்மை செய்தும் நியாயத்தை பெற முடியாதென்றும் பாவம் செய்தாவது இப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்வும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை பயங்கரவாதி என்று கூறினாலும் அவர் பயங்கரவாதி அல்லர் என்றும் வைத்திய அதிகாரிகளே கொடூரமான பயங்கரவாதிகள் என்றும் விக்கிரமபாகு கடுமையாக சாடியுள்ளார்.

இந்நிலையில், அரசியலுடன் எவ்வகையிலும் சம்பந்தப்படாத அப்பாவி மக்களை, சைட்டம் பிரச்சினைக்காக பலியெடுக்கும் அரச மருத்துவ அதிகாரிகளின் செயற்பாட்டிற்கு அரசாங்கம் அடிபணியாமல் அவர்களது கொட்டத்தை அடக்க வேண்டுமென விக்கிரமபாகு மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# முதலமைச்சருக்கு அதிகாரமில்லை முன்னாள் அமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் கைவிடப்பட்ட நிலையிலுள்ள காணிகளுக்கு அவற்றின் பெறுமதியில் 2 சதவிகிதத்தை வரியாக அறவிடவுள்ளதாக மேல்மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்துள்ள யோசனைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 148 ஆவது சரத்தின்படி நிதிசார் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உரித்தானது எனவும் மாகாண சபைகளுக்கு அந்த அதிகாரம் கிடையாதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேல்மாகாணத்தில் ருத்ர தாண்டவமாடிக் கொண்டிருக்கும் டெங்கு நோயை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளைப் புறம் தள்ளிவிட்டு இசுறு தேவப்பிரிய வெற்றுக் காணிகளுக்கு வரி விதிப்பதைப் பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறார்.

மேல்மாகாண வைத்தியசாலைகளுக்கு அவர் ஒரு முறை விஜயம் செய்தால் அப்பாவி டெங்கு நோயாளிகள் படும்அவஸ்தைஅவருக்குப்புரியும்

மிக முக்கியமான அந்தப் பொறுப்பை விட்டுவிட்டு டெங்கு பரவுவதற்கு கைவிடப் பட்ட காணிகளே காரணம்என குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கிறார்.

நாடாளுமன்றத்துக்கு மட்டுமே உரித்தான நிதிசார் அதிகாரங்களை தனது கைகளில் எடுத்துக்கொள்ள அவர் முயற்சிப்பது வேடிக்கையாக இருக்கிறது என்று பந்துல தெரிவித்துள்ளார். (இ-7)

# காணிகளுக்கு அடையாளமிடும் கல்வியமைச்சர் காரியவசம்

(கொழும்பு)

தான் இன்னும் ஓரிரு தினங்களில் ஜெய்லானிக்குச் சென்று அங்குள்ள பௌத்தர்களின் புனிதப் பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அங்குள்ள பௌத்தர்களின் காணிகளுக்கு அடையாளமிடப் போவதாகவும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு தம்புள்ளை விகாரை சர்ச்சை குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் பௌத்தர்களின் புராதனச் சின்னங்கள் அழிக்கப்பட்டன. அப்போதைய வனப் பாதுகாப்புத் திணைக்களம் எந்த நடவடிக்கையும் எடுக்க



வில்லை. இந்நாட்டில் 2 இலட்சத்து 50 ஆயிரம் புனிதப் பிரதேசங்கள் உள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நெல்லியடி நகரில் கண்காணிப்பு கமரா பொருத்த நிதியுதவி

நெல்லியடி நகரில் இலத்திரனியல் கடிகாரம் பொருத்துவதற்கும் கண்காணிப்பு கமரா பொருத்துவதற்கும் வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.அகிலதாஸ் ஒன்றரை இலட்சம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளதாக நெல்லியடி வர்த்தக சங்கத்தினர் தெரிவித்தனர்.

நகரில் இலத்திரனியல் கடிகாரம் பொருத்தவும், குற்றச் செயல்கள் இடம்பெறாத முறையில் நகரினைக் கண்காணிக்கவும் சி.சி.ரி.வி. கமரா பொருத்துவது தொடர்பிலும் வர்த்தக சங்கத்தினால் வடமாகாணசபை உறுப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனையடுத்து வட மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒன்றரை இலட்சம் ரூபா நிதியினை அவர் ஒதுக்கீடு செய்துள்ளார். (இ-60)

# கள் விற்றவர் கைது

அனுமதிப்பத்திரமின்றி கள் விற்பனை செய்த நபரொருவர் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இளவாலைப் பொலிஸ் நிலைய பதில் கடமை அதிகாரி ஏ.ஆனந்தராசா தலைமையிலான குழுவினர் திடீர் சுற்றிவளைப்பில் ஈடுபட்ட போது பனிப்புலம் பகுதி வீடு ஒன்றில் கள் விற்பனை செய்த நபர் கடந்த 11 ஆம் திகதி கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். இச் சம்பவம் தொடர்பில் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் எதிர்வரும் 17 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக இளவாலை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.ஆனந்தராசா தெரிவித்துள்ளார். (இ-5-10-104)

# சட்டவிரோத வர்த்தகம்; 19 பேர் மீது வழக்கு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோத வர்த்தகத்தில் ஈடுபட்ட 110 வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதோடு 19 வர்த்தகர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்புரையின் கீழ் மாவட்ட அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் திணைக்கள அதிகாரிகளினால் நேற்று முன்தினம் புதன்கிழமை இச்சுற்றிவளைப்பு நடவடிக்கை இடம்பெற்றதாக திணைக்களத்தின் மாவட்ட பணிப்பாளர் ஏ.எல். நௌசாத் தெரிவித்தார்.(இ-7)

# அனைத்து அமைச்சுக்களினதும் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் ஜனாதிபதி மைத்திரி



(கொழும்பு)

அனைத்து அமைச்சுக்களினதும் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் அடுத்த மாதம் முதல் பங்குபற்ற இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற ஜனாதிபதி செயலக பணிக்குழுவினருடனான சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதுமட்டுமின்றி தொடராய்வு நடவடிக்கைகள் ஜனாதிபதி செயலகத்தினால் மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

14 இலட்சம் அரச ஊழியர்களுக்கு முன்மாதிரியாக வினைத்திறனாக திட்டமிடப்பட்டவாறு ஜனாதிபதி செயலக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய தன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆட்சிபுரியும் அரசியல் தலைமையின் நெறிப்படுத்தல், முகாமைத்துவ மற்றும் நிர்வாக திறனிலேயே அரச அலுவல்களுக்கான வழிகாட்டல்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தாம் ஒருபோதும் அரச அலுவலர்களை குற்றம்சாட்டுவதில்லை என்பதுடன், ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் அரசியல் தலைமையே அதற்கு பொறுப்பேற்க வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

அரச ஊழியர்கள் அனைவரும் அடுத்துவரும் ஆண்டுகளில் அபிவிருத்தியின் முன்னோடிகளாக மாறி அதனை ஒழுங்குபடுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஊழல், மோசடி, முறைகேடுகள் எங்கும் இடம்பெறக் கூடாது என்பதுடன், வெளிப்படைத் தன்மையுடனும் தூய்மையாகவும் தமது கடமைகளை மேற்கொள்வதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (இ-7)

# நான்கு மணிநேர பொலிஸ் நடவடிக்கையில் நாடளாவிய ரீதியில் 882 பேர் கைதாகினர்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட நான்கு மணி நேர விசேட பொலிஸ் நடவடிக்கைகளில் பல்வேறு குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு பொலிஸாரால் தேடப்பட்ட 110 பேரும் நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 772 பேரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான ருவான் குணசேகர தெரிவித்தார். நேற்று அதிகாலை ஒரு மணி முதல் 5 மணி வரை நான்கு மணி நேரங்கள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் ஆலோசனைக்கு அமைய பிராந்தியங்களின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் சுமார் 14 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு இந்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கைதுகளுக்கு மேலதிகமாக இந்த நான்கு மணி நேரங்களுக்குள் 22,210 மில்லி கிராம் ஹெரோயினும் 40,428.82 மில்லி கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது. ஹெரோயின் தொடர்பில் 85 வழக்குகளும் கஞ்சா தொடர்பில் 264 வழக்குகளும் இதன்போது பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதனைவிட சட்டவிரோத மதுபானம் 37,084 லீற்றர்களை இதன்போது கைப்பற்றியுள்ள பொலிஸார் இது தொடர்பில் 221 வழக்குகளையும் பதிவு செய்துள்ளனர்.

அத்துடன் மணல் அகழ்வு, ஏற்றிச்செல்லல், பொது இடத்தில் குடி போதையுடன் அநாகரிகமாக செயற்படல், பாதைகளில் கழிவுகளை கொட்டுதல் தொடர்பில் 124 வழக்குகளையும் தாக்கல் செய்துள்ள பொலிஸார் சட்ட விரோத ஆயுதங்கள் மூன்றினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைக் குண்டொன்றும் இதன்போது பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில், குடி போதையில் வாகனம் செலுத்திய 368 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய 320 பேருக்கு எதிராகவும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சட்டவிரோதமாக தங்கியிருப்போரை நாடு திரும்புமாறு தலதா கோரிக்கை

(கொழும்பு)

தென் கொரியாவில் சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் இலங்கையர்களை, நாடு திரும்புமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் தொழிலாளர்கள், தண்டனையின்றி நாடு திரும்புவதற்கான பொது மன்னிப்புக் காலத்தை தென் கொரியா அறிவித்துள்ளது.

இதற்கமைய, கடந்த 10ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி வரை இந்தப் பொது மன்னிப்புக் காலம் அமுலில் இருக்கும்.

தென் கொரியாவில் சட்டவிரோதமாக தங்கியிருப்போர், இந்தப் பொது மன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்தி நாடு திரும்ப வேண்டுமென, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள, இலங்கைத் தொழிலாளர்களை கோரியுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “வழக்குத் தொடர ஒத்துழைப்பு வழங்குவேன்” -மரிக்கார் உறுதி

“மீதொட்டமுல்ல குப்பை மேட்டுச் சரிவுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதற்காக, உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கு நான் ஒத்துழைப்பு வழங்குவேன்” என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

மீதொட்டமுல்ல குப்பை மேட்டுச் சரிவினால் ஏற்பட்ட ஒரு உயிரிழப்புக்கு 10 இலட்சம் ரூபாய் வீதம் அரச நட்டஈடு வழங்கும் நிகழ்வில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“இக்குப்பை மேடு சரிந்து விழுந்த தினத்தன்று, என் மீது வசை பாடாத ஒருவராவது இருக்கவில்லை. சில வலைப் பின்னல்களைப் பாவிப்பவர்கள் உட்பட சில ஊடகங்களும் நான் ஒரு மகா பெரிய பாவச்செயலை செய்துவிட்டதாகக் கூறினார்கள். சிலர் உண்மையை அறியாதவர்களாக 32 மரணங்களையும் நான் செய்ததாக என்மீது சேறு பூசினார்கள்.

“நாங்கள் அரசியல் தலைமைத்துவத்தை பொறுப்பேற்பதாயிருந்தால், பிரச்சினைகளில் இருந்து தப்பியோடாது, அப்பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். சில வங்குரோத்து அரசியல் கட்சிகள், வெள்ளைக் கொடி உயர்த்த வேண்டிய இடத்துக்கு கறுப்புக் கொடியை கொணர்ந்து தங்களது அரசியலை மரண வீடாக்க எத்தனித்தார்கள். மக்களைத் தூண்டுவதும் கண்ணீரை விற்பதுவும் மாத்திரம் தான் இவர்களால் செய்ய முடியும்.

“என் மீது குற்றஞ்சுமத்திய பேஸ்புக் மற்றும் சில ஊடக நிறுவனங்களின் நடவடிக்கைகளை பெரிதுபடுத்தியிருந்தால், இன்று உயிரிழப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள 10 இலட்சம் ரூபாய் கிடைத்திருக்காது. இவ்வளவு விரைவாக குடிமனைகள் கிடைத்திருக்காது.

“அதேபோன்று, இந் நடவடிக்கைளின் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதற்காக, உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்காக குப்பை மேட்டு எதிர்ப்புக் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். அவர்கள் உயர் நீதிமன்றத்துக்கு செல்வதற்கான ஒத்துழைப்பை நான் வழங்குவேன். இல்லையேல், இதற்காக நான் உயர் நீதிமன்றத்துக்கு செல்வேன். இதை விசாரிப்பதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவுக்கும் சொந்த விருப்பின் பேரில் நான் சாட்சியமளிப்பேன்” என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



கேலிச்சித்திரம்

# சரத்துக்கு எதிரான மனு ஒத்திவைப்பு



(கொழும்பு)

பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச்செய்ய உத்தரவிடுமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு, செப்டெம்பர் 7ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படும் என உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் அறிவித்தது.

சட்டத்தரணியான மேஜர் அஜித் பிரசன்னவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த இந்த மனு, நீதியரசர்களான புவனேக அலுவிஹார, நளின் பெரேரா, விஜித் கே. மலல்கொட ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல், பிறிதொரு திகதி வழங்குமாறு கோரியமைக்கு அமையவே, மேற்குறித்த திகதி அறிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் அல்லாத சரத் பொன்சேகாவை, அந்தக் கட்சியின் தேசியப் பட்டியல் ஊடாக நியமித்தமை சட்டத்துக்கு முரணானதாகும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அந்த நியமனமானது, அரசியலமைப்புக்கு முரணானது என்றும் எம்.பி. பதவிக்கான நியமனத்தை இரத்துச்செய்யுமாறும் மனுவில் கோரப்பட்டிருந்தது.

சரத் பொன்சேகா எம்.பி, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம், தேர்தல்கள் ஆணைக்குழு வின் தலைவர் மகிந்த தேசப் பிரிய ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (இ-7)

# சீனப் பொறியியலாளர்களால் புதுப்பிக்கப்பட்ட போர் விமானங்கள் இலங்.விமானப்படையிடம்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தில் சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள விமானங்களைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்கும் அலகு, முதல்கட்டமாக சீனத் தயாரிப்பான எப்-7 போர் விமானங்கள் இரண்டை இலங்கை விமானப்படைக்குப் புதுப்பித்துக் கொடுத்துள்ளது.

சீனாவின் M/S CATIC நிறுவனத்தின் விமான பொறியியல் பிரிவின் உதவியுடன், இலங்கை விமானப்படை கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் 2016ஆம் ஆண்டில், விமானங்களைப் பழுது பார்த்துப் புதுப்பிக்கும் அலகு ஒன்றை ஆரம்பித்தது.

இங்கு M/S CATIC நிறுவனத்தின் பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகளே, தற் போது, விமானங்களைப் பழுது நீக்கி புதுப்பித்துக் கொடுக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆரம்பத்தில் சீனத் தயாரிப்பாக, பி.ரி- 6 ரக பயிற்சி விமானங்கள் இங்கு புதுப்பிக்கப்பட்டு இலங்கை விமானப்படையிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிலையில், இலங்கை விமானப்படையின் இரண்டு எப்-7 ஜெட் போர் விமானங்கள், சீனபொறியியலாளர்களால் புதுப்பிக்கப்பட்டு விமானப் படையிடம் கையளிக்கப்பட்டன.

இலங்கை விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் கபில ஜெயம்பதி M/S CATIC நிறுவனத்தின் அதிகாரியிடம் இருந்து, புதுப்பிக்கப்பட்ட போர் விமானங்களைப் பொறுப்பேற்றார்.




இந்த நிகழ்வில் இலங்கை விமானப்படை அதிகாரிகள், சீன நிறுவனத் தின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றி ருந்தனர்.

சீனாவின் M/S CATIC நிறுவனத்தின் பொறியாளர்களே ஆரம்பத்தில் இந்த விமானங்களைப் புதுப்பிக்கும் அலகை செயற்படுத்துவது என்றும், பின்னர் விமானப் படை பொறியியலாளர்களுக்கு பயிற்சி அளித்துக் கொண்டு அவர்கள் படிப்படியாக வெளியேறுவர் என்றும் இணக்கப் புாடு எட்டப்பட்டு ள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அ’ புர சிறையில் தமிழ் அரசியல் கைதிகளுடன் ஐ.நா.விசேட பிரதிநிதி பென் எமர்ஷன் சந்திப்பு

(அநுராதபுரம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை மனித உரிமைகள் மற்றும் பயங்கரவாதம் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் விசேட பிரதிநிதி பென் எமர்ஷன் உள்ளிட்ட குழுவினர் சென்று சந்தித்துள்ளனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்ற அவர்கள், அரசியல் கைதிகளின் நிலை தொடர்பாக கேட்டறிந்தனர். இதன்போது, சுமார் 8 வருடங்களுக்கும் மேலாக குறித்த சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமக்கு எவ்வித தீர்வும் கிடைக்கவில்லையென அரசியல் கைதிகள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

நான்கு நாட்கள் விஜயமாக இலங்கை வந்துள்ள ஐ.நா. பிரதிநிதிகள் குழு, பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பாக ஆராய்ந்து வருவதோடு, பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரசியலமைப்பை விட டெங்குக்கு தீர்வு அவசியம்

அரசியல் அமைப்பினை விடவும் டெங்குவிற்கு தீர்வு வழங்குவது மிகவும் அவசியமானது என வனவாசி ராகுல தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார், பாடசாலை மாணவ, மாணவியர் மட்டுமன்றி பெரியவர்களும் டெங்குவினால் அதிகம் பாதிக்கப்படுவதுடன், நோயினால் உயிரிழப்போர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

நாட்டின் அரசியல்வாதிகள் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தி வருகின்றனர். பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் மக்களின் பிரச்சினைகளை புரிந்து கொள்ளவில்லை.

டெங்கு ஒழிப்பு தொடர்பில் ஆணைக்குழுக்களை அமைத்தல், அறிக்கை கோருதல் போன்ற வேலைகளை நிறுத்தி விட்டு காத்திரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வனவாசி ராகுல தேரர் கோரியுள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 100 | 100 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 250 | 250 | 400 | 200 | 200 |
| தக்காளி | 120 | 200 | 110 | 120 | 140 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 100 | 60 | 80 |
| கோவா | 140 | 160 | 80 | 120 | 120 | 120 | 160 |
| கரட் | 160 | 200 | 200 | 240 | 240 | 200 | 280 |
| பூசணி | 100 | 120 | 100 | 80 | 100 | 80 | 120 |
| புடோல் | 80 | 120 | 60 | 60 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 100 | 60 | 60 | 80 | 60 | 60 |
| சின்னவெங்காயம் | 180 | 300 | 250 | 250 | 240 | 250 | 240 |
| பெரியவெங்காயம் | 80 | 100 | 90 | 90 | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 180 | 200 | 140 | 160 | 160 | 120 | 250 |
| வெண்டிக்காய் | 60 | 120 | 100 | 120 | 120 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 50 | 120 | 160 | 140 | 120 |
| பயற்றங்காய் | 130 | 120 | 80 | 100 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 100 | 160 | 80 | 120 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 50 | 60 | 80 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 240 | 240 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 200 | 150 | 200 | 200 | 280 |
| போஞ்சி | 120 | 200 | 100 | 140 | 160 | 150 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 100 | 100 | 100 | 80 | 100 |
| கீரை – 1பிடி | 30 | 20 | 20 | 30 | 30 | 20 | 40 |
| தேசிக்காய் | 40 | 30 | 50 | 60 | 120 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 50 | 40-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 200 | 300 | 200 | -- | 300 | -- | 350 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 150 | 200 | 240 | 250 | 160 |
| முள்ளங்கி | 60 | 100 | 30 | 80 | 100 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 10 | 40 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 |
| [illegible] | 100 | 150 | -- | -- | 100 | 80 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுவார் அழுவார் எல்லாம் தன் கரைச்சல்
திருவன் பெண்டிருக்கு அழுவார் இல்லை.
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## புனிதவாய் மலர்ந்தழுத சம்பந்தர் போற்றி போற்றி

பன்னிரு திருமுறையில் முதல் மூன்று தேவாரத் திருமுறையும் திருஞானசம்பந்தருடையது.

சீர்காழிப் பகுதியில் மூன்று வயதுடைய சம்பந்தக் குழந்தை கேணியில் நீராடும் தன் தந்தையைக் காணாது அம்மையே அப்பா என்று அழுகிறது.

குழந்தையின் அழுகுரல் கேட்டு தோணிபுரத்து அப்பனும் அம்மையும் எருதேறி வருகின்றனர். சம்பந்தக் குழந்தைக்கு ஞானப் பால் ஊட்டுகிறார் அம்மை.

சம்பந்தக் குழந்தையின் அழுகுரல் கேட்டதும் அம்மையப்பன் விரைந்து வந்ததற்கு இரண்டு காரணம் உண்டு.

அதில் ஒன்று சம்பந்தக் குழந்தைக்கு ஞானம் கொடுத்தல். இரண்டாவது, முப்பொழுதும் எம் திருமேனி தீண்டும் சிவபாதவிருதை யாரைக் காணாது அவரின் குழந்தை அழும் போது, அந்தக் குழந்தையை ஆற்றுப்படுத்துவது தம் கடமை என்று அம்மையப்பன் விடையேறி விரைந்து வந்தனர் எனலாம்.

ஆக, சிவ பூசை செய்யும் சிவாச்சாரியர்களுக்காக இறைவன் விரைந்து வருவான் என்ற செய்தியும் ஞானப்பால் கொடுத்ததில் உண்டென்பது எங்கள் சிவாச்சாரியப் பெருமக்களுக்குச் சமர்ப்பணம்.

சரி இது ஒருபுறம் இருக்க, சம்பந்தக் குழந்தை எதற்காக அழுதது எனச் சேக்கிழார் பட்டியல் இடுகிறார்.

வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத் துறை விளங்க
பூதபரம்பரை பொலிய...
சம்பந்தக் குழந்தை அழுதது.

தோணிபுரத்தில் ஞான சம்பந்தக் குழந்தை அழுததால் நடந்தது என்ன என்பதைக் கண்டோம்.

இப்போது கிளிநொச்சிக்கு எங்கள் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அவர்கள் நேற்று முன்தினம் வந்திருந்தார்.

காணாமல்போனவர்களின் உறவுகளை கண்டார். ஆரத்தழுவி அழுதார். காணாமல் போன உறவுகளை சந்தித்து, அவர்களுடன் ஆரத்தழுவி சம்பந்தர் அழுத சம்பவம் முன்னர் ஒருபோதும் இல்லை.

அது சரி, கிளிநொச்சியில் சம்பந்தர் அழுதது ஏன் என்று கேட்டால்

அட போங்கப்பா! சேக்கிழார் இருந்தால் போய்க் கேளுங்கள் என்று நீங்கள் சொல்வீர்கள்.

ஆனாலும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் அவர்கள் கிளிநொச்சிக்கு வந்து, காணாமல்போனவர்களின் உறவினர்களைச் சந்தித்து, கட்டியணைத்து அழுதது,

தமிழரசுக் கட்சியைக் காப்பாற்ற,

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகக் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மறைக்க,

முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நிகழ்வில் தனக்கு ஏற்பட்ட மனக்கசப்பை விலக்க,

முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு ஏற்பட்டு வரும் ஆதரவை முறியடிக்க...

இரா. சம்பந்தர் அழுதார் எனலாம்.

இந்த வயதிலும் சம்பந்தர் ஐயா, எம்.ஜி. இராமச்சந்திரன் போல கிளிநொச்சியில் நடந்து கொண்டது வியப்புத்தான்.

அட, இப்படியொரு பாசமலர் படத்தை உடனடியாகத் தயாரித்த அந்தத் தயாரிப்பாளருக்கு ஒஸ்கார் விருது கொடுக்கலாம்.

## கொள்ளையடித்தாலும் மகிந்த நாட்டுக்கு சேவை செய்தார்

ஆனந்த தேரர் கருத்துரைப்பு

மகிந்த ராஜபக்ஷ 10 ஆண்டுகள் மேற்கொண்ட கொள்ளையடிப்பை விட தற்போதைய அரசாங்கம் இரண்டு ஆண்டுகளில் கொள்ளையடித்துள்ளதாக துறவிகள் குரல் அமைப்பின் தலைவர் முருத்தொட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் துறவிகள் குரல் அமைப்பு நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே ஆனந்த தேரர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேரர் மேலும் குறிப்பிடுகையில், மகிந்த ராஜபக்ஷ கொள்ளையடித்தாலும் நாட்டுக்கு பல அபிவிருத்திகளையும் சேவைகளையும் செய்துள்ளார்.

ஆனால் நாடு நடப்பு கட்சியில் பாதாளத்திற்கு சென்றுள்ளது. அரசாங்கம் பதவிக்கு வரும் போது கூறிய மாற்றம் இன்று சுமையாக மாறியுள்ளது.

கடந்த 1948 ஆம் ஆண்டுக்கு பிறகு ஆட்சி வந்த அரசாங் கங்களில் அதிகளவான அனர்த்தங்களை சந்தித்த அரசாங்கம் தற்போதைய அரசாங்கமாகும்.

நாட்டிற்கு தற்போது தேவையானது புதிய அரசியலமைப்புச் சட்டம் மட்டும் அல்ல. வாழ்வதற்கான முறையே தேவைப்படுகிறது.

நாட்டிற்கு கெடுதி வரும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பௌத்த சங்க சபையினரே குரல் கொடுத்தனர்.

நல்லாட்சி அரசாங்கம் மேற்கொண்டு வரும் மக்கள் விரோத செயற்பாடுகளை தொடர்ந்தும் பொறுத்துக்கொள்ள முடியாது.

ஆகவே மிக விரைவில் மாநாயக்க தேரர்களை சந்தித்து அவர்களின் அழைப்புடன் கூடிய மகாசங்கசம்மேளனத்தை நடத்த போவதாகவும் ஆனந்த தேரர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## தென்மராட்சி கல்வி வலய மாணவர் பாராளுமன்ற அமர்வு

தென்மராட்சி கல்வி வலய மாணவர் பாராளுமன்ற அமர்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி நகர சபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெறும்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பத்தரமுல்ல கல்வியமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சியும் சிறப்பு விருந்தினர்களாக பத்தரமுல்ல கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவவிதாரண, வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கல்வியமைச்சின் இணைபாடத் திட்ட வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக் கிளையின் கல்விப் பணிப்பாளர் வை.ஏ. என்.டி.யாப்பா, வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், வேள்ட் விஷன் அமைப்பின் தேசிய பணிப்பாளர் தனன் சேனாதிராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (3-8)

### ஆரோக்கிய வாழ்க்கை முறை மூலம் தொற்றாநோய்களை தூர விரட்டிடுவோம்!


தொடர்பாடல் ஊடகங்களில் விளம்பரப்படுத்தப்படும் இனிப்பூட்டிய பானங்கள் மற்றும் உணவுகள் பற்றி விவேகத்துடன் முடிவு எடுப்போம்!

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை

## சாஸ்திரங்கள்

✦ சித்திரை, வைகாசி மாதங்களில் செண்பகப்பூவை முருகனுக்குச் சாற்றினால் பசித்துன்பம் உடனே நீங்கும். உணவிற்கு என்றும் குறைவிருக்காது.

-விசுவாமித்திரர்



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### உன் கெட்ட குணங்களையே விரிவுபடுத்திக் கொள்

உன்னால் உன் கெட்ட குணங்களிலிருந்து விடுபட முடியவில்லையென்றால் அவற்றை விரிவுபடுத்திக்கொள், திசை மாற்று.

கோபம்: சிறு விடயங்களுக்குக் கோபம் அடைந்து என்ன இலாபம்? எல்லையற்ற பிரம்மனிடம் கோபம் கொள்.

கர்வம்/ ஆணவம்: கர்வத்திலிருந்து விடுபட முடியவில்லையென்றால் தெய்வீகம் எனக்கு உரியதென்று கர்வப்படு.

பேராசை: சத்சங்கத்தில் இருப்பதற்குப் பேராசைப்படு.

ஏக்கப் பேராவல்: மாற்றமில்லா சத்யத்திற்கு உண்மைக்குப் பேராவல் கொள், ஏங்கு.

வெறுப்பு: வெறுப்புகள் மீது வெறுப்பு கொள்.

பொறாமை: சேவை பற்றி பொறாமைப்படு.

போதை: தெய்வீகத்தின் மீது போதையுடன் இரு.

பிணைப்பு: சத்குருவுடன் உன்னைப் பிணைத்துக் கொள்.

இருப்பதில் அன்பு வைப்பது இன்பம்.

இல்லாததில் அன்பு வைப்பது துன்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்திய சபை தலைவர் பதவி மூவரின் பெயர் சிபாரிசு

(கொழும்பு)

இலங்கை வைத்திய சபையின் தலைவர் பதவிக்கு மூன்று பேரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

அவர்களில் தகுதியுள்ள ஒருவரை எதிர்வரும் நாட்களில் தெரிவுசெய்யப்பட்டு நியமனம் வழங்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கை வைத்திய சாலை தலைவர் பதவி வகித்த கார்லோ பொன்சேகாவின் பதவிக்காலம் கடந்த 07ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது.

இந்த நிலையில் வெற்றிடமாகவுள்ள இடத்துக்கு தலைவரை தெரிவு செய்யும் அதிகாரம் அமைச்சருக்கே உள்ளது.

இதனால் பேராசிரியர் கொல்வின் குணரத்ன உள்ளிட்ட மூவரின் பெயர் தெரிவுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## அனுமதி அட்டைகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இவ்வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் சிவஞான வைரவர் ஆலயத்தில் வைத்துவழங்கப்படவுள்ளன.

அனைத்து மாணவர்களும் தமது பெற்றோருடன் வருகை தந்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும். இன்று முதல் மாணவர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டையுடன் கல்லூரிக்கு வருகை தந்து தங்களின் அனுமதி அட்டையிலுள்ள பெயர், அடையாள அட்டை இலக்கம், பாட இலக்கம் என்பன சரியாக உள்ளதா எனசரிபார்த்துகையொப்பம் இட்டுச் செல்லவும் என பாடசாலை அதிபர் ஐ.தயானந்தராஜா அறிவித்துள்ளார். (இ-3)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### மரத்தின் அடியில் கடவுள் இருப்பது ஏன்?

அரசமரம் மற்றும் வேப்பமரம் ஆகிய இரண்டு மரத்தின் அடியில் விநாயகர் மற்றும் நாகர் சிலைகள் இருப்பதன் ரகசியம் என்ன தெரியுமா?

கோடை, மழை காலத்தில் அரசமரம் மற்றும் வேப்பமரத்தில் இலைகள் நெருக்கமாக இருக்கும்.

ஏனெனில் அது அந்த மரத்தின் அடியில் உள்ள விநாயகர் மற்றும் நாகர் கடவுள்களை அவை குடை போல இலைகளை விரித்து பாதுகாப்பதாக ஒரு ஐதீகம் உள்ளது. இதற்கு இயற்கையானது கடவுள்களை வணங்குகிறது என்பது இதன் ரகசியமாக உள்ளது.

அதுவே பனிக்காலத்தில் மரத்தில் உள்ள இலைகளை உதிர்ந்து, வெறும் மரமாக காணப்படும். அந்நிலையை, சூரியன் தன் கதிர்களை செலுத்தி, விநாயகர் மற்றும் நாகர் கடவுளை வழிபடுவதாக கருதப்படுகிறது.

அதுமட்டுமில்லாமல், வெயில் மற்றும் மழை காலத்தில் பெருமளவு பாதிக்கப்படும் மனிதர்கள், பனிக்காலத்தில் சீதோஷ்ண நிலையால் கஷ்டப்படக் கூடாது என்பதற்காக, தெய்வங்கள் கருணையுடன் மரத்தடிகளை தங்களின் இருப்பிடமாக கொண்டுள்ளது என்று கருதுகின்றனர்.




### பணியாளர்களை உபசரியுங்கள்

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

❖ பணியாட்களின் சக்திக்கு மிஞ்சிய வேலைப் பளுவை அவர்கள் மீது சுமத்த வேண்டாம். அவ்வாறு சுமத்த நேரிட்டால் அந்த வேலையில் அவர்களுக்கு நீங்கள் துணை புரியுங்கள்.

❖ பணியாளர்களை உபசரியுங்கள். நீங்கள் உண்பதில் இருந்து அவர்களுக்கும் உணவு அளியுங்கள்.

❖ உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்களே! உங்களுக்குக் கீழிருந்தவர்கள் குறித்து உங்கள் ஒவ்வொருவரிடமும் வினவப்படும். பணியாட்கள் தன் எஜமானனின் பொருட்களுக்குப் பாதுகாவலன் ஆவான். அவர்களின் பொறுப்புகள் பற்றி விசாரிக்கப்படுவார்கள்.

❖ நாம் பொறுப்பில் அமர்த்தி உள்ள ஒருவர் நம்மிடமிருந்து ஓர் ஊசியை மறைத்தாலும் அல்லது அதை விடச் சிறியதொரு பொருளை மறைத்தாலும் அதனை அவர்கள் அபகரித்துக் கொண்டார் என்றே பொருள். மறுமை நாளில் அதனைச் சுமந்த வண்ணம் வருவார்.

- வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து

# நவிண்டில் கலைமதியின் உதைபந்தாட்டத் தொடர்

## றேஞ்சர்ஸ் அணி

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நான்காவது அணியாக அரையிறுதி போட்டிக்கு தகுதி பெற்றது கொற்றாவத்தை றேஞ்சர்ஸ்.

றேஞ்சஸ் அணி லீக் போட்டிகளில் மூன்று போட்டியும் சமநிலையில் முடிவடைந்தது.

முதலாவது போட்டியில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியுடன் மோதியது. இப் போட்டியில் 1.1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியுடன் மோதியது. இப் போட்டியில் 1.1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

மூன்றாவது போட்டியில் டயமன்ஸ் அணியுடன் மோதியது. இப் போட்டியில் 1.1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

மூன்று போட்டியிலும் சமநிலை பெற்றாலும் சென். அன்ரனிஸ் அணி ஒரு போட்டியில் வெற்றி பெற்றது. ஒரு போட்டியில் சமநிலை பெற்றது. ஒரு போட்டியில் தோல்வியடைந்தமையினால் இரு அணிகளும் ஒரே புள்ளிகளை பெற்றன.

4 ஆவது போட்டியாக சென்.அன்ரனிஸ் அணியுடன் மோதியது. இப் போட்டியில் 1.1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

சமநிலை தவிர்ப்பு உதையில் 5.4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. (க)




## குறிஞ்சிக்குமரன் அணி



நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் மூன்றாவது அணியாக அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது குப்பிளான் குறிஞ்சிக்குமரன்.

குறிஞ்சிக்குமரன் அணி லீக் போட்டிகளில் ஒரு போட்டியில் வெற்றி பெற்றது. இரு போட்டியில் தோல்வியடைந்தது.

முதலாவது போட்டியில் திருக்குமரன் அணியுடன் மோதியது. இப் போட்டியில் 1.0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் பொம்மர்ஸ் அணியுடன் மோதியது. இப் போட்டியில் 1.0 என்ற கோல் கணக்கில் பொம்மர்ஸ் அணி வெற்றி பெற்றது.

மூன்றாவது போட்டியில் றோயல் அணியுடன் மோதியது. இப் போட்டியில் 2.0 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றி பெற்றது.

இரண்டு போட்டியில் தோல்வியடைந்தாலும் திருக்குமரன் பொம்மர்ஸ் அணிகளும் இரண்டு போட்டியில் தோல்வியடைந்தன. மூன்று அணிகளும் ஒரே புள்ளிகளை பெற்றமையால் 4 ஆவது போட்டியாக திருக்குமரன் அணியுடன் மோதியது. இப் போட்டியில் 2.2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலை தவிர்ப்பு உதையில் 4.2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அடுத்த போட்டியில் பொம்மர்ஸ் அணியுடன் மோதியது. இப் போட்டியில் 2.0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. (க)

## அரையிறுதிக்கு தகுதி

## டயமன்ஸ் அணி

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் மூன்றாவது அணியாக அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது வதிரி டயமன்ஸ்.

வதிரி டயமன்ஸ் அணி லீக் போட்டிகளில் இரு போட்டியில் வெற்றி பெற்று ஒரு போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

முதலாவது போட்டியில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியுடன் மோதியது. இப் போட்டியில் 2.1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் கொற்றாவத்தை அணியுடன் மோதியது. இப் போட்டியில் 1.1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

மூன்றாவது போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியுடன் மோதியது. இப் போட்டியில் 2.0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

டயமன்ஸ் 5 புள்ளிகளைப் பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. (க)



# மாகாண மட்ட கிரிக்கெட் தொடருக்கு யாழ்.வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்




இலங்கை கிரிக்கெட் சபையால் செவ்வாய் முதல் ஒகஸ்ட் முதலாம் திகதிவரை நடத்தப்பட்டு வரும் 23 வயதுக்கு உட்பட்டோருக்கான மாகாண மட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வட மாகாணத்திலிருந்து வீரர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களான கபில் ராஜ், யதுசன், யாழ்.இந்துக் கல்லூரி மாணவனான கஜானாத், யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவனான ரதீஷன், முல்லைத்தீவு, முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியின் பழைய மாணவன் அ.அஞ்சயன், மன்னார் புனிதவளனார் மகாவித்தியாலய மாணவனாகிய சுயன் மியாஸ், கிளிநொச்சி மத்தியகல்லூரி பழைய மாணவனாகிய ரஜீவன் இவர்களுடன் யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவன் டார்வின் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு விளையாடி வருகின்றனர்.

இப்போட்டியானது இலங்கையின் சர்வதேச போட்டிகள் கொழும்பு, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலுள்ள 9 மைதானங்களில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இப்போட்டிகளில் சர்வதேச போட்டிகளில் விளையாடிய லகிரு குமார, பினூர பெர்னாண்டோ மற்றும் அசித மதுசங்க ஆகிய வீரர்களும் இலங்கை அணியின் 19 வயதிற்கு உட்பட்ட அணியில் விளையாடிய பல வீரர்களும் எதிர்கால இலங்கை அணியில் விளையாடும் வாய்ப்பை பெறவுள்ள பல திறமையான இளம் வீரர்களும் இந்தத் தொடரில் விளையாடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-302)

## மதுரஸன் சதம்

## சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III அரை இறுதியில் ஓல்ட்கோல்ஸ்



சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III தொடரின் முதலாவது கால் இறுதிப்போட்டி கடந்த 09.07.17 ஞாயிற்றுக்கிழமை அன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ஸ் அணி, திருநெல்வேலி சி.சி. அணியை



85 ஓட்டங்களால் வெற்றிபெற்று அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணி 49.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 283 ஓட்டங் களைப் பெற்றது.

மதுரஸன்-127, நிரோஸன்-14, பிரியலக்ஸன்-14, குகன்-24, மாதவரூபன்-12, சீராளன்-36, ஜினுசன் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் திருநெல்வேலி சி.சி.சார்பாக சைலேஸ்-3, பிரபாவன்-2, சுரேந்திரன்-01, றொகான்-2, சிவராஜ்-01 இலக்கினை கைப்பற்றினர்.

284 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு களமிறங்கிய திருநெல்வேலி சி.சி.அணி 40.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது.

விதுன்-13, சிவராஜ்-38, பிரபாவன்-18, சைலேஸ்-60, கிருத்திகன் ஆட்டமிழக்காத 13 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் ஓல்கோல்ஸ் அணி சார்பாக பிரியலக்ஸன்-3, ஜினுஸன்-4, நிரோஸன்-2 இலக்குகளை கைப்பற்றினர். இப் போட்டியில் வெற்றி பெற்ற ஓல்கோல்ஸ் அணி 16.07.17 ஞாயிறுக்கிழமை அன்று சென்றலைட்ஸ் அணியுடன் எதிர் கொள்வர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# அரசாங்க அதிபர் கரப்பந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தை சங்கானை பிரதேச செயலகம் தனதாக்கிக் கொண்டது






கடந்த 11.07.2017 செவ்வாய்க்கிழமை அன்று ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற அரசாங்க அதிபர் கரப்பந்தாட்டப் போட்டிகளில் கோப்பாய் நெடுந்தீவு பிரதேச செயலகங்களைத் தவிர ஏனைய 13 பிரதேச செயலகங்களும் பங்குபற்றின.

கரவெட்டி அணியை 25:15, 25:16 என வென்ற சங்கானையும் சண்டிலிப்பாய் அணியை 25:21, 25:22 என வென்ற யாழ். மாவட்ட செயலக அணியும் இறுதியில் மோதியது.

இதில் சங்கானை பிரதேச செயலக அணி திறமையாக விளையாடி 25:19, 25:22, 25:23 என்ற புள்ளிகளினால் யாழ்.மாவட்ட செயலக அணியை வென்று சம்பியனாகியது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமை.அமரவீர...

ச்சர் மகிந்த அமரவீர இன்று பருத்தித்துறைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

பருத்தித்துறைமுக அபிவிருத்தியின் போது துறைமுகத்தில் இருந்து நடராஜர் கலையரங்கு வரையான பகுதி விஸ்தரிக்கப்படும் எனத தெரிவிக்கப்பட்டதாகவும் பின்னர் அது முனை வரை விஸ்தரிக்கப்பட்டமையால் அப்பகுதியில் உள்ள 300 வரையான மீனவர்களின் படகுகள் நிறுத்தும் இடங்கள் பறிபோகும் நிலையில் இருப்பதாக அப் பகுதி மீனவர் சங்கங்கள் அமைச்சருக்கு மகஜர் அனுப்பியிருந்தது.

இந்நிலையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு முனைக் கடல் தொழிலாளர் சங்கத்தில் வைத்து அப்பகுதி மீனவர்கள்ள அமைச்சர் மகிந்த அமரவீர சந்திக்கவுள்ளார்.

இதன்போது முன்னர் குறிக்கப்பட்ட எல்லை வரை அபிவிருத்தி செய்வதற்கு தமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதை அமைச்சரிடம் தெரிவிக்கவுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர். (செ-60)

## தலைக்கவசம் தயா...

த்தரணி இதன்போது கோரியுள்ளார்.

இதற்கமைய, இந்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஆகஸ்ட் 4ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மேலும், இதன்போது முகத்தை முழுவதும் மறைக்கும் தலைக்கவசத்தை அணிய பொலிஸார் விதித்துள்ள தடைக்கு, இடைக்கால தடை விதித்து, நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவு, எதிர்வரும் ஆகஸ்ட் 8ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## தந்தை, மகன் மீது...

சம்பவம் நேற்று புதன்கிழமை மாலை 06.00 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள யோகபுரம் மத்தி கிராமத்தில் தனது வீட்டுடன் நெல் குற்றும் ஆலையினை நடத்தி வரும் குடும்பஸ்தர் ஒருவர் அண்மையில் மோட்டார் சைக்கிள் விபத்துச் சம்பவத்தில் கால் பாதிக்கப்பட்ட நிலையில் வீட்டில் இருந்த வேளை பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் முகத்தை மூடியவாறு வாள்களுடன் வந்த மூன்று பேர் அவர் மீது சரமாரியாக வாள்வெட்டுத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இதன் போது அதனை தடுக்க முனைந்த பாடசாலை செல்லும் அவரது மகன் மீதும் வாள்வெட்டுத்தாக்குதலை மேற்கொண்டதுடன் கணவரையும், மகனையும் காப்பாற்ற முனைந்த குடும்பப் பெண் மீது தடிகளால் தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் யோகபுரம் மத்தி கிராமத்தைச் சேர்ந்த கண்ணன் என்றழைக்கப்படும் செல்வநாயகம்-பாஸ்கரன் (வயது -49) என்ற குடும்பஸ்தரும் மற்றும் அவரது மகனான பாஸ்கரன்-சுலக்சன் (வயது-15) என்ற பாடசாலை மாணவருமே படுகாயமடைந்த நிலையில் அயலவர்களால் மீட்கப்பட்டு மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற மல்லாவி பொலிஸார் புலன் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில் சம்பவ இடத்தில் இருந்து தாக்குதல் குழுவினால் கை விட்டுச் சென்ற தடயப் பொருட்களை மீட்டுள்ளதுடன் தப்பிச் சென்ற சந்தேக நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (செ-15)

## சித்திரவதைகள்...

குறித்த விடயம் தொடர்பாக ஏற்பாட்டாளர்களில் ஒருவரும் மனித உரிமை செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான ஜீத் குலசேகரம் ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை அரச பாதுகாப்பு படையினர் தமிழர்களை கடத்துவதும் சித்திரவதை செய்வதும் தற்போதும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. இந்த குற்ற செயல்கள் தொடர்ந்து முன்னைய ஆட்சிக் காலப் போர் நிலைத்துள்ளது. புதிய அரசு பதவிக்கு வந்து 30 மாதங்கள் கடந்தும் குறித்த வலையமைப்புக்களை கலைக்க தவறி விட்டன.

மிகப்பெரிய இராணுவ முகாம்களில் உள்ள சித்திரவதை கூடங்கள் குடிவரவு மோசடிகள் மனித கடத்தல்கள் அரசு சார்ந்த அமைப்புக்கள் மூலம் அச்சுறுத்தி பணம் பறித்தமை போன்ற விடயங்கள் இந்த குற்ற செயல்களில் அடங்கியுள்ளன.

இவ்வகையான குற்றங்கள் அரசால் ஊக்குவிக்கப்பட்டும் இந்த செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு அரசால் வெகுமதி வழங்கப்பட்டும் உள்ளது. எனவே அரசு இதற்கு ஒரு போதும் பொறுப்புக்கூறாது.

ஆகவே இந்த விடயங்களை ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தி நாளையதினம் (இன்று) அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளோம்.

இவ அறிக்கையை லண்டனில் வைத்து உண்மை மற்றும் நிதி திட்டத்தின் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா வெளியிடுவார் எனவும் அவர் தெரிவித்தார். (செ-9)

## ராஜித, எஸ்.பியின்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிணற்றிருக்கு நீர் செல்லும் நீரூற்றை மூடிய பின்னர் கிணறு இருந்தும் பிரயோசனமில்லை. அதுபோலதான் ஊழல் மோசடி விசாரணை செயலகத்தை மூடியபின்னர் பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவு செயற்படப்போவது இல்லை. அது மூடப்பட்டமைக்கு சமமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மக்கள் வழங்கிய ஆணையை இரண்டரை வருடங்களுக்கு பின்னர் அரசாங்கம் மறந்து செயற்படுவதன் நோக்கத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அதன் பின்னணியில் உள்ள அரசியல் நோக்கத்தை அறிந்து கொள்ள வேண்டும். ஊழல் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ள 14 நிறுவனங்கள் காணப்படுவதாகவும், ஆகவே இந்த செயலகம் அவசியமற்றது என்ற வகையிலும் அமைச்சரவை இணைப்பேச்சாளர் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் நடைபெற்ற ஊழல் மோசடி தொடர்பில் விசாரணை செய்வதற்கான நிறுவனங்கள் போதாமை காரணமாகவே ஊழல் மோசடி விசாரணை செயலகம் உருவாக்கப்பட்டது என்பதை அமைச்சர் ராஜித புரிந்துகொள்ள வேண்டும். தற்போது ஏன் அதனை மூடுவதற்கு தீர்மானித்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் காலத்தில் ஊழலில் ஈடுபட்டவர்கள் தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்களாக இருக்கின்றனர். அது தொடர்பில் விசாரணை செய்கையில் ராஜித சேனாரத்னவின் கோப்புகளும் வெளியில் வரும். அது தொடர்பிலான விசாரணைகள் நிறைவு பெற்று சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய காலம் கனிந்துள்ளது. இந்த சந்தர்ப்பத்திலேயே ராஜித உள்ளிட்டவர்களுக்கு வேறு நிறுவனங்கள் இருப்பது ஞாபகத்திற்கு வந்துள்ளது. நாளைய திருட்டிற்கு பாதை அமைக்கும் செயன்முறையே அது.

கடிதங்கள் மாத்திரமே பரிமாறப்பட்டதாக அவர் குறிப்பிடுகின்றார். அவ்வாறெனின் அதற்கு ஒரு அலுவலக உதவியாளர் போதும், ஏன் நிதி ஒதுக்கீடு செய்தார்கள், அதிகாரிகளை நியமித்தார்கள். அன்று இதனை உருவாக்கும் போது அவர்களுக்கு சரியெனப்பட்டது. இன்று அவர்களது கபட அரசியல் நோக்கத்திற்காக அதனை மூட தீர்மானித்துள்ளார்கள்.

சிறிய குற்றங்களே இந்த அலுவலகத்தின் ஊடாக விசாரணை செய்யப்பட்டதாக ராஜித கூறுகின்றார். மோதரை மீனவ துறைமுகத்தை குறைந்த கட்டணத்திற்கு தனியார் நிறுவனத்திற்கு வழங்கியதால் அரசாங்கத்திற்கு 47 கோடி நட்டம் ஏற்பட்டது. இதுவா சிறிய விடயம்? இது ராஜிதவிற்கு சிறிய சம்பவமாக இருக்கலாம்.

எஸ்.பி.திஸாநாயக்க உயர்கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் கொழும்பு 7இல் அமைந்துள்ள கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான வீடு ஒன்றில் வைக்கப்பட்டிருந்த வீட்டு உபகரணப் பொருட்களை அவரது மனைவியுடன் இணைந்து கொள்ளையிட்டுள்ளார். அதன் பெறுமதி 24 கோடி. இதுவும் ராஜிதவின் பார்வையில் சிறிய சம்பவமே.

ஆகவே இந்த விடயங்களை விசாரணை செய்யும் அலுவலகத்தை மூடுவதால் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். ஆகவே அலுவலகம் மூடப்படுவதால் அந்த வழக்குகளும் இல்லாது செய்யப்படும் என்றார். (செ-11)

# நடிகை ரம்பா யாழில்



(யாழ்ப்பாணம்)

தமிழ் திரையுலகின் பிரபல்ய நடிகை ரம்பா நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார்.

இலங்கை தமிழரான இந்திரன் என்பவரையே நடிகை ரம்பா 2010ஆம் ஆண்டு காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

இந்திரன் யாழ்ப்பாணம் சுதுமலைப் பிரதேசத்தை பிறப்பிடமாக கொண்ட நிலையில் நேற்றையதினம் நடிகை ரம்பா தனது கணவன் வீட்டிற்கு வருகை தந்தார்.

திருமணத்துக்கு பின்னர் இருவரும் கனடாவில் வாழ்ந்து வந்துடன் இவர்களுக்கு லாவண்யா, ஷாசா ஆகிய இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர்.

1993ஆம் ஆண்டு திரைக்கு அறிமுகமாகி பல ரசிகர்களின் கனவுக்கன்னியான ரம்பா ரஜினி, அஜித், விஜய் உட்பட பல பிரபல்ய நடிகர்களுடன் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# கூட்டணி அரசாங்கத்துக்குள் பிரச்சினைகள் சகஜம் - டிலான்

(கொழும்பு)

அரசாங்கத்திற்குள் அதிருப்திகள் இருந்த போதிலும் அரசாங்கத்தில் தொடர்ந்தும் இருப்பது என்றால் 41 பேரும் இருப்போம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் இருந்து விலகுவது என்றால், அனைவரும் விலகுவோம், ஆனால், விலகுவதாக இன்னும் தீர்மானிக்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 18 பேர தம்முடன் இணையப் போவதாக கூட்டு எதிர்க்கட்சியினர் கூறியிருந்தமை தொடர்பாக, நேற்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ராஜபக்ஷ ஆட்சிக் காலத்திலும் பலருக்கு கடும் அதிருப்திகள் இருந்தன. எனினும் கூட்டணியில் இருந்தனர்.

இதன் இறுதி முடிவாக மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தில் இருந்து வெளியேறி பொது வேட்பாளராக போட்டியிட்டார்.

அதேபோல் தற்போதைய அரசாங்கத்திலும் பல கட்சிகள் இணைந்துள்ளன. இதனால், பிரச்சினைகள் ஏற்படுவது சகஜம் எனவும் டிலான் பெரேரா குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் சிறப்பு விருந்தினராக லண்டன் பழைய மாணவர் மன்ற தலைவர் ஆ.வவானந்தன் கௌரவ விருந்தினராக ஜேர்மனி பழைய மாணவர் இ.தரிக்ஷன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ)



இலங்கையின் 27ஆவது இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஸ் சேனா நாயக்க பதவியேற்ற பின் மரியாதையின் நிமித்தம் நேற்று முன்தினம் 12ஆம் திகதி காலையில் அலரிமாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து வாழ்த்துக்களை பெற்று கொண்டமையை படத்தில் காணலாம்.

## இலங்கை-பங்களா...

த்த போதே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்த விஜயம் நீண்ட வரலாற்றைக் கொண்ட இலங்கை - பங்களாதேஷ் உறவின் மைல்கல்லாகுமென அவர் மேலும் தெரிவித்தார்.

தான் உள்ளிட்ட இலங்கை தூதுக்குழுவுக்கு பங்களாதேஷ் அரசாங்கம் வழங்கிய உணர்வுபூர்வமான வரவேற்புக்காக நன்றி தெரிவித்த ஜனாதிபதி பங்களாதேஷ் எமது நாட்டின் நேர்மையான நட்பு நாடெனவும், கடந்த போர்க்காலத்திலும், வெள்ளத்தின் போதும் பங்களாதேஷிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பை நன்றியுடன் நினைவு கூருவதாகவும் தெரிவித்தார்.

தான் பங்களாதேஷுக்கு புதியவர் அல்ல என குறிப்பிட்ட ஜனாதிபதி முன்னர் சுற்றாடல் அமைச்சராகவும், சுகாதார அமைச்சராகவும் பங்களாதேஷுக்கு மேற்கொண்ட விஜயங்களை நினைவு கூர்ந்தார்.

பிரதமர் ஷெயிக் ஹஸீனா அம்மையாரின் தலைமையின்கீழ் பங்களாதேஷ் அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பில் தனது பாராட்டுக்களை தெரிவித்த ஜனாதிபதி இரு நாடுகளுக்குமிடையில் முதலீட்டு மற்றும் வர்த்தக உறவுகளை விரிவுபடுத்துவதற்காக மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் ரவி கருணாநாயக்க, இராஜாங்க அமைச்சர் வசந்த அலுவிகார, பிரதியமைச்சர்களான மொஹான் லால் கிரேஷூ, நிசாந்த முத்துஹெட்டிகம உள்ளிட்டோர் பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சருடனான இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மைத்...

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஷீனா அம்மையாரின் அழைப்பின்பேரில் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று பிற்பகல் பங்களாதேஷ் தேசிய வீரர்களின் நினைவுத்தூபிக்கு மலரஞ்சலி செலுத்தினார்.

1971 ஆம் ஆண்டு பங்களாதேஷ் தேசிய சுதந்திரப் போராட்டத்தின் வீரர்களை கௌரவிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட இந்த இராணுவ நினைவுத்தூபி, தலைநகர் டாக்காவிலிருந்து சுமார் 34 கிலோமீற்றர் தொலைவிலுள்ள சவார் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு விஜயம் செய்த ஜனாதிபதியை பங்களாதேஷ் இராணுவ நலன்புரி விடயங்கள் தொடர்பான அமைச்சர், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் ஆகியோர் வரவேற்றனர்..

தனது விஜயத்தை நினைவுகூரும் வகையில் அங்கு மரக்கன்று ஒன்றினை நாட்டிய ஜனாதிபதி, விசேட பிரதி நிதிகள் நினைவுக்குறிப்பேட்டிலும் கையெழுத்திட்டார்.

அதன்பின்னர் ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக்குழுவினர் பங்களாதேஷின் பங்கபந்து ஞாபகார்த்த நூதனசாலையையும் பார்வையிட்டனர்.

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஷீனா அம்மையாரின் தந்தையாரான பங்கபந்து ஷேக் முஜிபர் ரஹ்மானின் ஞாபகார்த்தமாக அவர் வாழ்ந்த வீட்டில் இந்த நூதனசாலை பேணப்பட்டு வருகின்றது.

நூதனசாலைக்கு வருகைதந்த ஜனாதிபதியை பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஷீனா அம்மையாரின் புதல்வி வரவேற்றதுடன், விசேட பிரதிநிதிகள் நினைவுக்குறிப்பேட்டிலும் ஜனாதிபதி கையெழுத்திட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் பங்களாதேஷிற்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவென்பதனால் அவருக்கு கோலாகலமான வரவேற்பு அளிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் அந்நாட்டு அரசாங்கம் மேற்கொண்டிருந்தது.

நேற்று முற்பகல் பங்களாதேஷ் டாக்கா சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்த ஜனாதிபதியை பங்களாதேஷின் ஜனாதிபதி மொஹமட் அப்துல் ஹமீட் சிநேகபூர்வமாக வரவேற்றதுடன், 21 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு, இராணுவ அணிவகுப்புடன் கோலாகல வரவேற்பும் அளிக்கப்பட்டது. (செ-11)


விரைவு பொதிகள்-சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

(C-9054)

UK-550/=Kg மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில் DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500

அண்ணா அன் கோ

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

(C-9043)

லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா

STUDY in UK & EUROPE

செங்கன் நாடுகளில் கல்விகற்க 100% VISA உத்தரவாதம்

150 இற்கும் மேலான வீசாக்களை பெற்றுக்கொடுத்து சாதனை.

கடந்த(2016) வருடம் சென்ற மாணவர்களின் வீசாக்களினை நேரில் வந்து பார்வையிடலாம்.

மேல்மாகாண பிரபல ஆசிரியரின் வழிகாட்டலில் Europe Interview வகுப்புக்கள் நடைபெறுகின்றது

A/L 3 or 2 pass

திருமணம் முடித்து SPONSOR VISA இல் UK செல்பவர்களுக்கு IELTS (Life skills) EXAM இற்குரிய வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

நேரில் வந்து இலவச சட்ட ஆலோசனைகளை கேட்டு, வளமான எதிர்காலத்தை எட்டிப்பிடிக்க...

WORLD EDUCATION CONSULTANCY (சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகே) 0779265447, 0217200989

கிளை அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் (ஆரியகுளம், யாழ்ப்பாணம்)


# டெங்கு தாக்கம்;...

84 ஆயிரத்து 73 பேர்பாதிக்கப்பட்டுள்ளதுடன், 230 பேர் உயிரிழந்துள்ளதாக தொற்று நோய் தடுப்பு பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

அதில் டெங்கு நோயினால் மேல் மாகாணத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 19 ஆயிரத்து 234 பேர் நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை முதியவர்கள், சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொண்டவர்கள், குறைந்த நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவர்கள் மற்றும் நீரிழிவு நோயாளர்கள், சுவாச நோயாளர்கள், இதய, நுரையீரல், சிறுநீரகத்தொகுதி மற்றும் வளர்சிதை நோயாளர்களுக்கு சுகவீனம் ஏற்படும் பட்சத்தில் உடனடியாக 24 மணிநேரத்துக்குள் சிகிச்சை பெற வேண்டும் என்று சுகாதார மருத்துவ பிரிவினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# தபால் ஊழியர்கள்...

ள்ளது. புராதன தபாலகங்களை வெளிநாட்டவர்களுக்கு வழங்கும் யோசனையைக் கைவிடல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து தபால் தொழிற்சங்கங்கள் ஆரம்பித்திருந்த வேலைநிறுத்தம் அந்தப் பிரச்சினைகளுக்கு இரு வாரங்களில் தீர்வு வழங்கப்படுமென அரசாங்கம், அளித்த எழுத்துமூல உறுதி மொழியின் அடிப்புடையில் கைவிடப்பட்து.

எனினும், இருவார காலக்கெடு முடிவடையவுள்ளபோதிலும் இதுவரை அரச தரப்பிலிருந்து எவ்வித பதிலும் வராததால் தாங்கள் மீண்டும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக தபால் ஊழியர்கள் தொழிற்சங்க சம்மேளனம் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஏற்கெனவே இருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டபோது தங்களது பிரச்சினைகளுக்கு இரண்டு வாரங்களில் தீர்வு வழங்கப்படுமென அரசு உறுதிமொழி வழங்கியதையடுத்து வேலைநிறுத்தம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

எனினும், அரசு வழக்கம்போல தனது வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியுள்ளதால் மீண்டும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும், தபால் ஊழியர்கள் தொழிற்சங்க சம்மேளனத்தின் பேச்சாளர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். (செ-11)

# இந்திய மீனவர்கள்...

இரவு நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதுடன், கைதானவர்கள் நேற்றைய தினம் யாழ் மாவட்ட நீரியல் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இரண்டு விசைப்படகுகளின் மூலமாக பயணம் செய்தபோதே கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களின் 2 விசைப் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்கள் ஜகதாப்பட்டினம், புதுச்சேரி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மீனவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# தடை கோரி வழ...

பொருத்து வீடுகளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைப்பதற்கு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இந்தப் பொருத்து வீடுகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் காலநிலைக்கு பொருத்தமற்றவை எனப் பல தரப்பினரும் சுட்டிக்காட்டிய போதும் பொருத்து வீடுகள் அமைப்பதில் மீள்குடியேற்ற அமைச்சர் விடாப்பிடியாக உள்ளார்.

அதையடுத்தே தடை உத்தரவு கோரும் இந்த மனு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் பொருத்து வீடுகள் அமைப்பதற்கான எந்த நடவடிக்கைளும் முன்னெடுக்கப்படுமாயின் அதை முன்னெடுப்பதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# ஜெனரல் தயாவிட...

பாரிய மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகியுள்ளார்.

நேற்று மாலை 3.00 மணியளவில் அவர் கொழும்பிலுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு சமுகமளித்திருந்ததாக தெரியவந்துள்ளது.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இரும்பு துண்டுகளை வெட்டி அகற்றுவது தொடர்பில், கிடைக்கப் பெற்ற முறைப்பாடு குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்காகவே அவர் இவ்வாறு அழைக்கப்பட்டதாக, பாரிய மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், இந்த விடயம் குறித்த விசாரணைகளுக்காக அண்மையில், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் ஆணைக்குழுவில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# 135-வது நாளாக...

மேலும் தொடர்ச்சியாக போராடிவரும் மக்கள் ஜனாதிபதியை விரைவில் சந்திக்க போவதாக அறிவித்திருந்தனர். இந்நிலையில் நேற்றைய தினம் புதுக்குடியிருப்புக்கு வருகைதந்த பாராளுமன்ற குழுக்களின் பிரதி தலைவரும் த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனிடம் இதுதொடர்பில் வினவியபோது,

கேப்பாப்பிலவு மக்கள் தங்களுடைய பூர்வீக நிலங்களை விடுவிக்குமாறு கோரி நூறு நாட்களுக்கு மேலாக போராடிவருகின்றனர். அவர்களுடைய காணிவிடுவிப்பு தொடர்பில் நாம் பலமுறை பேசியிருக்கிறோம். நாடாளுமன்றத்திலும் இதுதொடர்பிலான ஒத்திவைப்பு வேளை பிரேரணை கொண்டுவந்து பேசினோம். ஆனால் அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை.

நான் கேப்பாப்பிலவில் போராடுகின்ற முக்கியமான சிலரை அழைத்து சென்று ஜனாதிபதியுடனும் பிரதமரோடும் சந்திப்பொன்றை ஏற்படுத்தி அவர்களுடைய குறைகளை கேட்டறிய வைக்கலாம் என்று எண்ணியுள்ளேன். அந்தவகையில் வருகின்ற நாடாளுமன்ற அமர்விலே கேப்பாப்பிலவில் போராடுகின்ற முக்கியமான சிலரை அழைத்து சென்று காணி விடுவிப்பு மேற்கொள்வதற்கான முயற்சியை மேற்கொள்ளவிருக்கிறேன்.

அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. அது நிச்சயமாக நிறைவு பெறவேண்டும். அந்தவகையில் நாங்கள் இந்த முயற்சியை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகிதம் ஜனாதிபதி, பிரதமரோடு மக்களை அழைத்து சென்று அவர்களுடைய சொந்த காணிகளை விடுவிப்பதற்கான முயற்சியை கைகூட வைக்கின்ற ஒரு முயற்சியாக அடுத்த வாரம் இதனை செய்ய இருக்கிறேன் என்றார். (செ-281)


நீங்கள் ஓர் இல்லத்தரசியா???

உங்களின் குடும்ப கனவுகளை நிறைவேற்றிக்கொள்ள, மேலதிக வருவாய் ஒன்றினைப் பெற இதோ ஓர் அரிய சந்தர்ப்பம். குடும்பத்தின் கனவுகளை நிறைவேற்றிய ஒரு சாதனைப் பெண்ணாக நீங்கள் திகழ முடியும்.

அழகுக்கலை இலவசப் பயிற்சி
- திகதி : 17.07.2017
- நேரம் : காலை 10.00 மணி
- இடம் : YMCA (யாழ். கச்சேரிக்கு முன்பாக, *Kandy Road*)



குறிப்பு
- முதலில் முற்பதிவு செய்யும் 50பேர் மாத்திரம்.
- அனுமதி இலவசம்
- வயது எல்லை (20 -60 வயது வரை)

தொடர்புகளுக்கு :

T.P No: 076 528 9947

(9792)

உங்கள் பயணத்தினை இன்றே ஆரம்பியுங்கள்...

FALC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு வகுப்புக்கள்

France இல் பயிற்றப்பட்ட விரிவுரையாளர் மூலம் கற்றுக் கொள்ளுங்கள்...

சர்வதேச டிப்ளோமா DELF A1,A2,B1,B2 வகுப்புக்கள் நடைபெறுகின்றன

2006 முதல் இன்றுவரை 1276 மாணவர்கள்...

இல. 40, பலாலி வீதி, (அரியகுளம்) 0779 789 456 021 221 7781

இல.181, முதலாம் மாடி, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973

IELTS Life Skills A1,B1 வகுப்புக்களும்.....

(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

A/L 2017 மாணர்களுக்கான

விசேட செயலமர்வு

| திகதி | பாடம் | பாடம் |
|---|---|---|
| 15, 16, 17 | I.C.T | S. மயூரதாசன், T. ஆயவன் |
| 15,16 | விவசாய விஞ்ஞானம் | M. விஸ்ணுதேவன், S. சானாஸ் |
| 15,16 | புவியியல் | S. ஸ்ரீகிருஸ்ணா, S. நிகன் |
| 15,16 | ஊடககற்கை (Midea) | S. கோணேசலிங்கம் |

நேரம் காலை 8.30 - 2.00

குறிப்பு:
- பாடங்கள் ஒவ்வொன்றும் அலகு ரீதியாக தெளிவுபடுத்தப்படும்
- எதிர்பார்க்கை வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாளும் பயிற்சிக் கையேடுகளும் வழங்கப்படும்.

கட்டணம் அறவிடப்படும்

அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்

தொடர்புகளுக்கு 0772487774

இன்றிலிருந்து முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்

(9783)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

புதிய பிரிவு

வட மாகாண ஆசிரியர் தெரிவுக்கு

பிரிவு I பிரதி சனி 11.00 - 3.30

பிரிவு II பிரதி ஞாயிறு 11.00 - 3.30

முகாமைத்துவ உதவியாளர்

சனி, ஞாயிறு 9.30 - 3.30 மணிவரை

வட மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்

சனி 10.00 - 2.00

SLAS

ஞாயிறு 9.00 - 4.00

முன்பள்ளி ஆசிரியர்

ஞாயிறு 11.00 - 3.00

சட்டமாணி நுழைவு

சனி 10.00 - 2.00

தொடர்பு: 076 688 3394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org